Not for sale

நவம்பர் - டிசம்பர் 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# இயேசு போதிக்க பயன்படுத்தின யுக்திகள்


கேள்விகள் • வாக்கியங்கள் • உவமைகள்

அற்புதங்கள் • உருவகப் பேச்சுக்கள்

எடுத்துக்காட்டுகளினால் கற்பித்தல்

### இயேசு போதிக்க பயன்படுத்தின யுக்திகள்

# ஆதியிலே



இயேசு தம்முடைய ஊழியத்தில் ஆறு முக்கியமான யுத்திகளைப் பயன்படுத்தினார். ஒவ்வொரு உபகரணங்களும், இந்தப் பிரதியில் ஆராயப்பட்டு, நம்முடைய வாழ்க்கைக்குப் பயன் படுத்தப்படும் முக்கியமான பாடங்களைத் தெரிவிக்கிறது. அவர் கொடுத்த மிகப் பெரிய மாதிரிகளை பின்பற்றுவதற்காக நாம் எடுக்கும் முயற்சிகளில் பொருத்தமாகவும், செயல்திறமிக்கதாகவும் இருக்கும் என்று நிச்சயிக்கிறோம்.

இயேசு தம்முடைய எதிரிகளிடமும், நண்பர்களிடமும் பேசும்போது பயன்படுத்தின அநேக கேள்விகளில் சிலவற்றை ***கேள்விகள்*** என்ற கட்டுரை காண்பிக்கிறது . ஏற்ற நேரத்தில் அருமையாக கேட்கப்படும் கேள்வி, இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்தைக் காட்டிலும் வல்லமையானது என்று இயேசு காட்டினார்.

***வாக்கியங்கள்*** என்ற கட்டுரை இயேசுவின் நாட்களில் உள்ள மத தலைவர்கள் பேசுவதற்கு பயன்படுவதின் திறமையுள்ள பேச்சுக்களுக்கும், இயேசு பேசின சத்தியத்திற்கும், ஞானத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் காட்டுகிறது. "அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்," (யோவா7:46) நம்மை சுற்றியிருப்போர் புரிந்துக்கொள்ளும்படி நாமும் இப்படிப்பட்ட வார்த்தைகளை பேச வேண்டும்.

இயேசுவின் விருப்பமுள்ள போதனை முறைகளில் ஒன்றான உவமைகளைப் பற்றி ***உவமைகள்*** என்ற தலைப்புக் காட்டுகிறது. தேவனுடைய "பெரிதான சித்திரங்களை" எளிதில் உணர்ந்துகொள்ளவும், கருகலான சத்தியங்களை பயனுள்ள முறையில், புரிந்துகொள்ளும் திறனோடு கற்பிக்கிறது. ஆனால் தற்காலிகமான ஆர்வத்தோடிருப்பவர்கள் எதுவும் கற்றுக்கொள்வதில்லை.

இயேசு செய்த ***அற்புதங்கள்***, ஜனங்களை அவரிடம் கவர்ந்தது. இயேசுவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் பின் ஆதி சபையின் வளர்ச்சியை ஊக்குவிக்க அப்போஸ்தலர்களால் அநேக அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டது. இப்படிப்பட்ட அற்புதங்களை இன்று நாம் நடப்பிக்காவிட்டாலும் "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்? இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் " ( யோவான் 50,12) என்று இயேசு கூறினார்.

வார்த்தைகளிலிருந்து மிக அழகாக உருவாக்கப்பட்ட சில சித்திரங்களை இயேசு ***உருவகப் பேச்சுகளில்*** எடுத்துக்காட்டுகிறார். விசேஷமாக "நானே" என்று ஏழு முறை தன்னை ஒப்பிடக்கூடிய ஒப்புமைகளை யோவான் சுவிசேஷத்தில் காணலாம். கடினமான கருத்துக்களை எளிமையாக புரிந்துக்கொள்வதற்கு, மனித உணர்வுகளின் மொழியே உருவகப் பேச்சாகும்.

தேவனுடைய சித்தத்தை செய்யும் போது, இயேசு எவ்வாறாக தன்னுடைய திறமையைப் பயன்படுத்தினார் என்பதை அவருடைய சமூகத்தில் இருந்திருந்தால் எவ்வளவு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக்கூடியதாக இருந்திருக்கக்கூடும் என்று ***எடுத்துக்காட்டினால் கற்பித்தல்*** என்ற நம்முடைய இறுதி கட்டுரை விளக்குகிறது. மேலும் அந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் கால்களை கழுவி, மறக்கமுடியாத மாதிரியை இயேசு முன்வைத்து சென்றார்.

இயேசுவை "அற்புதமான ஆலோசனை கர்த்தர்" என்று ஏசாயா, தீர்க்கதரிசனமாக கூறுகிறார் (ஏசா9:6) முழு விருப்பத்தோடு நம்முடைய வாழ்க்கையில் வந்து, நமக்கு போதிக்கும் இயேசு நமக்கொரு அற்புதமான ஆலோசகராக கொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை தேவன் இந்தத் தலைப்பின் வழியாக காட்டுகிறார். (வெளி3:20)

இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய நாம், விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய அவரை நோக்கும்படிக்கு சொல்லப்படுகிறது. (எபி 1:22, 1யோவ 6) தேவ குமாரனால் மட்டுமே நாம் கற்பிக்கப்படாமல், அவருடைய போதனையின் முறைகளை கட்டாயமாக நாம் கடைபிடிக்க வேண்டும். இப்படிச் செய்வதினால் "உள்ளான மனுஷனின்" வளர்ச்சி ஊக்குவிக்கப்படும். ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம்? அசைகிறோம்? இருக்கிறோம், (அப் 17:28)

### நவம்பர்-டிசம்பர் 2011

**ஆதியிலே** (இயேசு போதிக்க பயன்படுத்தின யுக்திகள்) . . . 31

**கேள்விகள்** . . . . . 32

இயேசுவின் கேள்விகள், தனிப்பட்ட நபர்களின் உள்ளுணர்வுகளைத் துரிதமாக செயலாற்றியது. சில வாக்கியங்கள் மறக்கப்பட்டாலும், நல்ல கேள்விகள் நீண்ட காலம் நம் நினைவில் தங்கும்.

**வாக்கியங்கள்** . . . . . . . 36

இயேசுவின் வாக்கியங்கள் பெரும்பாலும், வசனத்திலிருந்து எடுத்துரைக்கப்பட்டது. கேட்போரின் சிந்தையில் வல்லமையாகவும், அதிகாரத்தோடும் செயல்பட்டது.

**உவமைகள்** . . . . . . . . 42

சிறந்த கதைகள், கேட்கக்கூடியவர்களின் மனதை அசைத்து, அவர்களுடைய உணர்வுகளை நேரடியாக தட்டி எழுப்பும். உண்மைகள் மட்டுமே ஒருவரின் விசுவாசத்தை வளர்க்க இயலாது.

**அற்புதங்கள்** . . . 47


வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட விசுவாசத்தை கொடுக்க கூடிய வல்லமையை அற்புதங்கள் கொண்டுள்ளது. பெரும்பாலும் இயேசு தம்முடைய அற்புதங்களுக்குள் உவமைகளுக்கு ஒப்பான அடையாளங்களை உருவாக்கினார்.

**உருவகப் பேச்சுக்கள்**. . . . . 52

வசனங்கள், ஜீவனோடு வெளிப்படுவதற்கு வார்த்தைகளிலிருந்து உருவாக்கப்படும் சித்திரமே உருவகப் பேச்சாகும். இயேசுவை உருவகப்படுத்தும் "**நானே**" என்ற வார்த்தை ஏழு முறைகள் யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டுகளினால் கற்பித்தல்** . . . . 60

மற்றவர்களுக்கு கற்பிப்பதக்காக நம்முடைய ஆண்டவர் வல்லமையாக பயன்படுத்தும் மாதிரிகளை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசு பயன்படுத்தின' மாதிரிகளை நாமும் போதிப்பதற்கு பயன்படுத்துவோம்.



வல்லமையாக போதிக்கும் யுக்தி

# கேள்விகள்

தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை. மத் 22:45,46

Todd Alexander

பரிசேயர்கள் இனி ஒருபோதும் கேள்விகள் கேட்காதபடிக்கு இயேசுவின் கேள்விகள் மிக வல்லமையுள்ளதாய் இருந்தது. தங்களுடைய அஜாக்கிரதையினால் தங்களை சுற்றியுள்ளவர்கள் மத்தியில், அவர்கள் எதிர்பார்த்த கனத்தையும், மதிப்பையும் அவர்கள் இழந்துபோனார்கள்.

இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வையாளர்களுக்குள் ஐந்து விதமான ஜனங்கள் காணப்பட்டார்கள். 1, தேவக் குமாரனுடைய ஞானத்தைக் கண்டு தங்கள் இருதயங்களில் கடும் கோபம் கொண்டிருந்த பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள். 2, ஒவ்வொரு வார்த்தைகளையும் தாகத்தோடு கேட்கக் கூடிய சீஷர்கள். 3, பொதுவான வழிப்போக்கர்கள் 4, தேவனுடைய வல்லமை மிக சிறப்பாக வெளிப்படுவதை உண்மையில் ஆர்வத்தோடு எதிர்பார்த்த, கண்களுக்கு புலப்படாத எதிராளியாகிய சாத்தானும் விழுந்துபோன தூதர்களும். 5, நம்மைப்போல் கிறிஸ்துவின் வருங்கால சீஷர்கள். இயேசுவின் ஊழியமானது, சுவிசேஷ யுகம் முழுவதிலும் அனைவருடைய இருதயங்களையும் அசைக்கச் செய்யும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். (யோவா 17:20) இந்த வகுப்பாரும் சத்தியத்தோடு போராட வேண்டுமென்று இந்த எளிமையான கேள்விகளை இயேசு கேட்டார். மனதை உறுத்திக் கொண்டிருப்பதினால் இந்தக் கேள்விகளை நாம் எளிதில் புறக்கணிக்க முடிய வில்லை. தனக்கு முன் நேர்மையான இருதயங்கள் திறக்கக் கூடுமா என்று இயேசு எதிர்பார்த்திருந்தார்.

அங்குள்ள ஜனங்களின் இருதயங்களைக் குறித்து இயேசு நன்கு அறிந்திருந்தார். அவர்கள் என்ன சிந்தித்து கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களின் இலக்குகளையும், கனவுகளையும், இருதயத்தின் சிந்தனைகளையும் அவர் தெளிவாக உணர்ந்தார். கலகம் செய்யக்கூடிய துணிகரமான மனித ஆவியிலிருந்து மாற்றப்பட்ட தூய்மையான இருதயத்தை இயேசு தேடினார். ஐந்து வகுப்பார் மத்தியிலும், இக்கேள்விகள் தொடர்ந்து செயல்படுவதற்கு பரிசேயர்களிடம் நியாயமான கேள்விகளைக் கேட்டார்.

எல்லாக் கிரியைகளும் இரண்டு முறைகளில் உருவாக்கப்படுகிறது என்று இயேசு அறிந்திருந்தார்.

1. ஒரு சிந்தையை மனதில் விதைப்பது.

2. அந்தச் சிந்தையை செயல்முறைப்படுத்துவது (யாக் 1:14,15)

இந்தக் கேள்வியின் மூலமாக, ஒவ்வொரு பிரிவினருக்கும் சிந்தையில் விதையை விதைத்து விசுவாசத்தின் மூலம் கிரியைச் செய்வதற்கு வாய்ப்பளித்தார். இயேசுவின் எளிமையான கேள்விகள், மனித சுபாவத்தை ஜீவனுக்கு கொண்டு வந்தது. இயேசுவின் சீஷர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஆழமான சவால்களைச் சந்தித்தார்கள். மேலும், பயங்களும், சந்தேகங்களும் நிறைந்திருந்தது. எதிர்ப்பாராத சூழ்நிலைகளும் உண்மையான தோல்விகளையும் வாழ்க்கையில் சந்தித்தனர். ஆனால் இயேசுவின் கேள்விகள், இவர்களின் சந்தேகங்களை தீர்த்து, விசுவாசம் புதுப்பிக்கப்பட்டு தேவனுக்கேற்ற ஊழியம் செய்வதில் ஊக்கமளித்தது.

இயேசுவின் கேள்விகளில் சில சாதுர்யமான அல்லது நுண் அறிவுக்குரிய காரியங்கள் மறைந்திருந்தது. இயேசு கேட்ட அநேக கேள்விகள் நான்கு சுவிசேஷகங்களிலும் அப்போஸ்தலர்களின் புத்தகங்களிலும் பதிவுச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிப்படுத்தின புத்தகத்தில் இயேசு எந்த விதமான கேள்விகளும் கேட்கவில்லை. மேலும் சாத்தானைக் குறித்தும், விழுந்துப் போன தூதர்களைக் குறித்தும் அவர் எந்த விதமான கேள்விகளையும் கேட்கவில்லை.

இயேசுவின் கேள்விகள், வல்லமையான கேள்விகள் மனித சித்தத்தை சீர்பொருந்தச் செய்வதற்கு அல்லது பாவத்தைத் தொடர்ந்து செய்வதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. சீஷர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கான வாய்ப்புகளை இயேசுவின் கேள்விகள் உணரச் செய்தது. அவருடைய கேள்விகள் ஜனங்களின் இருதயங்களை அசையச் செய்து, மேலும் தங்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்தக்கூடிய அனுபவங்களுக்கு வழி நடத்தியது.

இயேசு, நமக்கும் அநேக கேள்விகளை வைத்திருக்கிறார். நாமோ அவர் சொன்ன வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால் அவர் நமக்காக வைத்த கேள்விகளைக் கவனியாமல் விட்டு விடுகிறோம். பொதுவாக வாக்கியங்களை எளிதில் மறந்துவிடலாம், ஆனால் நியாயமான கேள்விகள் நீண்டகாலம் அல்லது வாழ்நாள் முழுவதும் கூட நினைவில் தங்கலாம். உங்களுடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்களை சற்று திரும்பிப் பாருங்கள். அதில் எத்தனை சம்பவங்களில் கேட்கப்பட்டக் கேள்விகளுக்கு சரியான தீர்வு கிடைத்தது, என்று யோசித்துப் பாருங்கள். சீஷர்களின் வாழ்க்கையில் இயேசுவின் கேள்விகள் அவர்களின் இருதயத்தைத் தூண்டியது.

பரிசேயர்களின் இருதயங்கள் நேர்மையாக இருக்கவில்லை. அவர்களின் பொதுவான வாழ்க்கை தனிப்பட்ட வாழ்க்கையோடு இசைந்திருக்கவில்லை. விழுந்துப் போன மனுக்குலமாகிய நாம் ஓர் இரகசிய வாழ்க்கையையும் (தேவனுக்கும் நமக்கும் மட்டுமே தெரிந்த காரியங்கள்) ஒரு தனிப்பட்ட வாழ்க்கையையும்.

(நமது குடும்பத்திற்கு மட்டுமே தெரிந்த காரியங்கள். ஒரு பொதுவான வாழ்க்கையையும் நம்மை சுற்றியிருக்கும் உலகம் அறிந்திருக்கும் காரியங்கள்) வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பரிசேயர்கள், அமைதியான பொது வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். ஆனால் தங்களுடைய இரகசிய வாழ்க்கையில் கறைப்பட்டு இருந்தனர். இவர்கள் பேராசையுள்ளவர்களும் சுயநலமுள்ளவர்களுமாய் இருந்தனர். (மத் 23:27) இப்படிப்பட்ட மாயமாலத்தினால் இயேசுவின் கேள்விகள் அவர்களைக் காயப்படுத்தியது. "அநேகருடைய இருதயத்தின் சிந்தனைகள் வெளிப்படுத்தப்படும்" என்று முன் அறிவிக்கப்பட்டது.

பரிசேயர்கள், முதலில் தங்களுடைய இருதயத்தில் மனம் வருந்தாமால், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய முயற்சித்தார்கள். "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள்."( அப் 3:20) என்ற கற்பனையை அவர்கள் முதலில் கடைப்பிடிக்க வேண்டியதாக இருந்தது. செய்த பாவத்திற்கு மனவருந்தாமல் ஒருவரும் தேவனுடைய கற்பனையைக் கடைப்பிடிக்க முடியாது.

**எம்மாவூருக்கு நடைப்பயணம்**

" அவர்: **எவைகள் என்றார்.** அதற்கு அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார்."( லூக் 24:19) இரண்டு வார்த்தைகளைக் கொண்ட கேள்வியோடு இயேசு துவங்கிய சம்பாஷனை, நினைவில் நிற்கக்கூடிதாய் இருக்கிறது. இந்த இரண்டு சீஷர்களுக்கும் இயேசுவின் மரணம், புரிந்துக் கொள்ள முடியாத புதிராக தோன்றியது. இரட்சிப்பிற்குரிய எதிர்பார்ப்புகள் சுக்குநூறாக உடைந்தது. மீண்டுமாக ரோம ஆட்சியின் கீழ் இவர்கள் செல்ல வேண்டியதாய் இருந்தது. அவர்களோடு நடந்த இயேசு, அவர்களின் இருதயத்தை நன்கு அறிந்திருந்தார். இயேசு நம்முடைய சிந்தையையும் நன்கு அறிந்திருக்கிறார். இயேசு பொறுமையோடு இருந்து அவர்களை அந்நிலையிலிருந்து வெளியேற்றினார். இந்த அனுபவத்தின் வழியாக நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களுக்கும் தீர்வைக் காணலாம். இயேசு அவர்களின் சந்தேகங்களையும், பயங்களையும் கேட்க விரும்பினார். அதற்குப்பின் தம்முடைய பலியின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தி அவர்களின் விசுவாசத்திற்கு நங்கூரமாய் இருக்கக்கூடிய சில தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் அளித்தார். புல் உள்ள இடங்களில் மந்தையைப் மேய்ப்பது போல அவர்களை வழி நடத்தினார். அவர்களின் ஆவியைப் புதுப்பித்ததன் மூலம் 23 சங்கீதத்தை செயல்படுத்தினார். நம்மையும் அவர் நடத்தக்கூடிய மாதிரி, இங்கு காணப்படுகிறது.

நம்முடைய சந்தேகங்களையும், பயங்களையும் சிதறடிக்கப்பட்ட கனவுகளையும், கேட்பதற்கு அவர் காத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையின் கடுமையான அனுபவங்களின் மத்தியில் நடப்பதற்கு ஏற்ற வழிகளை ஆயத்தப்படுத்துவார். இந்தக் கடுமையான சூழ்நிலைகளின் மத்தியில் உண்மையான சமாதானத்தையும், நடப்பதற்கு தேவையான பலத்தையும் தருவதற்கு அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார். நம்முடைய உணர்வுகளைப் புரிந்துக்கொள்ளக்கூடிய உண்மையான பிரதான ஆசாரியன் அவரே. அவர் நம்மை அதிகமாக நேசிப்பதினால், நாம் அளிக்கக்கூடிய பதில்களை அவர் முன்னிருந்தும், அந்தக் கேள்விகளை நம்மிடம் கேட்கிறார். நாம் சத்தியங்களை கற்றுக் கொண்டு அதில் வழிநடத்தப்படுவதற்கு அவர் நம்மிடம் சில கேள்விகளை எழுப்புகிறார். நம்முடைய சில அனுபவங்களில் சில காரியங்களுக்கு தீர்வு காண இயலாமல் போய் விடலாம். ஆயினும் அவர் காட்டும் வழியில் நடந்துச் செல்லும் போது ஆவிக்குரிய கனிகளில் வளர்ச்சியடையலாம். காணக்கூடிய மற்றவர்களுக்கும் ஒரு சாட்சியின் ஜீவியத்தை முன் வைக்கலாம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் விரிவான செல்வாக்கு உண்டு, அதில் வாழக்கூடிய வாழ்க்கை மற்றும் தோல்விகள் நாம் எதிர்ப்பார்ப்பதை விட அதிகமான அளவுக்கு பரவிச் செல்கிறது. இயேசுவினால் அறிவிக்கப்பட்ட சத்தியத்தை பரிசேயர்கள் புரிந்துக் கொள்ளாத போது நிச்சயமாக எல்லா சீஷர்களும் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும். ஆனால் நிக்கோதேமு, அரிமத்திய ஊரானாகிய யோசேப்பு இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்.

இயேசுவின் கேள்விகள், சீஷர்களின் வெற்றிக்கரமான வளர்ச்சிக்கு வழிநடத்தியது. இயேசுவின் கேள்விகள் மூலம் எழுப்ப பட்ட வாக்கு வாதங்கள் சுயமாக சத்தியத்தைக் கண்டுப் பிடிக்கச் செய்தது. நேர்மையான இருதயங்களில் இயேசுவின் கேள்விகள் இப்படிப்பட்டக் காரியங்களைத் தூண்டியது.

நாம் இந்தப் பரிசேயர்களைப் போல் இருக்கவேண்டாம். அவர்களின் இருதயம் கடினமாக இருந்தது. இயேசுவின் கேள்விகளை நேர்மையான இருதயத்தில் பெற்றுக் கொண்டு இலகுவாக்கிக் கொள்வதற்கு, அவர்களுக்கு மனதில்லாதிருந்தது. இயேசு ஒவ்வொருவருடைய இருதயக் கதவுகளையும் தட்டினார். ஆனால் ஒருவரும் பதில் அளிக்கவில்லை. இராஜ்யத்தின் விதைகளை விதைத்து ஆவிக்குரிய கனிகளை வளர்ப்பதற்கு ஏற்ற நல்ல நிலத்தை இயேசு தேடுகிறார். இப்பொழுது இயேசு நம்முடைய இருதயங்களிலும் பேசுகிறார். தனிப்பட்ட முறையில் நம்மைப் போஷித்து, பராமரிக்கிறார். தேவையில்லாத களைகளைப் பிடிங்கி எறிகிறார்.

**ஐசுவரியமுள்ள வாலிபன்**

" அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே." (மாற் 10:18) தேவனுடைய நன்மைகளைக் காட்டிலும் இயேசு மிக நல்லவர் என்று அந்த வாலிபன் யோசித்திருக்கலாம். "நல்ல போதகரே" என்று இயேசுவை அழைத்ததின் நிமித்தம் ஒரு நெருக்கமான உறவு கொண்டிருப்பதைக் காண்பிக்க அவன்முயற்சித்திருக்கலாம். இந்த யுகம் முழுவதும் இந்தத் தொத்து வியாதி பரவியுள்ளது. இன்னும் நாம் எந்த விதமான தடுப்பு மருந்தையும் பயன்படுத்த வில்லை. இந்த ஒரு பிரச்சனையை நாம் நம்முடைய குடும்பங்களிலும், சபைகளிலும் சந்திக்கலாம். அதாவது மற்றவர்கள் நம்முடைய சட்டத்திட்டங்களைக்

கடைபிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். நாம் இப்படிச் செய்வதினால் அவர்கள் போராட்டத்தின் மத்தியில் சத்தியத்தை கைக்கொள்வதற்கான சுயாதீனத்தை நாம் கொடுக்க தவறிவிடலாம். ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள், உறுதியான விசுவாசம், ஆழமாக மேற்கொள்ள வழிவகுக்கும்.

மற்றவர்கள் மேல் நம்முடைய அமைப்பின் நம்பிக்கையை ஏன் கட்டாயப்படுத்தவேண்டும் ? அந்த ஐசுவரியமுள்ள வாலிபன் எதிர்பார்த்தது போல நாமும் திருப்திகரமான பதிலை எதிர்பார்ப்பது காரணமாக இருக்கலாம். தேவனுடைய வல்லமை மற்றவர்களின் இருதயங்களில் செயல்படுவதை அதிகமாக வெளிப்படுத்துவதைக் காட்டிலும், நம்முடைய மேன்மையான குணங்களை அதிகமாக வெளிப்படுத்த நாம் விரும்புகிறோம். நம்மை சார்ந்திருப்பவர்கள், சத்தியத்தோடு போராடி, ஜெயிப்பதற்கு நாம் அனுமதிக்க வேண்டும். இயேசுவின் வல்லமையினால் நல்ல முடிவுகளை காண்பதற்கு எடுக்கப்படும் தனிப்பட்ட முயற்சிகளில் நாம் எந்த விதத்திலும் குறுக்கிடக் கூடாது.

### அடிக்கடிக் கேட்கப்படும் கேள்வி

"நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்." (மத் 20:32) இது இயேசுவினால் அடிக்கடி கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்றாகும். யாக்கோபு, யோவான் மற்றும் பார்வையற்ற ஒரு பிச்சைக்காரனிடம் இந்த கேள்வி கேட்கப்பட்டது. பார்வையற்ற அந்த மனிதனின் இருதயத்தின் நோக்கம் செம்மையாக இருந்தது. வறுமையிலும், ஆதரவற்ற நிலையிலும், நொறுங்குண்ட மனதோடிருந்த அவன் இயேசுவினிடத்தில் தன்னை மிகவும் தாழ்த்தி, தன் மேல் இரக்கமாக இருக்கும்படி வேண்டினான். ஆனால் யாக்கோபும் யோவானும் சந்தர்ப்ப வாதிகளாக இயேசுவினிடத்திற்கு வந்தனர். இராஜ்யத்தில் வலது, இடதுப் புறம் அமருவதற்காக சுயநலமாக விண்ணபித்தார்கள். தங்களுடைய அறியாமையினால் இப்படிச் செய்தார்கள். தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்கு கிடைக்ககூடிய பலனைக் காட்டிலும் அதிகமான காரியங்களை எதிர்பார்த்தார்கள்.

இப்படியிருக்க இயேசுவினிடத்திலிருந்து நாம் இந்தக் கேள்விக்கு எப்படி பதில் அளிப்பது ? மேலும் நம்முடைய ஜீவியத்தில் நம்முடைய பதிலை எவ்வாறாக செயல்படுத்துவது ? நாம் நம்முடைய பாவங்களிலிருந்து விடுப்படுவதற்கோ, அல்லது நம்முடைய மாய்மாலத்தில் ஆழமாக அமிழ்ந்து போவதற்காக நாம் பெற்றுள்ள வல்லமையான திறமையை நம்முடைய சிருஷ்டிகரான இயேசு நன்கு உணர்ந்திருக்கிறார். இந்த வல்லமை சுய தீர்மானத்தின் வழியாகவும், நம்முடைய ஜீவனை ஆழ்ந்து பரி சோதித்து, இயேசுவின் இரத்தத்தினால் சுத்திகரித்தால் மட்டுமே கட்டுப்படுத்த முடியும். தெய்வீகம், சமாதானம், நேர்மை, நீதியின் மேல் தாகம் போன்ற மிக மேன்மையான சத்தியங்களை இருதயத்தில் ஆழமாக பதித்து வைத்தால் மட்டுமே பாவத்திற்கான உண்மையான மன வருந்துதலை வெளிப்படுத்த முடியும் (ஆதி 1: 26)

இந்தக் கேள்விக்கான பதிலை பரிசேயர்கள் எவ்வாறு பதில் அளித்தார்கள் ? அரசியல் ரீதியாக இவர்கள் ஊக்குவிக்கப்பட்டதை இயேசு அறிந்திருந்தார். நிக்கோதேமு அதிகமான செய்திகளை அறிந்து கொள்வதற்காக இரவு நேரத்தில் இயேசுவினிடம் வந்தார். இயேசு மரித்தபின் அரிமத்தான் ஊரானாகிய யோசேப்பு அவருடைய சரீரத்தின் மேல் அதிகமான அக்கறை காட்டினார். அது வரைக்கும் பகிரங்கமான மத தலைவர்களோடு இயேசுவுக்காக போராடுவதற்கு ஆயத்தமில்லாதவராக இவர் இருந்தார். அதே போல ஆலோசனை சங்க தலைவரின் மகள் வியாதிப்பட்டிருந்த நிலையில் தான், அவர் இயேசுவிடம் வந்தார்.

நமக்காக அவர் என்ன செய்ய முடியும் என்ற கேள்வி நம்முடைய தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவித்து, புதுப்பிக்க தேவையான திட்டங்களைச் செயல்படுத்த இயேசு வல்லமை கொடுப்பவராக இருக்கிறார். இந்தக் கேள்விக்கான விடையை நாம் இயேசுவினிடத்திலிருந்து பதில் அளிக்கையில், உண்மையில் நமக்கு தேவைப்பட்ட காரியங்கள் என்ன என்பதை சற்று சிந்தித்து பார்க்கலாம். சகல வித சாந்தத்தையும், நாம் பெற்ற எல்லா நன்மைகளுக்கும் நன்றியுள்ள இருதயத்தையும் மட்டுமே உண்மையில் நாம் எதிர்ப்பார்க்க முடியும். நம்முடைய விசுவாசத்தில் உறுதியாக இருப்போம், சுய நலமாகவும், நிர்விசாரமாகவும் இல்லாதபடிக்கு எச்சரிப்போடிருப்போம்.

### பேதுருவிடத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி

"இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்றார்."(யோவ 21:15) சிலுவை மரணத்திற்குப்பின் பேதுரு மிகவும் சோர்வடைந்திருந்தார். அவருடைய அனைத்து கனவுகளும் நொறுக்கப்பட்ட நிலையில், நொடிப் பொழுதில் ஆண்டவரை காட்டிகொடுத்ததின் நிமித்தம் அவர் இருதயத்தில் ஏற்பட்ட குற்ற உணர்வினாலும் அவர் மனம் அழுத்தப்பட்டிருந்தது. அவர் எல்லாவற்றையும் விட்டு விட்டு மீன் பிடிக்கும் தொழிலுக்குத் திரும்பி விட்டார். ஆனால் இயேசு பேதுருவை விட்டு விடவில்லை. அவர் பேதுருவை ஊக்குவித்து, சகலவிதமான பூமிக்குரிய சோர்வுகளிலுமிருந்து பேதுருவை ஓர் எளிமையான கேள்வியின் மூலம் தூக்கி எடுத்தார்.

தன்னுடைய ஆடுகளை மேய்ப்பதற்காக இயேசு தொடர்ந்து கேட்ட மூன்று கேள்விகளும், பேதுரு தன்னுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டிய விதத்தைக் காட்டியது. பேதுரு தன்னுடைய செயலாற்றும் முறைகளை மாற்ற வேண்டியதாக இருந்தது. இயேசு சொன்னது போல, மனிதர்களை பிடிப்பதற்காக ஒரு வாய்ப்பை பேதுரு பெற்றார். (மத் 4:19) சிந்தித்து பார்த்தால், பேதுரு கண்ட அற்புதத்தைக் காட்டிலும் இயேசுவின் வார்த்தைகளுக்கு பின் பேதுருவின் வாழ்க்கை மிக பயனுள்ளதாகவும், முக்கியமானதாகவும் இருந்தது. அதேபோல இயேசுவின் ஆடுகளை மேய்ப்பதற்கான அழைப்பிற்கு நாமும் கூட பதில் அளிக்கலாம்.

"என்னை நேசிக்கிறாயா ? " என்று மனதை ஆழமாக தொடக்கூடிய ஒரு கேள்வியை இயேசு பேதுருவிடம் கேட்டார். உலக பிரகாரமான காரியங்களை எந்த விதத்திலும் சம்மந்தப்படுத்தவில்லை, ஆனால் ஆவிக்குரிய நிலையை ஊக்கவித்து முழு உணர்வோடு, உயிர்த்தெழுந்த இயேசுவுக்குள் சந்தோஷத்தோடு

செயல்பட, அவரை முழுமையாக உற்சாகப்படுத்தியது. பேதுருவின் உள்ளுணர்வுகளை இயேசு ஆராய்ந்து, அவருக்குள் இருக்கும் சகல எண்ணங்களையும் அறிந்துகொண்டார். சுயத்தைச் சார்ந்த ஆண்டவரை மறுதலித்ததினால், வந்த பலனை உணரும்படியாக இயேசு ஒரு கேள்வியை மூன்று முறை வித்தியாசமான முறையில் கேட்டு பேதுருவை சிந்திக்க வைத்தார்.

இது வரையில் உணராத அளவுக்கு இயேசுவின் வல்லமையான கரங்களின் தொடுதலை பேதுரு அப்போது உணர்ந்தார். தெளிந்த நீர் ஓடையிலிருந்து மீண்டும் ஒரு முறை பேதுரு தாகம் தீர பருகினார். இக்காரியம் பேதுருவை அதிகமாக ஊக்குவித்தது. இக்கேள்வி பேதுருவின் வாழ்க்கையில் ஏற்ற நேரத்தில் கேட்கப்பட்டது. வல்லமையான ஊழியத்தை தூண்டிவிடு வதற்கு பொருத்தமான விளக்கம் கொடுப்பதற்கேற்றபடி அந்தக் கேள்வி அமைந்தது. நமக்குள் இப்படிப்பட்ட வல்லமையான ஊழியம் துவங்க எப்படிப்பட்ட கேள்வி இயேசுவால் கேட்க்கப்பட வேண்டும் என சிந்தியுங்கள்?

பொதுவான மற்றும் தனிப்பட்ட நியாயத் தீர்ப்புகளை நடத்தும்படியாக இயேசு தம்முடைய கேள்விகளை பயன்படுத்தினார். ஆகையால் ஒவ்வொரு கேள்விகளையும் நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவைகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இயேசுவின் கேள்விகளை கவனமாக புரிந்துகொண்டு, நம்முடைய இருதயத்தின் எண்ணங்களையும் நோக்கங்களையும், பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை முழுமையாக வெளிப்பட நாம் அனுமதிக்க வேண்டும்.

நம்முடைய மாம்சத்தை கட்டுப்படுத்தவும் இயேசுவின் கேள்வி நமக்கு உதவியாக இருக்கும். நாம் அந்தக் கேள்விகளை முழுமையாக நமக்குள் ஊடுருவ அனுமதித்தால் நம்மை முற்றிலுமாக நித்தியத்திற்கு மாற்றிவிடும். அவருடைய கேள்விகளுக்கான நம்முடைய பதில்கள், நம்முடைய வாழ்க்கையில் படிப்படியாக ஆவிக்குரிய வளர்ச்சியை ஏற்படுத்தும். நாம் இந்த உலகத்தை வித்தியாசமான முறையில் காணும்படி இயேசு விரும்புகிறார். மேலும், நம்முடைய சுய விருப்பத்தை ஒதுக்கி விட்டு, இந்த உலகத்தை காணும்படி இயேசு எதிர்ப்பார்க்கிறார். நம்முடைய அன்றாட போராட்டங்கள், பிரச்சனைகள் மத்தியில் இயேசு இந்தக் கேள்விகளை நம்மிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். உண்மை மற்றும் நேர்மையான இருதயத்தில் இயேசுவின் கேள்விகள் மிக ஆழமாக கிரியை செய்து வல்லமையான செயல்களை பிரதிபலிக்கிறது.

நம்முடைய இரகசிய வாழ்க்கையில், பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளினால் நாம் அதிக வல்லமையைப் பெறுகிறோம். சத்தியத்தை அடிப்படை யாக கொண்டு நம்முடைய நல்மனசாட்சியின் நிமித்தம் நம்முடைய கிறிஸ்துவுக்குள்ளான குணலட்சணங்கள் அதிகமாக வளர்ச்சி அடையும். நம்முடைய ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் இந்தக் குணங்கள் விருத்தியடைய, இந்தக் கேள்விகள் அருமையாக வாய்ப்பளிக்கிறது. இந்தக் குணலட்சணங்கள் நம்முடைய பொதுவான வாழ்க்கையில் பிரதிபலிக்க நம்மை முழுமையாக அனுமதிக்கிறது. மனுஷருக்கும் தூதர்களுக்கும் காட்சியாக இருக்கும் நம்மை, சிறந்த சாட்சி கொடுக்க தேவன் நமக்கு ஏற்ற வாய்ப்புகளைக் கொடுத்து, பரிசோதித்து நம்மை வழிநடத்துகிறார். (1கொரி 4:9)

**நாமும் கேள்விகளைக் கேட்கலாம்**

சத்தியத்தை போதிக்கும்போது, இப்படிப்பட்ட கேள்விகளைக் போதிக்கும் உபகரணங்களை நாம் கட்டாயமாக பயன்படுத்தவேண்டும். இதை நாம் எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்று இயேசு தெளிவாக நமக்கு காட்டியிருக்கிறார். மற்றவர்களின் மாம்ச செயல்களைக் தடுத்து, அவர்களை சிந்திக்க வைத்து, சிறந்த முறையில் கிறிஸ்துவுக்குள் மாறுவதற்கு பொருத்தமான கேள்விகளை கேட்க, இயேசு அநேக மாதிரிகளை நமக்கு முன் வைத்திருக்கிறார். நாம் பொருத்தமான கேள்விகளை கேட்கும்போது, கேட்பவர்கள் சரியான முடிவுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்குள் இருப்பதை நாம் எளிதில் மற்றவர்களுக்கு முன் வெளிப்படுத்தலாம். நம்முடைய குழந்தைகள், சகோதரர்கள், வாழ்க்கை துணைவர்கள், உடன் வேலை ஆட்கள் மற்றும் நம்முடைய எதிராளிகளுக்கும் கூட இந்தப் பிரமாணம் மிக நேர்த்தியாக பொருந்தும்.


நாம் சீஷர்களின் நிலையிலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து எம்மா ஊருக்கு போகும் வழியில் இயேசு நடந்து காட்டிய மாதிரியின் நிலைக்கு நம்முடைய நிலை உயர வேண்டும். மற்றவர்களின் சிதறி போன கனவுகளையும், பயங்களையும், சந்தேகங்களையும் வெளிப்படுத்துவதற்கு நாம் அனுமதிக்க வேண்டும். இயேசு இவர்களின் சகல காரியங்களையும் நிச்சயமாக உணர்ந்து கொள்வார் என்பதை அவர்களுக்குப் புரியவைக்கவேண்டும். நாம் இப்படி செய்வதினால், இயேசுவினிடம் ஈர்க்கப்பட்டு இயேசுவுக்குள் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ முயற்சிப்பார்கள்.

ஆகவே நாம் இரண்டு காரியங்களின் மேல் கவனம் செலுத்துவோம். நம்முடைய இருதயத்தில் உள்ள இரகசிய வாழ்க்கையில் உண்மையோடு இயேசுவின் கேள்விகளுக்குக் பதில் அளிக்கவேண்டும். அடுத்து, மற்றவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக நடப்பதற்கு சரியான கேள்விகளைக் கேட்கவேண்டும். அப்போது நாம் அவருடைய ஆடுகளை சரியான வழியில் மேய்க்க முடியும்.

" நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." (வெளி 3:20) நீங்கள் இயேசுவுக்காக உங்கள் இருதயத்தின் கதவுகளைத் திறந்து கொண்டிருக்கிறீர்களா ?

ஞானமுள்ள வார்த்தைகள்

# வாக்கியங்கள்



ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே அவருக்குப் பயந்திருந்தார்கள்.- மாற்கு 11:18

Jeff Mezera

இயேசுவின் வாக்கியங்களைப் புரிந்துகொள்வதற்கு கடினமாக இருந்தது. மேலும் அவருடைய வார்த்தைகள் அநேகருடைய வாழ்க்கை குறுக்கிட்டதினால், அவர்கள் இயேசுவை விட்டு சென்றார்கள். இயேசுவின் வார்த்தைகளைப் பின்பற்ற வேண்டுமானால், தனிப்பட்ட வாழ்க்கையையும், சமுதாய அந்தஸ்துகளையும், அரசியல் ஈர்ப்புகளையும் முற்றிலும் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டியதாக இருந்தது. பல விதமான சந்தேகங்களையும், கேள்விகளையும் நிவர்த்தி செய்யும், வகையில் நேரடியாகவும், வல்லமையோடும் இயேசு பேசினார். இயேசுவின் உபதேசத்தை எதிர்பார்த்த எளியோரிடம் ஒரு மேய்ப்பனை போல கனிவோடு பேசினார். அதே நேரத்தில் இஸ்ரயேலின் மதத் தலைவர்களிடம் மிக தைரியத்தோடு ஒரு நியாயாதிபதியை போலவும், ஒரு போர்ச்சேவர்களைப் போலவும் பேசினார்.

நாம் இயேசுவைக் குறித்து சிந்திக்கும் பொழுது இரட்சகர், மேசியா அல்லது ஒரு தீர்க்கதரிசியாக அவரை குறித்து நாம் யோசிக்கலாம். ஆனால் பொதுவாக போதகர் என்ற வார்த்தை நம்முடைய சிந்தைக்கு முதலில் வருவதில்லை. ஆயினும் தீர்க்கதரிசனமாக அநேக முறை இயேசு போதகர் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். (மத் 23:8, 10 :24,25, யோவா 13:13,14, யோவே 2:23)

இயேசு "ரபீ" என்று அழைக்கப்பட்ட போதிலும், அக்காலத்தில் ரபீகள் பயன்படுத்தின போதக முறைகளைக் காட்டிலும் இயேசுவின் போதனை முறைகள் வித்தியாசமாக இருந்தது. மனித சமூக சமத்துவத்தை மையப்படுத்தி உபதேசங்கள் போதிக்கப்பட்டதினால், பொது மக்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டார்கள். இதினிமித்தமாக இயேசுவின் காலத்தில் இருந்த ரபீகள் அவருக்கு முற்றிலும் பகைவரானார்கள். இயேசு ஆலயத்தில் போதித்தார். ஆயினும் அவருடைய புதிய விசுவாசத்தை பொது இடங்களில் (வயல்கள், மலைகள், கடற்கரை, கிராமங்கள்) எல்லா விதமான ஜனங்களிடமும் போதித்தார். இயேசு மற்ற போதகர்களைப் போல் இராமல் பாவிகளோடும், நல்லோரோடும், வரி வசூலிப்பவர்களோடும் கூடியிருந்தார். மேலும் சமுதாயத்தில் மதிப்பு பெறாத சில ஸ்திரீகளும் அவருக்கு நம்பகமான நண்பர்களாக இருந்தார்கள். குழந்தைகள் அனைவரும் அவரை நேசித்தார்கள்.

இயேசு செய்த ஊழியத்தின் துவக்க காலத்தில் அவர் மிகப் பெரிய கூட்டங்களில் போதித்தார். மிகப்பெரிய கூட்டங்களில் கவனத்தை நீண்ட காலமாய் இயேசு தம்மிடத்தில் வைத்திருந்தார். இதைக் குறித்து நமக்கு அநேக வசனங்கள் தெளிவாக விவரிக்கின்றன -

"ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே அவருக்குப் " (மாற் 11:18) "ஜனங்கள் இதைக் கேட்டு, அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். " (மத் 22:33)

"அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்."(மாற் 12:37)

" அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்."(யோவா 7:46)

அன்பு, இரக்கம் மற்றும் தூய்மையுள்ள விசுவாசத்தின் அடிப்படையில், ஒருவர் வாழ வேண்டிய விதத்தை இயேசு மலை பிரசங்கத்தில் கற்பித்தார். இந்தக் கோட்பாடுகள் அனைத்தும் தேவனுடைய இராஜ்யத்தின் சட்டங்கள் என்று சிலர் எண்ணுகிறார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் அன்பின் கோட்பாடுகள் செயலாற்ற படுவதினால், மலை பிரசங்கம் அந்த இராஜ்யத்திற்குரிய ஆயத்தக் கோட்பாடுகள் என்றும் சிலர் எண்ணுகிறார்கள். இது உண்மையாக இருப்பினும் உயர் தர மனித வாழ்க்கையை வாழ்வதற்காக இயேசுக் கற்பித்த வாக்கியங்களாக இருக்கிறது. போதகரும், எஜமானருமாகிய இயேசுவை பின்பற்றி, ஐசுவரியமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு காட்டப்பட்ட வழியாய் இருக்கிறது.

**மலைப் பிரசங்கம்**

ஞானமான மனநிலையில் உள்ளவர்கள் மற்றும் உணர்ச்சிவசப்படக்கூடிய மனநிலையில் உள்ளவர்வு களையும், இயேசுவின் உபதேசங்கள் சென்றடைந்தது. அவருடைய வாக்கியங்கள் சத்தியத்திற்குரிய நியாயமான திட்டங்களை மட்டும் வெளிப்படுத்தாமல், கேட்போர் அனைவருக்கும் ஆழமான விருப்பத்தை உண்டாக்கியதினாலே அவர்கள் உண்மையுள்ள ஒரு வாழ்க்கையை வாழ முடிந்தது. மலை பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் அனைவரும் உண்மையாக இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். மேலும் அனைவருக்கும் தேவனுடைய அன்பு உரியது என்றும், தெய்வீக அன்பை ஒருவருக்கொருவர் பிரதிபலிப்பதினால் அனைவரும் தெய்வீக தன்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற உறுதியை அளித்தது. இந்த அழகான சத்தியங்கள் அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டியதால் ஜனங்களின் வாழ்க்கை மறுரூபமானது. திரளான ஜனங்களுக்கு இயேசு ஆவிக்குரிய ஆகாரத்தைப் பகிர்ந்துக் கொடுத்திட்ட விதமானது அதிக மதிப்புக்குரியதாக எடுத்துரைக்கப்பட்டது. சத்தியத்தின் மேல் பசி தாகம் உள்ளவர்கள் திருப்தி அடைந்தார்கள். ஆனால் இதைவிட அதிகமாக எதிர்பார்த்தவர்களுக்கு மலைபிரசங்கம், தங்களுடைய

ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கான அழைப்பாக அமைந்தது.

**ஊழியம்**

தேவனுடைய சத்தியங்களை இயேசு மிக கவனத்தோடும் தெளிவாகவும் எடுத்துரைத்தார். தேவனுடைய சித்தம் செய்வதும், மற்றவர்களை தேவனுடைய சித்தம் செய்ய ஊக்குவிப்பதுமே இயேசுவினுடைய பிரதான விருப்பமாக இருந்தது. எடுத்துக்காட்டாக - "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்…" (யோவ 8:29) என்று கூடாரப் பண்டிகையின் போது இயேசு கூறினார். இப்படியாக நாமும் இயேசுவை போலிருக்க வேண்டும். நம்முடைய முழு இருதயத்தை பிதாவினிடம் ஒப்புக் கொடுத்து, அவருடைய வழிகளைத் தேட வேண்டும். தேவனுடைய சித்தத்தை உற்சாகத்தோடு செய்யும் போது நம்முடைய இரட்சிப்பிற் கேற்ற வழிகளை நமக்கு தெளிவாக போதிப்பதோடு மட்டும் அல்ல, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மூலம் நம்முடைய இருதயமாகிய தோட்டத்தில் நீதியின் கனிகள் வளர்ச்சி அடைந்து சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவோம்.

இயேசுவின் வார்த்தைகள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற பரிட்சையாக இருக்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகளை உண்மையும், ஆயத்தமான இருதயங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட அநேகர் அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை. இக்காரியத்தை கீழுள்ள வசனங்களில் நாம் காணலாம் - "இயேசு அவர்களை நோக்கி: ஜீவஅப்பம் நானே, …நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்றும் உங்களுக்குச் சொன்னேன். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன். அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார். நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து: " யோவ 6: 35-41)

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட அநேகர் முணுமுணுக்கத் துவங்கினார்கள். வனாந்தரத்தின் மன்னாவை கொடுத்த மோசேயைக் காட்டிலும் தாம் பெரியவர் என்பதை இயேசு அதற்குப் பின் விவரித்தார்.

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." (யோவ 6:51) ஜனக்கூட்டத்தின் மத்தியில் இயேசுவின் வார்த்தைகள் வாக்குவாதங்களை தூண்டிய போதிலும் (வசனம் 52) எந்த விதமான தடையுமின்றி இயேசு தம்முடைய விளக்கவுரையைத் தொடர்ந்தார். "அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். " (யோவ 6:53,54 )

போஜனத்தின் மேல் மட்டுமே நோக்கமாக இருந்தவர்கள் அல்லது இயேசுவின் வாக்கியங்களுக்கு நேரடியாக அர்த்தத்தை எடுத்துக் கொண்டவர்கள் அவருடைய வார்த்தைகளின் நிமித்தம் இடறல் அடைந்தார்கள். (யோவ 6:26) அவருடைய சீஷர்களின் பலவீனத்தை அறிந்த இயேசு "சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? " (யோவ 6:61)என்று கேட்டார். அதை தொடர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலை குறித்து தீர்க்கதரிசனங்களை உரைத்தார். " மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? "( யோவ 6:62) இந்தக் கடினமான வாக்கியங்களின் நிமித்தம் அநேக சீஷர்கள் இயேசுவை பின்பற்ற இயலாமல் பின்வாங்கி போனார்கள். (வசனம் 66) ஊடுருவிப்பாயும் அவருடைய வல்லமையான வார்த்தைகளினால், இயேசு அநேகரை இழக்க நேர்ந்தது. இந்த உலகத்தின் தொடர்பை துண்டித்து, ஆவிக்குரிய உலகத்தின் அறிவை பற்றிப் புரிந்துக் கொள்ள விரும்பும் ஜனங்களை மட்டுமே இயேசு கண்ணோக்கினார். இப்படிப்பட்டவர்கள் காலப்போக்கில் தங்களுடைய ஜீவனை பலியாக அர்பணிக்க வேண்டும் என்று போதித்தார். இயேசுவின் வாக்கியத்தை உண்மையுள்ள நோக்கத்துடன் கேட்ட ஒவ்வொருவரும் இருதயத்தில் முழுமையாக ஊக்குவிக்கப்பட்டார்கள். இயேசு தம்முடைய பன்னிரெண்டு சீஷர்களை நோக்கி "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" என்ற கேள்வியைக் கேட்ட பொழுது இக்காரியம் வெளியரங்கமாக தெரிந்தது "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே." என்று பேதுரு பதில் அளித்தார். (யோவ 6 :68, 69)

திரளான ஜனக்கூட்டத்தை வசப்படுத்திக் கொள்வதற்கு இயேசுவின் வார்த்தைகள் போதிக்கப்படவில்லை. நம்முடைய நோக்கங்களும் இப்படியாகவே இருக்கவேண்டும். பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கு இயேசு வந்தது போல, நாமும் இந்த உலகில் செயல்பட வேண்டும். தேவன் கொடுத்த முழுமையான ஆலோசனைகளைச் சொல்வதற்கு இயேசு தயங்கவில்லை. அதே போல நாமும் தயங்கக்கூடாது.

இயேசுவின் வார்த்தைகள் தேவனுடைய ஒளியை உலகத்திற்கு வெளிப்படுத்தியது. அவருடைய வார்த்தைகளைச் சரியான முறையில் பெற்றுக் கொள்பவர்களைத் தெய்வீகமான பாதையில் வழிநடத்தி, தேவனிடம் அழைத்துச் சென்றது, இப்படியாக முழுமையாக பலன் அளித்தது. நாமும் இப்படிப்பட்ட மாதிரியை பின்பற்ற வேண்டும்.

பார்வையாளர்களுக்கு ஏற்றவிதமாக இயேசுவின் வார்த்தைகள் வேறுபட்டது. பொது ஜனங்களுக்கு இயேசுவின் வார்த்தைகள் உற்சாகம் கொடுக்கூடிய தாகவும், ஊக்கம் அளிக்கக்கூடியதாகவும் இருந்தது. ஆனால் இஸ்ரயேலின் மத போதகர்களுக்கு அந்த வார்த்தைகள் இருதயத்தை பிளந்தது. "..இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்." (மத் 22:21) என்று வரி வசூலிப்பதை குறித்து இயேசு சொன்னார். பரிசேயர்கள், பெயர் சபை அமைப்புகளில் வழியாக நடப்பித்த, அநீதியான அதிகாரங்களினால் அழுத்தப்பட்ட பொது ஜனங்களின், இருதயத்தின் பாரங்கள் குறைந்தது. தேவனுடைய பிரமாணங்களை நீண்ட காலமாக நன்கு படித்திருந்த பரிசேயர்கள் சதுசேயர்கள் அதிகமாக அவைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். ஆயினும் இயேசுவின் வார்த்தைகளின் நிமித்தம் அவர்கள் ஏன் இடறினார்கள் ? ஏனெனில் ஒரு கூட்டமாக இருந்த அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை தேடாமல், மாம்சத்தின் முக்கியத்துவத்தைத் தேடினார்கள். ஆவிக்குரிய அறியாமையினாலும், இருதய கடினத்தினாலும், தங்களுடைய பிதாக்கள் செய்த தவறுகளை மீண்டும் மீண்டுமாக தொடர்ந்து நடப்பித்து, மறுபடியும் ஒரு "பாபிலோனின்" சிறையிருப்பில் தேசத்தை வழிநடத்தினார்கள். (தேசம் பாழாக்கப்பட்டது)

**மிகைப்படுத்தி பேசுதல் (hyperbole)**

சில சமயங்களில் சில காரியங்களை வலியுறுத்துவதற்காக இயேசு உயர்வுநவிற்சியானப் பேச்சை தைரியமாக பயன்படுத்தினார். " யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். "(லூக் 14:26) நம்முடைய வாழ்க்கையை அல்லது நம்முடைய குடும்பத்தை வெறுத்திட வேண்டும் என்று இயேசுவின் வார்த்தைகள் பொருள் கூறவில்லை. ஏனெனில் பெற்றோர்களை கனப்படுத்தாத பரிசேயர்களை இயேசு கடிந்துக் கொண்டதை குறித்து நாம் அறிந்திருக் கிறோம். (மாற் 7:9-13) அதேபோல நம்முடைய பகைவர் களையும், நம்மை உபத்திரவப் படுத்துபவர்களையும் நேசிக்க வேண்டும் என்ற கட்டளையை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். (லூ 6 :27) நாம் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பை முதலிடத்தில் வைக்க வேண்டும், அதற்குப் பின் நம்முடைய பூமிக்குரிய உறவினர்கள் மேல் அன்பு செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை குறித்து இயேசு இம்மாதிரியாக பேசினார். "உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். "என்று மற்றொரு முறை உயர்வுநவிற்சியானப் பேச்சை (மாற் 9:43-47) இயேசு பேசினார். சுயக்கட்டுப்பாடு நமக்குள் அதிகரிக்க வேண்டும். நம்மை பாவம் செய்வதற்குத் தூண்டும் காட்சிகளைக் காண வாய்ப்புகள் கிடைக்கும்போது, உடனடியாக நம்முடைய பார்வையை அந்த இடத்திலிருந்து நாம் அகற்ற வேண்டும். நம்முடைய விருப்பத்திற்குப் பதிலாக, நம்முடைய பரலோக பிதாவை சந்தோஷப்படுத்தக்கூடிய காரியங்களை நாம் தேடி அதன்மேல் கவனம் செலுத்த வேண்டும்.

அதே போல பாவம் செய்யத் தூண்டும் காரியங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். அந்நேரத்தை வெறுமையாக விட்டு விடாமல், தேவனுக்கு பிரியமான காரியங்களை நாம் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அப்போஸ்தனாகிய பவுல் சில காரியங்களை வரிசைப்படுத்தி - இதையே சிந்தியுங்கள் என்று கூறுகிறார். (பிலி 4 :8) நமக்குள் ஏற்பட்ட சோதனையை முற்றிலுமாக வேரோடு பிடுங்கப்படும் வரைக்கும் நாம் இந்தக் காரியங்களை சிந்திப்பதை விட்டு விடக்கூடாது. அந்நேரத்தில் எந்தக் காரியங்களையும் செய்யாதிருந் தாலும் நம்முடைய இலக்கை அடைய முடியாது. ஏனெனில் நாம் வெறுமையாக இருக்கும் நேரங்களில் மீண்டுமாக பாவ சோதனைகளுக்குள் விழுவதற்கு அநேக வாய்ப்புகள் ஏற்படலாம். ஆகவே தேவனுடைய நன்மையான காரியங்களைச் சிந்திப்பதில், நம்முடைய கவனத்தை செலுத்தும்போது, நாம் இடறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்து, அப்பொழுது காலங்கள் சரியாக பயன்படுத்தப்படும். மற்றும் ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம் - " நீ உன் கண்ணிலி ருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை

எடுத்துப்போட வகைபார்ப்பாய்."( மத் 7:3-5) மற்றர்வர்களின் குற்றங்களை காண்பதற்கு முன் நம்முடைய தவறுகளை கண்ணோக்க வேண்டும் என்பதை இதன் மூலம் இயேசு வலியுறுத்துகிறார்.

தெளிவான மனதோடு, இயேசுவின் இம்மாதிரியான அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளும்போது, நம்முடைய எண்ணங்கள் மாற்றப்படும்படிக்கு இருதயத்தில் நீங்கா கருத்துக்களை பதிவு செய்கிறது. நியாயத்தோடு பேசும் இவ்வகையான இயேசுவின் உணர்ச்சிமிக்க புதுமையான பேச்சுக்கள், நமக்குள் நிரந்தரமாக நிலைத்து நிற்கிறது. மேலும் மற்றவர்களிடம் சத்தியத்தை எடுத்துரைக்கக்கூடிய மாதிரியையும் நமக்கு காட்டுகிறது.

**ஐசுவரியமுள்ள வாலிபன், பேதுரு மற்றும் சகேயு**

" அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்." (மத் 19:16) என்று ஐசுவரியமுள்ள ஒரு வாலிபன் இயேசுவிடம் கேள்வி எழுப்பினான். கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று இயேசு பதில் அளித்தபோது, எந்தக் கற்பனைகள் என்று மறுபடியும் ஒரு கேள்வியை எழுப்பினான். இது ஒரு விசித்திரமான கேள்வியாக இருந்தது. ஏனெனில் கற்பனைகள் அனைத்தும் கடைபிடிப்பதற்காக கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே "பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா..." (மத் 19:21) என்று இயேசு சொன்னார். ஓர் எளிய வாக்கியத்தின் மூலம் பூரண நிலையை அந்த வாலிபன் பெறுவதற்கு ஒரு புதிய அளவு கோலை இயேசு கொடுத்தார். ஆயினும் இயேசுவின் வார்த்தைகளுக்குள் இருந்த ஆழமான பொருளை, புரிந்து கொள்ள முடியாத அந்த வாலிபன் துக்கத்தோடு திரும்பி விட்டான்.

இதன் விளைவாக தொடர்ந்து வந்த பேதுருவின் கேள்வி சற்று கர்வமிக்கதாகவே தோன்றியது. "அப்பொழுது, பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்." (வசனம் 27) முக்கியமாக "எங்களுக்கு என்ன கிடைக்கும் ?" என்று பேதுரு கேட்டார். தற்காலிகமான தோல்விகளை சந்தித்த தம்முடைய சீஷர்கள், சத்தியத்தை உணரும்படியாக "மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத் 19:28) என்று இயேசு பதில் அளித்தார். இயேசு தன்னை பின்பற்றக் கூடியவர்கள் பெறப் போகிற பலனை மறுபடியும் வலியுறுத்துவதோடு கூட முழு மனுக்குலத்திற்கும் சொல்லக்கூடிய நற்செய்தியை பேதுருவினிடம் கூறினார். அதற்குப் பின் "ஒரு பணத்தைப்" பற்றிய உவமையைக் குறித்து இயேசு பேசினார். அந்த உவமையில் உள்ள ஒரு பகுதி தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. "என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனா யிருக்கலாமா? என்றான்."(மத் 20:15) தனித்துவமுள்ளக் குணலட்சணங்கள் உள்ள தனிநபர்களை தேவன் தேடுகிறார். அதற்குப் பின் அவருடைய விருப்பத்தின் படி பரிசளிக்கிறார். நாம் பேதுருவைப் போல் பரிசுகளையும் வெகுமதிகளையும் குறித்து கவலைப்படாமல் தேவனுடைய சித்தத்தை மட்டுமே செய்ய நாட வேண்டும்.

துவக்க நிலையில் சீஷராக இருந்த பேதுரு தேவனுடைய சித்தத்தை செய்யும் ஆர்வத்தோடு, பின்விளைவுகளை பற்றி உணராமல் அநேக காரியங்களைத் துரிதமாக செய்தார். இவைகளை மனதில் கொண்டு, இயேசு பதில் அளித்தார். முதலில் உயிர்த்தெழுதலின் போது, அப்போஸ்தலர் செய்ய வேண்டிய நியாயத்தீர்ப்பின் வேலைகளைக் குறித்து பேதுருவிடம் நினைப்பூட்டினார். இரண்டாவதாக பேதுரு தன்னுடைய சிந்தனையின் வரம்புகளை சற்று விரிவாக்கும்படியாக ஓர் உவமையை சொல்லி ஊக்குவித்தார். இந்த இரண்டு காரியங்களை, இணைத்து கூறி, ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலுக்கு ஏற்றபடி அவருடைய மனக்கண்களைத் திறந்தார். உண்மையில் சத்தியத்தின் பாதையில் நடப்பதற்கும் பல காரியங்களை செய்வதற்கு ஊக்குவிப்பதற்கும் பதிலாக முழு விசுவாசத்தோடு கிரியை நடப்பிக்கக்கூடியவர்களை இயேசு தெரிந்துகொண்டார். பேதுரு இப்படிப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார். இயேசு இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு, பேதுருவின் விருப்பத்தின்படி பதில் அளித்து, அவருடைய புரிந்துகொள்ளுதலை அதிகரித்தார். பேதுருவுக்கு தேவையான பதிலை மட்டும் கொடுக்காமல், இன்னும் பெரிய காரியங்களை நடப்பிப்பதற்கு அதிகமாகவும் ஊக்குவித்தார்.

இப்படி, உடனடியாக செயல்படுவதற்கு பேதுரு மட்டுமல்ல, சகேயுவும் நமக்கு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறார். ஆவிக்குரிய விதைகளை விதைப்பதற்கு ஆயத்தப்பட்டிருந்த ஏற்ற இருதயம், இயேசுவின் அழைப்பிற்கு உடனடியாக இணங்கியது. இப்படிப்பட்டவர்களை இயேசு தேடி வந்தார். "சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். (லூக் 19:8) இருதயம் நிரம்பி வழியக்கூடிய விசுவாசத்தோடும், உற்சாகத்தோடும் கிரியைகளை உடனடியாக நடப்பிப்பதற்கு - பேதுருவும், சகேயுவும் மிக நேர்த்தியான எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். இவ்வாறாக இயேசு அவர்களை ஊக்குவித்து, அவர்களுடைய இருதயத்தின் நோக்கங்களை சரியான வழியில் செயல்படுவதற்கு

ஏற்றவாறு பல வார்த்தைகளினால் அவர்களை வழிநடத்தினார்.

பரிசேயர்களை குறித்து விமர்சிக்கும்போது இம்மாதிரியான சொற்களை இயேசு அதிகமாக பயன்படுத்தினார். "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்." (மத் 23:23,24) ஆண்டவரிடம் காணப்பட்ட நீதி, இரக்கம் மற்றும் விசுவாசம் போன்ற பரிபூரணமான குணங்கள் பரிசேயர்களிடம் மிக குறைவாக காணப்பட்டது. இந்தக் குணங்களை வளர்த்துக்கொள்ளும்படி ஆண்டவர் மீகா தீர்க்கதரிசியின் வழியாக எச்சரித்திருக்கிறார். "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." (மீகா 6:8)

மீகா புஸ்தகத்தில் காணப்படும் இப்பகுதி, ஆவிக்குரியப் பிரமாணங்கள் அனைத்தையும் உள்ளடக்கி வைத்திருக்கிறது. உண்மையில் நீதியை நடப்பிப்பதே தேவனுக்கேற்றதாகும். ஆனால் சரியான மனநிலையிலும் நோக்கத்தை கொண்டவர் மட்டுமே இதை நடப்பிக்க முடியும். ஆனால் பரிசேயர்களிடம் இக்குணங்கள் காணப்படவில்லை. அவர்களின் வெளிப்படையான கிரியைகளினால் தொடர்ந்து குறுட்டாட்டத்தில் இருந்தார்கள். அர்த்தமற்ற பாரம்பரியத்தையும் சடங்காச்சாரத்தையும் நிறைவேற்றுவதில் மிகவும் கவனமாக இருந்தார்கள். அதே நேரத்தில் மற்றவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைசெய்து அவர்களின் பேச்சு திறமையினால் தங்களுடைய சுய லாபத்திற்குரிய காரியங்களை மட்டும் போதித்தார்கள். இப்படியாக தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி விட்டோம் என்ற சிந்தையினால் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டு தங்களுடைய இருதயமாகிய தோட்டத்தில் தவறுகளாகிய களைகளைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்டக் காரியங்களை செய்யாதபடிக்கு நாம் எச்சரிப்பாக இருக்கவேண்டும். முதலில் நம்முடைய போராட்டம் இந்த மாம்சத்தோடு, என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே சத்தியத்தின் பட்டயத்தை கொண்டு நமக்குள் இருக்கும் அசுத்தமானவைகளை முதலில் வெட்டி எறிவோம். நம்முடைய ஆண்டவரோடு நெருங்கிய தொடர்பு வைத்தவர்களாக நமக்குள் நீதி, இரக்கம், மற்றும் விசுவாசத்தை தேவனுக்குள் வளர்த்துக் கொள்வோம். நம்மை நாம் இந்த உலகத்தை விட்டுப் பிரித்து, பரிசுத்தமான காரியங்களில் ஈடுபட்டு, நமக்குள் முன்னதாகவே துவங்கப்பட்ட நற்கிரியைகளை நம்முடைய முடிவு பரியந்தமும் தொடர்ந்து நடப்பிப்போம்.

**சிலேடைப்பேச்சு**

பரிசேயர்களை கடிந்து கொள்வதற்கு இயேசு சிலேடைப் பேச்சுக்களை பயன்படுத்தினார். வித்தியாசமான இரண்டு வார்த்தைகளினால் குறிப்பிட்ட காரியத்தை எடுத்துரைப்பதாகும். "பொதுவாக சிலேடைப் பேச்சு" ஆங்கிலத்தில் காணப்படுவதில்லை. ஆனால் ஆராமிக் மொழியில் இந்தப் பேச்சுகளுக்கு ஏற்ற வார்த்தைகள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. ஒட்டகம் மற்றும் கொசுவின் அளவுகளை குறித்து மட்டும் இயேசு பேசவில்லை. அராமிக் மொழியில் "ஒட்டகம்" மற்றும் "கொசு"என்ற இரண்டு வார்த்தைகளும் ஏறக்குறைய ஒரே விதமாக உச்சரிக்கப்பட்டது. (கொசு என்பதற்கான அராமிக் சொல் கால்மா (galma) அடுத்து ஒட்டகம் என்பதற்கான அராமிக் சொல் காம்லா (gamla) ) - Robert H/ Stein, The method and message of Jesus Teaching,1994.p. 13.

பேதுருவோடு பாறையை ஒப்பிட்டு பேசும்போது இயேசுவின் வார்த்தை ஜாலத்தை காணலாம்.

"பேதுரு மற்றும் பாறை" என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் கேபா என்ற ஒரே அராமிக் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது. - ibid, p13.

யோவான் 3:8ம் வசனத்தில் ஆவியைக் குறித்து பேசும்போதும் இப்படிப்பட்டச் சிலேடைப் பேச்சில் இயேசு பேசினார்.

"காற்று மற்றும் ஆவி" என்ற வார்த்தைகளுக்கு பயன்படுத்தப்பட்ட ஒரே அராமிக் வார்த்தை ரூவா (ruha) - ibid. ,p. 14.

**ஒப்புமைகள் (Similies)**

இரண்டு வித்தியாசமான வார்த்தைகளை கொண்டு இரண்டு காரியங்களை இணைப்பதே ஒப்புமைகள் ஆகும். இயேசு கூறிய அநேக ஒப்புமைகள் உவமைகளாகவோ எடுத்துகாட்டுகளாகவோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

* "ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்." (மத் 10:16)

* " அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்." (லூக் 17:6)

* " எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர் களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று." (லூக் 13:34)

**வசனத்தில் உள்ள எடுத்துக்காட்டுகள்**

இயேசு வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டபோது அவர் சாத்தானிடம் நேரடியாகவும், தெளிவாகவும் பேசினார். அவர் ஏதோ ஒரு கேள்வியையோ, உவமையையோ, சிலேடைபேச்சையோ பேசவில்லை. எந்த ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. மிக எளிமையான வசனங்களை மட்டுமே குறிப்பிட்டார். தம்முடைய சொந்த அதிகாரத்தை வெளிப்படுத்துவதை காட்டிலும் எந்த எதிர்பார்ப்புகளுமின்றி பிதாவின் சித்தத்தை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை பொறுப்புள்ளவராக வெளிப்படுத்தினார். குறிப்பிட்ட வசனங்களை அவர் நேர்த்தியாக தேர்வு செய்து, சாத்தானுடைய தந்திரமான வாக்குவாதங்களை பகிரங்கமாக கண்டனம் செய்தார். சாத்தானுடைய தாக்குதல்களுக்கு நாமும் இப்படியாக வசனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற பாடத்தை கற்றுக் கொள்கிறோம். ஏனெனில் தேவனுடைய வசனங்கள் அவருடைய வல்லமையினாலும், வெளிச்சத் தினாலும் நிறைந்திருக்கின்றது. அதுவே நம்மை பிரகாசிக்கக்கூடிய ஒளியாய் இருக்கிறது. நெருக்கமான பாதையில் சோதனைகளை சந்திக்கும்போது, நாம் நடக்க வேண்டிய நீதியின் பாதையை, நமக்குள் சுடர் விட்டு பிரகாசிக்கும் சத்தியங்கள், காட்டுகிறது.

மரணம் மற்றும் சாபத்திற்குள் உபத்திரவம் பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்களின் தேவைகளுக்கு ஏற்றபடி இயேசு பிரசங்கிக்க தொடங்கினார். இதற்கு ஆதாரமாக ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். " கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு... " (லூ 4:18,19)

பழைய ஏற்பாட்டில் இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும், தீர்க்கதரிசிகளாகவும் பிரித்தெடுப்போரை தேவன் அபிஷேகித்தார். அல்லது தம்முடைய வேலைகளுக்காக நியமித்தார் என்று சொல்லலாம். ஆனால் தேவன் இயேசுவை இவைகளுக்கு அப்பாற்பட்டு வைத்திருந்தார். ஏனெனில் அவர் தூது கொடுக்க மட்டும் வராமல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாய் வந்தார். உடல் ரீதியான குறைகளை மட்டும் அவர் சுகப்படுத்தவில்லை. இஸ்ரயேலர்களின் ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலை தெளிவு படுத்துவதற்கும் கடினமான இருதயங்களை மாற்றுவதற்கும் வந்தார். நாமும் இப்படிப்பட்ட வேலைகளை செய்வதற்கு எல்லா காரியங்களிலும், புரிந்து செயல் பட வேண்டும். வாக்குத்தத்தங்களுக்கு உடன் பங்காளிகளாவும், நம்முடைய சரீரங்களை பலி செலுத்தக் கூடியவர்களாக இருக்கும் நாம் இயேசுவின் மாதிரியை பின்பற்றி, நொறுங்குண்ட இருதயங்களை சொஸ்தபடுத்தி ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலை மற்றவர்களிடம் ஊக்குவிக்க வேண்டும்.


**ஜெபங்கள்**

துவக்கத்தில் மலை பிரசங்கத்தில் இயேசு பேசின வார்த்தைகளும், இறுதியில் சீஷர்களோடு அவர் கெத்சமெனே தோட்டத்திற்கு போகும் போது பேசின வார்த்தைகளும் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இயேசு பாடுபடுவதற்கு முன் கொடுக்கப்பட்ட இறுதி செய்தி இதுவே, என்பதை உணர்ந்தவராக மனதில் பதியக்கூடிய வார்த்தைகளை பேசினார். தம்முடைய கிரியைகளை முடித்த சந்தோஷத்திலும், தேவன் எதிர்பார்த்தபடி அவருடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றின மகிழ்ச்சி யோடும் மற்றும் கள்ள போதகர்களை குறித்து சீஷர்களுக் கும் நமக்கும் எச்சரிப்புகளை கொடுத்துவிட்டு அவர் சென்றார். அவருடைய சீஷர்களை தம்முடைய பிதாவின் பாதுகாப்பில் கையளித்தார். மேலும் நம்முடைய பாதுகாப்பிற்கு மட்டுமல்ல தெய்வீக அன்பிலும், ஐக்கியத்திலும், வளர்ச்சி அடைவதற்கு நமக்காக வேண்டுதலும் செய்தார்.

இயேசு பேசின வார்த்தைகளும், அவர் ஜெபித்த ஜெபங்களும் அவரோடு இருந்த பன்னிரெண்டு சீஷர்களுக்கு மட்டுமல்ல, முழு சுவிசேஷ யுகத்தில் உள்ள அவருடைய சரீர அங்கத்தினர்களுக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது. இரட்சிப்பு, ஞானம், வழிநடத்தல் போன்ற சகலவற்றையும் குறித்து இயேசுவின் வார்த்தைகள் நமக்கு போதிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அவரைப்போல் ஜீவிக்கவும், போதிக்கவும் அவரை பின்பற்றுவதற்கும் சிறந்த ஒரு மாதிரி நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

சூழ்நிலைகளும் அதன் அர்த்தங்களும்

# உவமைகள்



அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.
- மத்தேயு 25:1

இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு மூன்று நாளைக்கு முன்பு பரலோக இராஜ்யத்திற்குள் துரிதமாய் பிரவேசிக்க வேண்டும் என்ற முக்கியதுவத்தைக் குறித்து பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமையைக் கூறினார். இதன் மூலம் அவருடைய சீஷர்கள் நற்கிரியைகளை செய்ய அவர்களை ஊக்குவித்து, தூண்டினார். தாங்கள் புத்தியுள்ள கன்னிகைகளா ? அல்லது புத்தியற்ற கன்னிகைகளா ? என்பதை உடனடியாக சீஷர்கள் உணர்ந்துக் கொண்டு கிரியை செய்ய வேண்டுமென்று இயேசு விரும்பினார். சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நாற்பத்தைந்து உவமைகளில் பதினொரு உவமைகளை, கடைசி வாரத்தில் இயேசு கூறினார். பிரபலமான அவருடைய போதனை முறைகளை அவர் தம்முடைய ஊழியத்தின் போது பயன்படுத்தி இருந்தாலும் இயேசு மிக விருப்பத்தோடு போதிப்பதற்கு, இந்த உவமையின், முறையை தேர்வு செய்தார். இறுதியாக இயேசு தம்முடைய இருப்பிடத்திற்குச் செல்லும் நேரத்தில் தேவன் கொடுத்த செய்தியை உவமைகளாக சீஷர்களுக்கு போதித்தார்.

ஆழமான அர்த்தங்களைக் கொண்டுள்ளக் கதைகளை உவமைகள் என்று அழைக்கிறோம். நன்மையான காரியங்களை ஊக்குவிப்பதற்கு ஒரு சிறந்த கதை ஏற்ற கருவியாக பயன்படுத்தப்படுகிறது. நல்ல கதைகள் தன்னுடைய எல்லைகளை நியமித்துக் கொண்டு தனக்கென்று கதாபாத்திரங்களை ஏற்படுத்தி, நல்ல அறிவுரைகளை வெளியிடுகிறது. ஒரு நல்ல கதை கேட்போரின் நிலையை உடனடியாக மறக்க வைத்து, நல்ல உணர்வுகளை தூண்டி விடும் அளவுக்கு, அந்தக் கதையின் சூழ்நிலைக்கு அழைத்து சென்றுவிடுகிறது. இயேசு சில எளிமையான கதைகளைச் சொல்லி முக்கியமான பாடங்களை எவ்வாறு கற்றுக் கொடுத்தார் என்பதை புரிந்துக்கொள்வது மிகக் கடினமாக உள்ளது. புத்தியுள்ள கன்னிகைளின் அறிவு, நல்ல சமாரியனின் தைரியம், துன்மார்க்கமான எஜமானனை குறித்த எச்சரிப்பு, கவலையற்று வாழும் லீலி புஷ்பங்கள், இரக்கமற்ற ஊழியக்காரன், கெட்ட குமாரனை மன்னித்த தகப்பன் - உண்மையில் இந்தச் சத்தியங்களை நேரடியான வாக்கியங்களின் மூலமாக புரிய வைப்பது மிக கடினமாக இருந்திருக்கக்கூடும். சீஷர்கள் அதிகமான செய்திகளை பெற்றிருந்தாலும்,அதற்கேற்ற விசுவாசம் தேவைப்பட்டது. விசுவாசத்தை பிறப்பிக்க, உண்மைகள் மட்டும் போதாது என்ற காரியத்தை இயேசு நன்கு அறிந்திருந்தார். உண்மைகள் அல்ல, விசுவாசமே மலைகளை பெயர்க்கும். ஒவ்வொரு சீஷர்களின் இருதயத்தில் ஆழமான விசுவாசத்தையும், உறுதியான நம்பிக்கைளையும், வளர்ச்சியடைவதற்காக, அர்த்தமுள்ள கதைகள் உவமைகளாகச் சொல்லப் பட்டது.

" அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்: கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்." (மத் 13:3) இயேசுவின் ஊழியம் முழுவதிலும் அவர் உவமைகளைப் பயன்படுத்தினார். அவர் சொன்ன உவமைகளில் தீர்க்கதரிசனங்களை புரிந்துக் கொள்ளுதலிலிருந்து கிறிஸ்துவ ஜீவியத்திற் குண்டான விவரமான பாடங்கள் வரைக்கும், தேவனுடைய முழு திட்டங்களை உள்ளடக்கியது. உவமைகள் இரகசியமானதும், திறமையுள்ள மொழியில் பேசப்பட்டதும் சீஷர்களுக்கும், பரிசேயர்களுக்கும் நமக்கும் மற்றும் சுவிசேஷம் யுகம் முழுவதிலும் இருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் - குற்றங்களை நியாயமாக எடுத்துரைத்து, எச்சரிப்புகள் கூறப்பட்டது. மிக ஜாக்கிரதையோடு இவைகளை வாசிப்போருக்கும் புதிய ஜீவனுக்குள்ளும் தேவனுடைய திட்டத்தின் புரிந்துக்கொள்ளுதலுக்கும் அவருடைய உலகளாவிய கோட்பாடுகளுக்கும் புதிய உலகத்திற்கான வாசல்களைத் திறந்தது.

அறிவும், தொழில் நுட்பங்களும் பெருகியிருக்கும் நம்முடைய காலத்தில் இந்த உவமைகளின் ஆழமான உட்பொருளை புரிந்துகொள்ளுவது மிக எளிதாக உள்ளது. சுவிசேஷ யுகத்தின் முடிவில் இருக்கும் நாம் வேதாகமத்தின் சகல அறிவினால் நிரப்பப்பட்டிருக் கிறோம். (பல விதமான மொழிப் பெயர்ப்புகள், விளக்கவுரை கள், ஒத்தவாக்கியங்கள் ) ஆனால் இயேசுவின் முதல் வருகையின் காலத்தில் புதிய ஏற்பாடு எழுதப்படவில்லை. பழைய ஏற்பாட்டின் போதனைகள் ஒவ்வொன்றும் விதவிதமான பாரம்பரிய கொள்கைளின் அடிப்படையில் போதிக்கப்பட்டது. தம்முடைய உலக பிரகாரமான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடியவர்களுக்கு எந்த விதமான வித்தியாசமும் தோன்றாதபடிக்கு செய்திகளை கொடுக்கக்கூடிய பணியை இயேசு பெற்றிருந்தார். எடுத்துக்காட்டாக, போலியான சபையின் மத்தியில் மெய்யான சபையின் வளர்ச்சி, நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்களின் உயிர்த்தெழுதல், தாலந்துகளை நியாயமான முறையில் பயன்படுத்துதல். இஸ்ரயேலின் சீர்பொருந்துதல், நீதிமானாக்கப்பட்ட நிலை, இராஜ்யத்தின் உண்மையான முக்கியத்துவம் மற்றும்

இன்னும் நம்முடைய கிறிஸ்துவ விசுவாசத்திற்கும் ஜீவியத்திற்கும் மூலைக்கற்களாக இருக்கக்கூடிய பல உபதேசங்கள் உவமைகளின் வழியாக கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட போதனைகள் அனைத்தும் வசனங்களின் மூலமாக தெளிவாக நிருபிக்கப்பட்டிருப்பதினால், உவமைகளின் வழியாக இயேசு கற்றுக் கொடுத்தத்தை நம்மால் எளிதாக புரிந்துக் கொள்ள முடிகிறது. இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த மகா மேன்மையான சத்தியங்களுக்கு அவர் சொன்ன உவமைகள் தெளிவான விளக்கத்தைக் கொடுத்தது.

மனித இருதயத்தில் முன்னதாக எழுதப்பட்டிருந்த கற்பனைகளோடு, மலைப்பிரசங்கத்தின் போது சொல்லப்பட்ட இருபத்தி ஏழு கற்பனைகளுக்குத் தொடர்புள்ள கோட்பாடுகளும், பேசப்பட்ட ஆறு உவமைகள் இயேசுவின் மேல் விசுவாசம் வைப்பதற்கான ஒரு விசேஷித்த நுழைவாக இருந்தது. (கொலோ 1:16, 17 நீதி 8:30) அங்கு கூடியிருந்த திரள் கூட்டத்தாரின் மத்தியில் இயேசு கற்பித்த கோட்பாடுகள், ஆழமாக பிரதிபலித்ததின் நிமித்தமாக தொடர்ந்து பல மணி நேரங்கள் அவைகளை கேட்பதற்கு ஆயத்தமாக காத்திருந்தார்கள். இயேசுவின் முதலாம் வருகையில் அவர் சொன்ன உவமைகள், அவர் மேல் உள்ள விசுவாசத்தை இந்நாள் வரைக்கும் அதிகதிகமாக வளர்ச்சி அடைய செய்வதை உணரலாம். "ஒரு சமாரியன்" மற்றும் "கெட்ட குமாரன் " போன்ற உவமைகளை அன்றாட வாழ்க்கையில் அநேகர் பயன்படுத்துவதைக் காணலாம். வேதத்தை மிக கவனமாக வாசிப்பவர்களுக்கு இயேசுவின் உவமைகளின் மூலமாய் தேவனுடைய திட்டத்தை புரிந்து கொள்ளக்கூடிய புதிய ஞானத்தையும்,அதன் வழியாக புதிய ஜீவனையும் பெறுவதற்கான புது உலகத்திற்கு கதவுகள் திறக்கப்படுகிறது. திரளான ஜனங்களுக்கு மட்டும் அல்ல கடந்த இரண்டாயிரம் வருடங்கள் சுவிசேஷ யுக சபையின் ஊழியக்காரர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க இயேசு இந்த உவமைகளைப் பேசினார்.

**பரிசேயர்களும் ஆயக்காரர்களும்**

உவமைகள் வல்லமையுள்ளதாக இருந்தது. நல்லொழுக்கமுள்ள ஒரு கதை தனிப்பட்ட நபர்களை குற்றம் சுமத்தாமல், கோட்பாடுகளை மட்டும் தெளிவாக விளக்கி ஒரு மனிதனுடைய இருதயத்திற்குள் மாற்றங்களை ஏற்படுத்தலாம். தேவனுக்கு முன்பாக நாம் குற்றம் நிறைந்த பாவிகள் என்ற முக்கியமான காரியத்தை போதிப்பதற்கு இயேசுவின் உவமைகள் பயன்படுத்தப்பட்டது. (ஏசாயா 57:15) எடுத்துக்காட்டாக, ஆலயத்திற்கு ஜெபிக்க சென்ற ஓர் ஆயக்காரனை பற்றியும், ஒரு பரிசேயனை பற்றியும் இயேசு சொன்னார். (லூக்கா 18:-9-14) நியாயப்பிரமாண சட்டத்தின்படி நீதியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு பரிசேயர்கள் முயற்சித்த போதிலும், ஆயக்காரனின் உண்மையான மனந்திரும் புதலை இயேசு அங்கு குறிப்பிட்டார்." நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்" (யோவேல் 2:13) என்று செயல்படுத்த வேண்டிய பழைய ஏற்பாட்டின் போதனை, மறக்கப்பட்டதை இயேசு சுட்டிக்காட்டி, அவைகள் எவ்வளவு முக்கியமானது என்று எடுத்துரைத்தார். மத ரீதியான கிரியைகளுக்கு தூய்மையான விசுவாசமே மிக அவசியம் என்பதை இந்தக் கதையில் இயேசு கற்பித்தார். இஸ்ரயேலின் ஆன்மீக ஸ்தாபனம் மதச்சடங்காச்சாரம் உள்ளதாகவும், தத்துவ ஞானம் கொண்டதும், நீதி நியாயங்கள் உடையதாகவும் நிருபிக்க பட்டிருந்தது. கூடுதலாக பாரம்பரிய பிரமாணங்களும் சேர்க்கப்பட்டிருந்து. மனிதர்களால் ஏற்பட்டிருந்த கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதை அடிப்படையாக வைத்து ஒருவருடைய விசுவாசம் அளவிடப்பட்டது. ஆனால் நம்முடைய பாவங்களை முழு மனதோடு தேவனிடத்தில் அறிக்கை செய்து விட்டு விடுவதே நம்மை உண்மையான நீதிமானின் நிலைக்கு வழிநடத்தும் என்ற உண்மையை, இயேசு இந்த உவமையின் மூலமாக போதித்தார். அதே நேரத்தில் பாரம்பரிய ஆவிக்குரிய கற்பனைகளை அதிகதிகமாக கடைபிடிப்பதால் ஏற்படக்கூடிய ஆவிக்குரிய பொறுமையை குறித்தும், இயேசு மேற்கோள் காட்டினார். உண்மையில், ஒருவர் பாரம்பரிய கொள்கையின் அடிப்படையில் ஆவிக்குரிய பிரமாணங்களை கடைபிடிக்கும்போது அபாயமான சூழ்நிலையில் அகப்படுகிறார். உண்மையான தேவ பிள்ளைகளாய் இருப்பதற்கு கிறிஸ்துவத்தில் அநேக பிரிவுகள் தங்களுடைய பிரமாணங்களையும், விசுவாச அறிக்கைகளையும் ஸ்தாபித்து இருப்பதே மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது.

நற்கிரியைகளைச் செய்வதற்கு இயேசு நமக்கு கற்பிக்க மறந்துவிட்டாரா ? ஒரு சமாரியன் உவமையில் அவர்களின் இருதயத்தில் உள்ள நல்ல நோக்கங்களையும், தவறான நோக்கங்களையும் எடுத்துக் காட்டி, நற்கிரியைகளின் முக்கியத்துவத்தை இயேசு உணர்த்தினார். (லூக் 10:29 -37) கூடுதலாக அற்புதமான தீர்க்க தரிசனத்தின் செயலாற்றும் முறைகளில் பார்க்கும்போது, நம்முடைய அயலார்களிடம் காட்டப்படவேண்டிய உண்மையான அன்பைக் குறித்து, இந்த உவமை போதிக்கிறது. மேலும் நித்திய ஜீவனை எவ்வாறு பெற வேண்டும் என்ற கேள்விக்கான விடையையும் தருகிறது. நாம் ஆசாரியனாக இருந்தாலும் சரி, லேவியனாக இருந்தாலும் சரி அல்லது சமாரியனாக இருந்தாலும் சரி வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் ஆவிக்குரிய சாக்கு போக்கை சொல்லாமல் நற்கிரியைகளை செய்ய வேண்டும் என்பதை இந்த உவமை கற்பிக்கிறது.

ஆழமான ஞானம் நிறைந்த காரியங்களைக் கற்பிப்பதற்கு இயேசு உவமைகளைத் தேர்வு செய்ததின் காரணம் என்ன ? ஒரு வேளை மனிதனுடைய இருதயத்தை அசைக்கக்கூடிய சம்பவங்கள், உவமைகள் வழியாக சொல்லப்பட்டதோ? மனிதனை தேவ சாயலில் படைக்கப்பட்டதினால், அவனுடைய இருதயத்தில் தெய்வீகமான கோட்பாடுகளை பதிய வைப்பதற்கான வழிமுறைகளை இயேசு அறிந்திருந்தார். மனித இருதயங்களுக்கு நன்மை செய்ய நியாயமான முறையில் அறிவுறுத்தும் போது, அவர்கள் சோர்வில்லாமல்

நற்கிரியைகளைச் செய்வதற்கு ஆற்றல் பெற்றவர்கள் என்று இயேசு அறிந்திருந்தார். நாம் சரி என்று நம்புவதும் தவறு என்று நம்புவதையும் குறித்தும் ஆவிக்குரிய வகையில் சரியான புரிந்து கொள்ளுதலை பெறுவதற்கு இயேசு உவமைகளின் வழியாக அவருடைய போதனைகளை வலியுறுத்தினார். வழகாடும் திறனோடும் சகலத்தையும் புரிந்து கொள்ள வேண்டு மென்ற விருப்பத்தோடும் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். இந்த ஆவிக்குரிய உணர்வுகளை சரியான முறையில் தூண்டிவிடுவதற்காக இயேசு இப்படிப்பட்ட உவமைகளை எடுத்துரைத்தார்.

ஆயத்தமான அல்லது மனப்பூர்வமாய் நற்கிரியைகளை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் உள்ள இருதயங்களுக்குள் மட்டுமே ஓர் உவமை வல்லமையாக செயல்பட முடியும். தேவனுடைய இரக்கத்தின் நிமித்தம் திராட்சை தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய வேலை ஆட்கள் அனைவரும் சமமான ஒரு பணத்தை கூலியாக பெற்றுக் கொண்டார்கள் என்று இயேசு சொன்னார். (மத் 20:1-16) நம்முடைய கவனம் நம் மீதோ அல்லது சட்டத்தின் மீதோ இருந்து விடாமல் தேவனுடைய நன்மைகளின் மேல் மாத்திரம் இருக்க வேண்டும் என்று இந்த உவமை கற்பிக்கிறது. ஏனெனில் முடிவில், தேவனுடைய இரக்கத்தினால் சகலமும் வெளிப்படுத்தப்படும். " என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனா யிருக்கலாமா? என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார். "( மத்தே 20:15,16)

அடுத்து கெட்ட குமாரனின் உவமையில் மீண்டுமாக இயேசு தேவனுடைய இரக்கத்தை எடுத்துரைத்தார். (லூக்கா 15:11-32) பாவிகள் மற்றும் விசுவாசிகளாகிய சகல பிள்ளைகளிடமும் தேவன் அன்பாகவே இருக்கிறார், என்பதை இயேசு மிக அழகாக எடுத்துக்காட்டினார். ஆழமான தீர்க்க தரிசனங்களை பூரணமாக செயல் படுத்தினாலும் இந்த உவமையில் ஆவிக்குரிய உணர்வுகளை நல்ல முறையில் தூண்டக் கூடிய ஆச்சரிய மூட்டும் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது. எல்லா விதமான நடைமுறைகளில் இருக்கக் கூடியவர்களின் ஆவிக்குரிய சிந்தனைகளை ஊக்குவிக்கக் கூடிய வல்லமையை இந்த உவமை பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக கெட்ட குமாரன் வீடு திரும்பிய போது அவருடைய தந்தை பெற்ற சந்தோஷத்தைக் கண்ட ஆயக்காரர்களின் இருதயம் உருகியது. பார்வையாளர்களுக்குள் இருந்த கீழ்ப்படிதல் உள்ள ஜனங்கள், தந்தையின் நியாயமான செயல்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்திருக்கக் கூடும். பரலோகத்தில் நமக்கொரு அற்புதமான தந்தை இருக்கிறார் என்றும், அவர் நம்மேல் காட்டும் இரக்கமுள்ள அன்பே, அவருடைய மனமகிழ்ச்சி என்பதை இந்த உவமை நமக்கு கற்பிக்கிறது.

இயேசு போதிப்பதற்கு எந்த விதமான புதிய கதைகளையும் கண்டுபிடிக்கவில்லை. பழைய ஏற்பாட்டின் சரித்திரங்களிலிருந்து இவர் உவமைகளைக் கூறி இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக பிதாவாகிய தேவன், குற்றம் உணர்ந்த தாவீதை மீண்டும் ஏற்றுக் கொண்டதை மனதில் வைத்துக் கெட்ட குமாரனின் உவமையை கூறி இருக்க வேண்டும். (11சாமு 12) நாத்தான் சொல்லிய கதையின் மூலம் தாவீது இராஜாவுக்குள் மறைந்திருந்த பாவம் தாவீதுக்கு முன் பகிரங்கமாக நிறுத்தப்பட்டது. அதனால் அவர் தனக்கே நியாயத்தீர்ப்பு கொடுத்து கொண்டிருப்பதை அறியாத அளவிற்கு, தாவீது ராஜாவின் இருதயம் உணர்வடைந்தது. இப்படியாக அந்தக் கதை வல்லமையோடு கிரியை செய்தது. நாத்தான் சொல்லிய கதை மரண பரியந்தம் தாவீதின் இருதயத்தில் பதிந்திருக்க வேண்டும். (சங் 51:3) மனுஷருக்கும், தேவனுக்கும் முன்பாக நேர்மையான சிந்தையோடு தொடர்ந்து ஜீவிக்க இருந்த அந்தக் கதை அவருக்கு உதவியாய் இருந்திருக்கும். "தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசன்" என்று இந்நாள் வரைக்கும் அனைவராலும் தாவீது நினைவு கூறப்படுகிறார். (அப் 13:22, 1சாமு 13:14)

12 அப்போஸ்தலர்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு ஏற்றபடி இரக்கமற்ற ஊழியக்காரனின் உவமையை இயேசு கூறியிருக்க வேண்டும். (மத் 18 :23-35) இதற்கு முன்னதாக "அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். " ( மத் 18:21) என்று பேதுரு இயேசுவினிடம் கேள்வி எழுப்பினார். யூதர்களின் நியாயப்பிரமாணத்தின் படி ஏழுமுறை என்பது ஒரு தாராளமான எண்ணாக இருப்பினும், ஏழு எழுபது முறை என்று, இயேசு சொன்ன பதில் மேலும் எல்லையைத் தாண்டிச் சென்றது. அனைவரின் ஏராளமான குற்றங்கள் முன்னதாகவே தேவனால் மன்னிக்கப்பட்டதினால், அந்த அளவுக்கு இரக்கமுள்ளவர்களாக, ஒருவரும் இருக்க முடியாது என்பதை இயேசு தம்முடைய வார்த்தைகளின் மூலமாக பதில் அளித்தார்.

இரக்கமற்ற ஊழியக்காரனின் உவமை, மிக வல்லமையுள்ள பாடங்களை கற்பிக்கக்கூடியதாக இருக்கிறது. முதலாவது, பிதாவாகிய தேவன் அவருடைய ஊழியக்காரர்கள் அனைவர் மீதும் கண்ணோக்கமாக இருக்கிறார் என்பதை கற்பிக்கிறது. இரண்டாவதாக, நாம் அபாத்திரர்களாக இருந்த போதிலும் மனப்பூர்வமாக தேவன் நம்மை மன்னிக்க ஆயத்தமாக இருக்கிறார் என்பது தெளிவாகிறது. மூன்றாவதாக இந்த வாழ்க்கையில், நாம் எப்பேர்ப்பட்ட குற்றங்களை மன்னித்தாலும் தேவன் நமக்கு மன்னித்த குற்றங்களை அதற்கு ஒப்பிட்டு பார்க்கையில், அது மிகவும் சிறியதாய் உள்ளது. நாம் நம்முடைய சகோதரர்களுக்கு மன்னிக்க வேண்டும் என்று கற்பிக்கிறது. மேலும் ஒருவர் மற்றவரால் உபத்திரவப்படும் போது அவருக்காய் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். இந்த உவமையை, பழைய

ஏற்பாட்டில் தாவீது ராஜாவின் அனுபவத்திற்கு நாம் ஒப்பிடுகையில், தேவன் நமக்கு மனப்பூர்வமாய் மன்னிப்பதற்கு, நிச்சயமாக நம்முடைய வழிகளை மாற்றிக்கொள்ள வேண்டும், என்பதையும் இந்த உவமையின் வழியாக கற்றுக்கொள்கிறோம். இயேசுவின் உவமைகள் பேதுருவினிடத்தில் வல்லமையுள்ள பாதிப்புகளை ஏற்படுத்தியது. இயேசுவினிடம் மட்டுமே நித்திய ஜீவன் உண்டென்ற உண்மையை, பேதுரு புரிந்துக் கொண்டார்.(யோவ 6:68) முழு உணர்வோடு இந்த உலகத்திற்கும், சபைக்கும் தேவனுடைய திட்டத்தை புரிய வைக்கக்கூடிய பாக்கியத்தை இயேசு பெற்றிருந்ததை பேதுரு உணர்ந்திருந்தார். மேலும் அனைவரும் எளிமையாக புரிந்துக் கொள்ளும் அளவுக்கு இயேசு பேசினார். எடுத்துக்காட்டாக ஐசுவரியவான் மற்றும் லாசருவின் உவமை (லூ 16:19-31) சுவிசேஷ யுகத்தில் வாழ்ந்து வரும் பல கிறிஸ்தவ வகுப்பினர்கள், இயேசுவின் வார்த்தைகளைத் திரித்து, தங்களுடைய பாரம்பரிய கொள்கைகளுக்கு பொருத்தமாகவும் இசைவாகவும் இந்த உவமைகளை வளைத்துக்கொண்டு, தேவனுடைய குணங்களுக்கும் திட்டங்களுக்கும் எதிர்மாறான விளக்கங்களைக் கூறுகிறார்கள்.

இயேசு உவமைகளாகப் பேசின காரணம் என்ன? என்ற கேள்வியை இயேசுவின் சீஷர்கள் அதிர்ஷ்டவசமாக, நமக்காக கேட்டார்கள். மத்தேயு 13ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வசனங்களில் இயேசுவின் உவமைகளுக்குத் தெளிவான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளது.

வசனம் - 1-8 : இயேசு திரளான கூட்டத்தைச் சேர்த்து, விதைப்பவனை பற்றிய உவமையை க் கூறினார்.

வசனம் 9 - :".... காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று சொல்லி, இந்தச் செய்தியின் முக்கியத்துவத்தை இயேசு குறிப்பிடுகிறார்.

வசனம் 10-15 :..... இயேசு உவமைகளாக பேசின காரணம் என்ன என்பதை பன்னிரண்டு சீஷர்களும் கேட்டார்கள். அதற்கு, இயேசு நேரடியாக பதிலளித்தார்.

வசனம் 16-17 : இயேசு தம்முடைய சீஷர்களை பார்வையாளர்களாக எண்ணி பேசினார். மேலும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெறும்படி அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

வசனம் 18-23 : விதைப்பவனை பற்றிய உவமையின் விளக்கத்தைக் கூறி வாஞ்சையுள்ள சீஷர்களின் இருதயத்திற்குப் பரிசளித்தார்.

வசனம் 24-35 : அதே போல பலவிதமான செயல் முறைகளை கொண்ட கூடுதலான உவமைகளைச் சொல்லி, மேலும் பரிசளித்தார்.

**தீர்க்கதரிசனம்** - கிறிஸ்துவத்தின் வரலாறு. நல்ல விதைகள் கெட்ட விதைகளோடு கலந்து அறுவடை மட்டும் வளர்ச்சி அடையும் பட்சத்தில், உண்மையான சபைக்கு சில உபத்திரவங்கள் அனுமதிக்கப்படுகிறது. அப்போது இவைகளுக்குள் உள்ள வேறுபாடுகளை கண்டுபிடிக்க முடியும்.

**நேரடியாக போதனை -** சில உலகளாவிய கோட்பாடுகளை உபதேசித்தல் :

* நன்மைக்கும் தீமைக்கும் ,தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் உண்டாகும் போராட்டம்.

* சில நியாயமான முடிவுகளை எடுக்க, சரியான நேரம் (அறுவடை) வரும் வரைக்கும், தேவனிடத்தில் விண்ணப்பித்து அவருக்காக காத்திருக்க வேண்டும்.

* தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். அவர் சாத்தானுடைய வழிகளை நன்கு அறிந்திருக்கிறார். அவைகளில் இருந்து வெளி வருவதற்கான வாய்ப்புகளையும் அவர் அறிந்திருக்கிறார். ஜீவன் மற்றும் மரணம் குறித்ததான முடிவுகளை தேவன் ஏற்ற நேரத்தில் செயல்படுத்துவார்.

## தனிப்பட்ட வாழ்க்கையில் பிரயோகிக்கும் முறைகள்

நான் விதைப்பவனா ? அறுப்பவனா ? நான் களையா? கோதுமையா ? நான் மற்றவர்களை எப்போதும் எவ்வாறாக நியாயம் தீர்க்கிறேன் ? என்னை நான் எவ்வாறு நியாயம் தீர்க்கிறேன் ? ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட அநேக கேள்விகள் விதவிதமான சூழ்நிலையில் எழும்புகிறது.

## ஆழ்ந்த அறிவு

"அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப் படவில்லை." (மத் 13:10,11) இயசேுவின் உவமைகளை நன்கு ஆலோசித்த பின் கிடைக்கப்பெற்ற ஆழ்ந்த அறிவுள்ள காரியங்களை வரிசைப் படுத்துகிறோம்.

1, பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை மேலும் தெளிவாக புரிந்துக் கொள்வதற்கு விசேஷித்த பரிசாக உவமைகள் சிலருக்கு கொடுக்கப்படுகிறது. தேவனுடைய கோட்பாடுகளுக்கு ஏற்ற முறை ஜீவிப்பதை அறிவிக்கக்கூடிய இராஜ்யத்தை குறித்த தீர்க்கதரிசனங்களையும் இந்த உவமைகளில் நாம் காணலாம்.

2. உவமைகளைப் புரிந்துக் கொள்வதினால் நம்முடைய பொறுப்புகள் மேலும் அதிகரிக்கிறது. "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்." (மத் 13:12) தாலந்து உவமையில் கொடுக்கப்பட்ட குறிப்புகளை ஒருவராலும் நிராகரிக்க முடியாது. தேவனுடைய வரங்களையும், பரிசுகளையும் அறிந்தே புறக்கணிக்கக் கூடியவர்களுக்கு ஏற்ற சிட்சைகளையும், அவைகளை நன்மையான முறைகளில் பயன்படுத்துபவர்களுக்கு தேவன் வெகுமதிகளை அளிக்கிறார் என்பதை தாலந்து உவமையின் வழியாக இயேசு கற்பிக்கிறார். (மத் 25)

3. இக்காலத்தில் அநேகர் ஆண்டவருடைய வார்த்தையை முழுமையாய் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருப்பதில்லை." அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால்,

நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே."(மத் 13:13-15) நிச்சயமாக உவமைகள் இப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.நமக்காக மரித்து, விசேஷமாக அவருடைய ஊழியத்தில்,எந்தவித ஓய்வின்றி, தன்னுடைய சொந்த பலத்தைக் கொண்டு அற்புதங்களை செய்து போதித்து, ஜெபித்த இயேசு, தம்முடைய முதல் பார்வையில் இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டார். ஆயினும் இந்த உவமை சொல்லப்பட்ட சூழ்நிலைகளில் நமக்கு தேவையான துப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. விதைப்பவனை பற்றிய உவமையில் நான்கு விதமான நிலங்களில், மூன்று விதமான நிலங்கள் தேவனுடைய விருப்பத்தின்படி பலன் கொடுக்கவில்லை என்பது விவரிக்கப்படுகிறகிறது. துவக்கத்தில் அனைவரும் மகிழ்ச்சியோடு தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்ட போதிலும் அந்த நான்கு மனநிலையில் உள்ளவர்களில், மூன்று விதமான ஜனங்கள், தேவனை முழுமையாக சேவிப்பதற்கு வாய்ப்புகளையும், மனநிலைகளையும் பெறவில்லை என்று இயேசு விவரிக்கின்றார்.

4, தேவனுடைய வார்த்தைகளை உண்மையோட பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வாஞ்சிப்பவர்களுக்கு இந்த உவமைகள் ஓர் அற்புதமான பரிசாகும். " உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." ( மத் 13:16,17)மேலும் முழு சுவிசேஷ யுகத்தில் உள்ளவர்களுக்கு இது விசேஷித்த ஆசீர்வாதமாகவும் இருக்கிறது.

5, உவமைகளின் விளக்கத்தைக் குறித்து விசாரித்த சீஷர்களை இயேசு மகிழ்ச்சியோடு வரவேற்று அவர்களுக்கு தெளிவான விளக்கம் அளித்தார். "ஆகையால் விதைக்கிறவனைப்பற்றிய உவமையைக் கேளுங்கள். ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்." ( மத் 13:18-23) இயேசு உவமைகளில் விளக்கம் அளிக்கும் போது அவர் பொதுவாக பயன்படுத்தின துப்புகள் என்னவென்றும் நாம் முன்பு அறிந்துக் கொள்ள வேண்டும். "அதுபோன்ற" அல்லது "இம்மாதிரியாக" எனும் வார்த்தைகள் பயன்படுத்தப் படுகிறது. சில நேரங்களில் அந்த உவமைகள் தீர்க்கதரிசனங்களோடு ஒப்பிடப்படுகிறது. மேலும் நம்மனைவருடைய விசுவாசமும் அதிகமாய் உறுதிப்படுவதற்கு இயேசுவின் உவமைகளில் உள்ள வல்லமையை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.


**முடிவுரை**

குறைந்த பட்சம் மூன்றரை வருடங்களுக்குள் தேவன் தந்திட்ட சீஷர்களின் இருதயத்திற்குள் புதிதான விசுவாசத்தை வளர்க்கக்கூடிய, பிரம்மாண்டமான வேலையை இயேசு பெற்றிருந்தார். இந்த விசுவாசத்தை வளர்ப்பதற்கு உவமைகளின் வழியாக கொடுக்கப்பட்ட உபதேசங்கள் மிக வல்லமையான கருவிகளாக பயன்பட்டது. இயேசுவினால் கொடுக்கப்பட்ட சத்தியங்கள், சுவிசேஷத்தின் உண்மைகள், வருங்கால சம்பவங்களை குறித்த தீர்க்க தரிசனங்கள் மாம்ச இஸ்ரயேலின் மேல் நடப்பிக்கப்படும் நியாயத்தீர்ப்பு மற்றும் அவர் செய்த அற்புதங்கள் அனைத்துமே இந்த வல்லமையான கதைகளினால் சீஷர்களின் மனதில் வல்லமையோட நித்தியமாக பதிந்தது. இயேசுவின் உவமைகள் சுவிசேஷ யுகம் முழுவதிலும் உள்ள சபையை போஷித்தது. இதன் மூலம் முழு சபையும் இணைக்கப்படுகிறது. இடுக்கமான பாதையின் வழியாக நடப்பதற்கு, இயேசுவின் வல்லமையான உவமைகளை நம்முடைய வாழ்க்கையில் செயல் படுத்துவதற்கு எப்பொழுதும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். தெய்வீகமான வாழ்க்கைக்குத் தேவையான கோட்பாடுகள், வருங்கால சம்பவங்களை குறித்த தீர்க்கதரிசனங்கள் அல்லது நம்மை ஊக்குவிக்கும் ஆவிக்குரிய உபதேசங்களை மையப்படுத்த கூடிய உவமைகள், எதுவானாலும் சரி இயேசு நமக்கு கொடுத்த விசேஷித்த, தெளிந்த நீரோடையிலிருந்து முழுமையாக பருகி புத்துணர்வு அடைவோம்.

தலைமுறை தலைமுறையாக சொல்லப்பட்டு வரும் கதைகளே மிகப் பெரிதானது. உவமைகளின் தூண்டுதலினால் சீஷர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டது. உவமைகள் பார்வைக்கு மிக எளிதாக தோன்றும். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் அவைகளை செயல்படுத்துவது கடினமான காரியமாகும். ஆயினும் அவைகளினால் நாம் பெறக்கூடிய மகிமைக்கு எதையும் ஒப்பிட முடியாது. "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். " (மத் 7:24)

வல்லமையுள்ளதும், மறக்கமுடியாதுமான

# அற்புதங்கள்



இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.- யோவான் 6:14

Timothy Alexander

சிறையில் இருந்த யோவான்ஸ்நானகன் ". வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்." (மத் 11:3) என்ற கேள்வியை இயேசுவினிடம் கேட்டு அனுப்பினார். யோவான் கேட்ட கேள்விகள் அந்தச் சீஷர்களின் இருதயத்தில் பதிந்தது. அவர்களும் இதைக் குறித்து ஆச்சரியப்பட்டு, அந்தக் கேள்வியை இயேசுவினிடம் கேட்டனர். அதற்கு இயேசுவும் மிக கவனமாக பதிலளித்தார்.

யோவான்ஸ்நானகன் சிறைப்பட்ட பின்பு அவருடைய சீஷர்கள் அனைவரும் பயத்தில் குழப்பமடைந்திருப்பார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகவே அந்த இருவரும் யோவான் ஸ்நானகன் கேட்ட கேள்விகளோடு இயேசுவை சந்திக்க வந்தபோது, வார்த்தைகளினால் அல்ல, சில கிரியைகளை நடப்பித்து, வந்திருக்கும் அவர் தான் "மேசியா" என்பதை எளிமையாகவும், வல்லமையோடும் விவரித்து, அவர்களுக்குள் அதிகமான விசுவாசத்தை வளர்க்க உதவி செய்தார். இயேசு போதிப்பதற்கு அற்புதங்களை பயன்படுத்தினார். இயேசு வியாதியஸ்தரை குணப்படுத்தினார், பிசாசுகளை துரத்தினார், பார்வையற்றோருக்கு பார்வையளித்தார். அதற்குப் பின் "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்;" (வசன 4) என்று சொல்லி இயேசு அவர்களை யோவான் ஸ்நானகனிடம் அனுப்பினார். இயேசுவே "மேசியா" என்பதற்கு இவர்கள் கண்ட காட்சிகளே நிரூபணங்களாக இருந்தது. இயேசுவே "மேசியா" என்பதை இருவரும் முழுமையாக நம்புவதற்கு ஏற்ற படி அங்கு நடப்பிக்கப்பட்ட அற்புதங்கள் மிக வல்லமையாக செயல்பட்டது. ஆகவே அந்த இருவரும் யோவான்ஸ்நானகனிடம் சென்று "மெய்யாகவே இவர்தான் மேசியா" என்று அவரையும் நம்ப வைத்தார்கள்.

**பிறவிக்குருடன்**

இயேசுவின் அற்புதங்களில் ஒன்றான பிறவிக்குருடன் பார்வை அடைந்ததை குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் பதிவு செய்திருக்கிறார். ஓய்வு நாளில் இயேசு அந்த அற்புதத்தை செய்ததினிமித்தம் பரிசேயர்கள் அவருடைய நேர்மையைக் குறித்து குற்றம் சாட்டினார்கள். இயேசு ஒரு பாவி என்றும், அவர் தேவனுடையவர் அல்ல என்பதை அவர்களின் கேடான இருதயத்தில் இருந்த சிந்தைக்கு ஆதாரமாக, இந்தச் சம்பவம் அமைந்தது. ஆயினும் பார்வை பெற்ற அந்த மனிதன் அவைகளுக்கு அப்பாற்பட்ட காரியங்களை நோக்கினான். இயேசு ஒரு பாவி என்றும், நடத்தப்பட்ட அற்புதம் ஒரு வஞ்சனை என்றும், பரிசேயர்கள் வாதம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் பார்வை பெற்ற அந்த மனிதனுக்கு இயேசு பாவியா ? இல்லையா ? என்பதைக் குறித்து எந்த விதமான வாதங்களும், காரணங்களும் தேவைப்படவில்லை. இவ்வளவு காலம் அவர் பார்வையற்றவராய் இருந்தார். இப்பொழுது அவர் பார்வை அடைந்து விட்டார் என்ற முக்கியத்துவத்தையே அவர் உணர்ந்திருந்தார். பரிசேயர்களின் கடுமையான வாக்கு வாதங்கள், எந்த விதத்திலும் அந்த மனிதன் இயேசுவின் மேல் வைத்த புதிதான விசுவாசதந்த அசைக்க வில்லை. உயர் பதவியில் இருக்கும் மேலான அரசியல் வாதிகள் அநேக காரணங்களை கூறியும் அவருடைய விசுவாசம் தளரவில்லை.

மனித மனநிலையில் உள்ள நியாயமான உணர்ச்சிகளை தூண்டுவதற்கு அற்புதங்கள் மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. அனுபவங்கள் அல்லது நியாயங்கள் அல்லது ஞானமான காரணங்களின் அடிப்படையில் மனிதர்கள் நல்ல முடிவுக்கு வருகிறார்கள். மேற்கூறப்பட்ட இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் இயேசு அற்புதங்களை நடப்பித்து, தம்முடைய பார்வையாளர்கள் உணர்ச்சிமிக்க நிலையில் தங்களுடைய அனுபவத்தோடு நல்ல முடிவுகளை எடுக்க வழிவகுத்தார் என்பதை நாம் புரிந்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட முடிவுகள் மிக உறுதியாகவும், எளிதில் அசைக்கப்படாத வண்ணம் இருதயத்தில் ஆழமாக பதிந்து விடுகிறது.

எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தைக் குறித்து அப்போஸ்தனாகிய பவுல் பேசினார். (பிலி 4:7) தேவன் மேல் உள்ள தனிப்பட்ட விசுவாசம், அதாவது அவருடைய பாதுகாப்பை நன்கு உணர்ந்த கிறிஸ்தவ இருதயத்திற்குள் இப்படிப்பட்ட ஆழமான சமாதானம் நிரந்தரமாக தங்குகிறது. இப்படிப்பட்ட சமாதானத்தைப் பெற்ற ஒரு கிறிஸ்தவன் "தேவன் எவ்வாறு காரியங்கள் செய்வார் என்பது எனக்கு அவசியமில்லை, அவர் நிச்சயமாக செய்வார் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். ஏனெனில் பல முறைகள் இவைகளை நான் அனுபவித்திருக்கிறேன்" விசுவா சத்தை பெறுவதற்கு எந்த நியாயமான காரணங்களும் தேவையில்லாதது போல, தேவ சமாதானத்திற்கும் எதுவும் தேவையில்லை. ஆனால் இந்த இரண்டு காரியங் களும், சீஷர்களின் இருதயத்தில் உண்மையாகவும்,

உறுதியாகவும் நிலை பெற்றதினால் அவைகளை ஒருவராலும் அசைக்க முடியாது. அதேபோல இயேசுவால் சொஸ்தம் அடைந்தோர் பெற்ற சுகத்தைக் காட்டிலும் அவர்கள் பெற்ற விசுவாசம் அதிக உறுதியாய் இருந்தது. இப்படியாக அசைக்க முடியாத விசுவாசத்தை இயேசு அற்புதங்களின் வழியாக உறுதிப்படுத்தினார். பொதுவாக யூதர்கள் காரியங்களை நம்புவதற்கு, பாரம்பரியமாக அடையாளங்கள் அல்லது அற்புதங்கள் தேவைப்பட்டது என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிந்திருந்தார். இயேசு இந்தக் குணத்தை புரிந்தவராக சில குறிப்பிட்ட விதிவிளக்குகளைத் தவிர, யூதர்கள் மத்தியில் அநேக அற்புதங்களை செய்தார். யூதர்கள் தேவனை விசுவாசிப்பதற்கு இப்படிப்பட்ட அடையாளங்களும், அற்புதங்களும் தேவைப்பட்டது.

**எலியா செய்த அற்புதம்**

எலியாவின் நாட்களில் இஸ்ரயேல் தேசத்தில் அவரும் இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்றிருந்தார். முழு இஸ்ரயேலரையும் கூட்டுச் சேர்த்து சில நியாயமான கேள்விகளை முன் வைத்தார். "கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், "(1இரா 18:21) அங்கு கூடியிருந்த ஜனங்கள் அவருடைய வார்த்தையின் வல்லமையை அடிப்படையாக கொண்டு எந்த விதமான முடிவையும் எடுக்க அவர்களால் இயலவில்லை. அதேபோல் இயேசு மற்றும் பவுல் வாழ்ந்த காலத்திலும் யூதர்களுக்கு அடையாளம் தேவைப்பட்டது. தண்ணீரினால் நனைக்கப்பட்ட பலிபீடத்தையும், அதன் கற்களையும், வானத்திலிருந்து இறங்கிய அக்கினி பட்சித்து போட்டது. இப்படியாக, பிதாவாகிய தேவன் எலியாவின் மூலம் பிரமாண்டமான ஓர் அடையாளத்தை அன்று நிகழ்த்தினார். வந்த அக்கினி ஆச்சரியவிதமாக சுற்றியிருந்த தண்ணீரையும் வற்றிப் போட்டது. இப்பொழுது அந்த ஜனங்கள் விசுவாசத்திற்குரிய ஒரு நல்ல முடிவை எடுக்க வாய்ப்பு கிடைத்தது. அங்கு நிகழ்த்தப்பட்ட அற்புதமானது, எலியா முன் சொன்ன வார்த்தைகளை முழு உணர்வோடு இருதயத்தில் ஏற்றுக் கொண்டவர்களாக தேவனுக்கு முன்பாக முகம் குப்புற விழுந்து "கர்த்தரே தெய்வம் என்றார்கள்." (1இரா 18 :39 ) என்று கூறினார்கள்.

ஆகவே இயேசுவே மேசியா என்பதை யூதர்கள் விசுவாசிப்பதற்கு அடையாளங்கள தேவைப்பட்டன. எனவே இயேசு அவர்கள் மத்தியில் அற்புதங்களை நிகழ்த்தினார். இயேசு செய்த அற்புதங்களின் வழியாக மக்களை சென்றடைந்த வல்லமையான கோட்பாடுகள், அவர்களுடைய விசுவாசத்தை மட்டும் வளர்க்காமல் இன்னும் அதிகமான காரியங்களை செய்ய தூண்டியது.

யூதர்கள் அடையாளத்தை தேடுகிறார்கள் என்று பவுல் கூறும் போது கிரேக்கர்கள் ஞானத்தை தேடுகிறார் என்று தொடர்ந்து கூறினார். " யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்."(1கொரி 1:22) கிரேக்கர்கள் மற்றும் புற ஜாதிகள் - விசுவாசத்தில் நல்ல முடிவுகளை எடுப்பதற்கு நியாயமான காரணங்களும், நோக்கங்களும் தேவைப்பட்டது என்று பவுல் கூறினார். ஒரு காரியத்தை நம்புவதற்கு முன் நியாயமான விளக்கம் கொடுக்க வேண்டிதாய் இருந்தது. இயேசு நடப்பித்த அற்புதங்கள், தேவையான நிரூபணங்கள் மற்றும் விதவிதமான பாரம்பரிய பழக்கத்தில் உள்ளவர்களுக்கு ஏற்ற கற்பனைகளையும் கொடுத்தது.

இயேசு செய்த அநேக அற்புதங்கள், அவர் சொன்ன உவமைகளை போல வல்லமையுள்ள போதிக்கும் கருவிகளாக செயல்பட்டது. உவமைகள் என்பது நல்ல பாடங்களைக் கற்பிக்கும் கதைகள். அதில் கூறப்படும் ஒவ்வொரு கதாபாத்திரமும், ஒவ்வொரு உண்மையான கதாபாத்திரத்தை அடையாளப்படுத்தும். அதேபோல அற்புதங்களும் தேவையான பாடங்களை உள்ளடக்கின உண்மை சம்பவங்கள் ஆகும். அற்புதத்தில் வரும் நபர்கள் நிஜமானவர்கள் அல்லது உண்மையானவர்கள். யூத சீஷர்களை நம்ப வைப்பதற்கு மட்டுமல்ல,சுவிசேஷ யுகம் தொடங்கி, ஆயிர வருட ஆட்சி வரைக்கும் இயேசுவின் சீஷர்களுக்கு ஏற்ற காலத்தில் ஏற்ற தீர்க்கதரிசனங்கள் மூலமாக "சத்தியங்களை" வெளிப்படுத்துவதற்கு இயேசு அற்புதங்களை நடப்பித்தார்.

இயேசுவின் அற்புதங்களை நாம் வசனங்களில் படிக்கும் போது, அச்சம்பவங்களின் மூலமாக செயல்பட்ட அசாதாரண வல்லமையை முழுமையாக உணர்ந்துக் கொள்வதற்கு இப்பொழுது சற்று கடினமாக இருக்கலாம். ஒரு வேளை இயேசுவால் சொஸ்த படுத்தப்பட்ட குழந்தை, நம் குழந்தையாய் இருக்கும் பட்சத்தில் நாம் அதை உணரலாம். இந்த அற்புதத்தை கேட்போரை விட அந்தக் குழந்தையின் பெற்றோரிடம் அதிக விசுவாச வளர்ச்சி காணப்படும். அதே நேரத்தில் இந்த யுகத்தின் முடிவில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம் உவமைகளினாலும், இயேசு செய்த அற்புதங்களின் மூலமாகவும், வெளிப்படக் கூடிய ஆழமான சத்தியங்களை கண்ணோக்குவதற்கு தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை அளவில்லாமல் கொடுத்துக் கொண்டிருப்பதே நாம் இன்று பெற்ற சிறந்த ஆசீர்வாதமாகும்.

**இயேசுவின் முதல் அற்புதம்**

எடுத்துக்காட்டாக, கானாவூர் கல்யாணத்தில் தண்ணீரை ரசமாய் மாற்றி, இயேசு தம்முடைய முதலாம் அற்புதத்தை நிகழ்த்தினார்.(யோவான் 2:1-11) இந்த அற்புதமானது மரித்துக் கொண்டிருக்கும் குழந்தையைக் குணமாக்கவில்லை அல்லது மரித்தோரை எழுப்பவுமில்லை. ஒரு குடும்பத்தில் திருமணத்தின் போது ஏற்பட்ட ஒரு சின்ன அசவுகரியத்தை இயேசுவின் அற்புதம் சரிசெய்தது.

மேலோட்டமாய் பார்க்கும்போது இயேசுவின் வல்லமை உடனடியாக தேவையை சந்தித்ததை போல தோன்றலாம். ஆனால் இயேசு புதிதாய் துவங்கிய நித்திய ஊழியத்திற்கு, இந்த அற்புதம் ஓர் அருமையான

அறிவிப்பாக இருந்தது - தேவனோடு ஒப்புரவாக - ஜனங்களுடைய விசுவாசத்தை மாற்றியமைக்க கூடியதாக இருந்தது. அவருடைய பிரமாண்டமான நோக்கத்தை அறிவிப்பதற்கு இங்கு செய்யப்பட்ட முதல் அற்புதம் மிக பொருத்தமாய் இருந்தது.

மகிழ்ச்சிகரமான திருமண வைபவத்தின் போது திராட்ச ரசம் தீர்ந்து போனதை இயேசுவின் தாய் கண்டறிந்தார். இந்தச் சூழ்நிலையை குறித்து இயேசுவினிடம் பேசின பின்பு, இயேசு சொல்வதை செய்யும்படி ஊழியக்காரர்களுக்கு மரியாள் கட்டளையிட்டாள். அங்கிருந்த கற்சாடிகள் நிறைய தண்ணீர் நிரப்பும்படி இயேசு சொன்னார். அதற்குப்பின் ஜாடிகளில் இருந்து மொண்டு பரிமாறும்படி இயேசு கட்டளையிட்டார். அங்கு நிரப்பப்பட்ட தண்ணீர் அற்புதமான முறையில் மிகுந்த ருசியுள்ள திராட்ச ரசமாக மாற்றப்பட்டது. இயேசுவின் முதல் வருகையில் யூத யுகத்தில் உள்ள தேவ ஜனங்கள், சுவிசேஷ யுகத்திற்கு மாற்றப்படுவதை இந்த அற்புதம் அடையாளப் படுத்துகிறது. "யூதர்களை சுத்திகரிக்கும் முறைமைகளின்படி" அங்கு ஆறு கற்சாடிகள் குறிப்பாக வைக்கப்பட்டிருந்தது. (யோவான் 2:6) ஆயினும் அந்தக் கற்சாடிகள் காலியாய் இருந்தது. யூதர்களின் நியாயப்பிரமாணம் ஒருவரையும் பூரணப்படுத்தாது போல இந்தக் கற்சாடிகளும் குறைவுள்ளதாக இருந்தது. நியாயப்பிரமாணம் பரிசுத்தமானதும், மிக அருமையானதாகவும் இருந்த போதிலும், யூதர்களுக்கு உண்மையான நீதிமானாக்கப்பட்ட நிலையை கொடுக்கவில்லை. அதே போல சுத்திகரிப்புக்காக வைக்கப்பட்டிருந்த கற்சாடிகளுக்குள் முழுமையாக தண்ணீர் காணப்படவில்லை.

ஆகவே " ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்."(யோவா 2:7) என்று இயேசு கட்டளையிட்டார். அங்கிருந்த ஊழியக்காரர்களுக்கு இயேசுவின் கட்டளைகளைக் கீழ்ப்படிவதற்கு தேவையான விசுவாசம் தேவைப்பட்டது. அவர்கள் கீழ்ப்படிந்த போது சுத்திகரிப்பு முழுமை பெற்று, தண்ணீர் ருசியுள்ள திராட்சை ரசமாக மாறியது.

நியாயப்பிரமாணத்தின் கீழ், கிரியைகளினால் நீதிமான்களாக்க படுதலிலிருந்து (நிழலான நீதிமான் நிலை) இருந்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் உண்மையான நீதிமானாக்கப்படுதற்கு ஏற்படுத்தப்பட்ட மாற்றம் மிக அழகாக இந்த முதலாம் அற்புதத்தில் சித்தரிக்கப்படுகிறது. உபதேசங்கள் அல்லது தேவனோடு உள்ள ஐக்கியத்தின் மகிழ்ச்சியை திராட்சை ரசம் அடையாளப்படுத்துவதை வசனங்கள் காண்பிக்கிறது. அந்த அற்புதத்தின் போது எதிர்பாத்திராத தரம் வாய்ந்ததும், மிகவும் ருசியுள்ள திராட்ச ரசம் பரிமாறப்பட்டது போல, தங்களுடைய கிரியைகளினால் அல்ல, இயேசுவின் மீது வைக்கும் விசுவாசத்தினாலே உண்மையான சுத்திகரிப்பைப் பெறுவோம், என்பதை இயேசுவின் சீஷர்கள் உணரும் போது இதுவரைக்கும் கண்டிராத பாதையை -வசனங்களின் மூலமாக போதிக்கப்படும் ராஜ்யத்தின் மகிழ்ச்சிகளைப் பெறுவதற்குரிய பாதை அவர்களுக்கு முன் திறக்கப்பட்டது. இப்படியாக இயேசு செய்த முதல் அற்புதத்தின் மூலம் இந்த அருமையான சத்தியம் போதிக்கப்பட்டது.

**பிசாசு பிடித்தவர்களைக் குணமாக்குதல்**

தேவனுடைய அன்பு மற்றும் இரட்சிப்பின் வாக்குறுதிகளே பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் பிரதான சத்தியங்களாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் இயேசு கிறிஸ்துவின் வழியாக ஏற்பாடு செய்யப்பட்ட உயிர்த்தெழுதல் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும், யூதர்களுக்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." (அப் 3:21) என்று பேதுரு சொல்லியிருக்கிறார். இந்த உபதேசம் குறிப்பாக யூதர்களுக்கு தொடர்புள்ளதாய் இருக்கிறது. இதை குறித்து மாற்கு 5ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஓர் அற்புதம் எடுத்துக்காட்டுகிறது. (பிசாசு பிடித்தவர்களை சொஸ்தமாக்குதல்)

கலிலேயா கடலை கடந்த பின் இயேசுவும் அவருடைய சீஷர்கள் சிலர் கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். (மாற்கு 5:1-20) இயேசு அந்த நாட்டிற்குள் கால் வைத்தபோது, அநேக பிசாசுகள் பிடித்த ஒரு மனுஷனை கண்டார்கள். அவைகள் அநேகமாய் இருந்ததினால் தங்களை லேகியோன் என்று சொல்லிகொண்டனர். அந்த மனுஷன் மலைகளிலும், கல்லறைகளிலும் வாழ்ந்து வந்தான். அவனை ஒருவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அந்த மனுஷன் உடனடியாக இயேசுவினிடம் சென்று, அவருடைய பாதங்களில் விழுந்து, அவரை தொழுது கொண்டான். இயேசு அந்த மனுஷனுக்குள்ளிருந்த பிசாசுகளை துரத்தினார். அவைகள் அங்குள்ள பன்றி கூட்டத்தில் செல்வதற்கு அனுமதி கேட்டுக் கொண்டனர். அவன் அந்த உபத்திரவத்தில் இருந்து விடுதலை பெற்றபின்பு, வஸ்திரம் தரித்தவனாய் இயேசுவின் பாதத்தண்டையில் சமாதானமாய் அமர்ந்தான்.

இயேசு கிறிஸ்து அந்த இடத்தை விட்டு புறப்படும் போது, சொஸ்தம் அடைந்த அந்த மனுஷன், தான் இயேசுவின் சீஷனாக மாறுதவற்கு இயேசுவினிடத்தில் அனுமதி கேட்டுக் கொண்டான், இதினிமித்தம் ஒரு புதிய விசுவாசத்தைப் பெற்ற பொறுப்புள்ள மனுஷனாக தன்னை வெளிப்படுத்தினான்.

ஆனால் இயேசுவோ அதற்கு மறுப்பு தெரிவித்து. "இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார். "(வசனம் 19) என்று கூறினார். ஆகவே அந்த மனுஷன் அவ்விடம் விட்டு புறப்பட்டு போய் இயேசு தனக்கு செய்த அற்புதத்தை அனைவருக்கும் சாட்சியாக அறிவித்தான்.

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மாம்ச இஸ்ரயேலர்கள் எப்படியாக குணமாக்கப்படுவார்கள் என்பதை, இந்த அற்புதம் மிக அழகாக சித்தரிக்கிறது. பிசாசு பிடித்த அந்த மனுஷன் யூத ஜனங்களை அடையாளப் படுத்துகிறான். அவன் கட்டப்பட்டு இருந்த சங்கிலிகள் நியாயப்பிரமாணத்தை அடையாள படுத்தவேண்டும். அவனை அந்தச் சங்கிலிகள் கட்டுப்படுத்த முடியாதது போல நியாயப்பிரமாணங் களானாலும், இஸ்ரயேல் ஜனங்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அந்த மனுஷன் தன்னுடைய மனநிலை சரியில்லாததினால் சமுதாயத்தை விட்டு பிரிந்து மலைகளிலும், கல்லறைகளிலும் வாழ்ந்தது போல தேவனுக்கு கீழ்படியாததினால் புறக்கணிக்கப்பட்ட இஸ்ரயேல் ஜனங்கள், புறஜாதியாரின் காலம் முழுவதும் இந்த உலகத்தால் ஒதுக்கப்பட்டு, அடிமைகளாக உலகெங்கும் உபத்திரவப்பட்டனர்.

தேவனால் புறக்கணிக்கப்பட்ட இஸ்ரயேல் ஜனங்களின் நிலையை லூக்கா 16ம் அதிகாரத்தில், ஐசுவரியவான் லாசரு என்ற உவமையில் "நரகம்" என்ற வார்த்தை விவரிக்கிறது. இந்நிலையில் இஸ்ரயேல் ஜனங்களுக்கு எந்த விதமான இரக்கங்களும் காண்பிக்கப்படவில்லை. ஆனால் மாம்ச இஸ்ரயேலர்கள் அந்தக் காலத்திற்குப் பின் அவர்கள் பெறக்கூடிய ஆறுதலை மாற்கு 5ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதம் மிக அழகாக சித்தரிக்கிறது. உண்மையில் தேவன் அவர்களுக்கு வாக்களித்த ஒரு மீட்பை இந்த அற்புதம் காட்டுகிறது.

கல்லறைகளில் இருந்த மனுஷன் இயேசுவைக் கண்டு துரிதமாய் ஓடி அவரை பணிந்து கொண்டான். (மாற் 5:6) இப்படிப்பட்ட விசுவாசத்தின் கிரியையானது இயேசு கிறிஸ்து சுகமாக்கும் அற்புதங்களை செய்ய தூண்டுகிறது. சகல தேசத்தாரும் இஸ்ரயேலுக்கு எதிராக வருகையில் தேவன் தம்முடைய ஜனத்திற்காக போர் செய்யும்போது, ஒட்டு மொத்த யூதர்களின் இருதயமும், தேவ பக்தியினால் கொழுந்து விட்டு எரியும் என்பதை அங்கு நடத்தப்பட்ட அற்புதம் குறிப்பிடுகிறது. இந்நிலையை சகரியா தீர்க்கதரிசி தெளிவாக கூறுகிறார். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.." (சகரியா 12:10) அப்பொழுது கண்ணின் மணியைப் போல் இருக்கும் இஸ்ரயேல் ஜனங்கள் முழுமையாக மனந்திரும்பி குணப்படுவார்கள். (சகரி 2:6-10)

இந்நிலையிலிருந்து வசனங்களின் வரலாற்றை நாம் பார்க்கும்போது, புது சிருஷ்டி முழுமையாக நிறைவடைந்திருப்பார்கள். கல்லறையிலிருந்து வந்த மனுஷனைப் போல யூதர்கள் இயேசுவை மேசியா என்று அடையாளம் கண்டுபிடிக்கும்போது - "அவரோடே கூட இருக்கும்படி அவர்கள் உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக்கொள்வார்கள்." ஆனால் சீஷர்களுக்குரிய வாய்ப்பு முடிந்து விட்டது என்று இயேசு அவர்களுக்கு பதில் அளிப்பார். சுவிசேஷ யுகம் முடிவடைந்தது.ஆகவே நீங்கள் போய் "உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி" என்று சொல்லுவார்.

அற்புதமாக சொஸ்தமாக்கப்பட்ட அந்த மனுஷன் தெக்கப்போலிக்கு சென்றான் என்று வாசிக்கிறோம். தெக்கப்போலி என்பதற்கு பத்து பட்டணங்கள் என்று பொருள். இந்தச் சம்பவத்திற்கான தீர்க்கதரிசனத்தை நாம் நன்கு நினைவில் கொண்டுள்ளோம். "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்."(சகரிய 3:23)

கல்லறையிலிருந்து வந்த மனுஷன் சகல தேசத்தாரிடமும் இயேசு செய்த அற்புதத்தை அறிவித்தது போல, ஆயிர வருட ஆட்சியில், மனம் திரும்பிய இஸ்ரயேல் ஜனங்கள் உலகமெங்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்து சாட்சி கூறுவார்கள். பூமியில் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்தும் மனுக்குலம் யூத ஜாதியின் வழியாக பெறக்கூடிய நன்மைகளை குறித்தும் ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார். "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில்

சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:2,3) உண்மையில் அப்பொழுது தேவன் ஆபிரகாமுக்கும், யாக்கோபுக்கும் கொடுத்த வாக்குத்தங்கள் நிறைவேறும். "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரப்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதி 28 :14)

மாற்கு 5ம் அதிகாரத்தில் கொடுக்கபட்டுள்ள அந்த அற்புதம் கதரேனரு என்ற பட்டணத்தில் நடந்தது. மத்தேயும் இந்தப் பட்டணத்தை கெர்கெசேனர் என்று அழைக்கிறார். இந்த இரண்டு பெயர்களும் இஸ்ரயேலின் ஆசீர்வாதங்களுக்குரிய இரண்டு உட்பொருட்களை அடக்கியுள்ளது. 1, தேவன் எப்பொழுது இஸ்ரயேலுக்கு பலன் அளிப்பார் ? மற்றும் 2, அவர்களுக்கு என்ன பலனளிப்பார் ? என்ற கேள்விகளுக்கான பதிலை நாம் இந்தப் பெயர்களில் காணலாம். காதர்னே என்ற வார்த்தைக்கு முடிவில் என்பது அர்த்தம். ஆகவே தேவனுடைய திட்டத்தில் ஆயிர வருட ஆட்சியில் இஸ்ரயேலர்கள் பலனை பெறுவார்கள். அடுத்து கெர்கெசேனர் என்பதற்கு அந்நியர் அருகில் வரவழைக்கப்படுதல் என்று பொருள். ஆகவே உலக ஜனங்களை மாம்ச இஸ்ரயேலர்கள், நித்தியமாக தேவனிடத்தில் கூட்டிச் சேர்ப்பார்கள். இதுவே அவர்கள் பெறும் பரிசாகும். "நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமி 24 :7) இந்தச் சுவிசேஷ யுகத்திலுள்ளவர்களின் விசுவாசம் பலப்படுவதற்கு எவ்வளவு ஆழமாக விவரங்கள் தனிப்பட்ட ஒரு மனுஷன் அடைந்த அற்புதமான சுகத்திற்குள் கொடுக்கப்பட்டுள்ளது !

கற்பிப்பதற்காக இயேசு செய்த அற்புதங்கள் மிகவும் நேர்த்தியாகவும், அருமையாகவும் உள்ளது. அவைகள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. அவைகள் ஆத்துமாவை தேற்றியது. அவைகளின் வல்லமை இருதயங்களுக்குள் ஆழமான விசுவாசத்தை உறுதியாக நாட்டியது. கவனித்துப் பார்க்கையில், இதன் விபரங்கள் வாக்குறுதிகளின் அடையாளமாக இருக்கிறது. மேலும் காலப்போக்கில் இவைகளின் நிறைவேற்றம் இந்த முழு மனுக்குலத்திற்கு ஆசீர்வாதமாக அமையும்.

இந்த உலகத்தில் சீரழிந்து கொண்டிருக்கும் சமுதாயம், அரசியல், மதங்களை இப்போது காண்கிறோம். இனி வரக்கூடிய நாட்களில், சகல தேசத்தாரும் சொஸ்தமடையக் கூடிய காரியம், உண்மையில் ஓர்அற்புதத்தை போல் நடைபெறும். ஆனால் இயேசு இந்த புதிய பூமியில் தன்னுடைய நீதியுள்ள அரசாட்சியை ஸ்தாபிக்கும் முன், இந்த பூமியிலிருக்கும் புது சிருஷ்டியை உருவாக்குவதற்கு வாக்களித்திருக்கிறார். (மத் 16 :18) இந்த வேலைகளுக்காகவே சுவிசேஷ யுக சபை நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இயேசுவைக் காட்டிலும் சீஷர்கள் செய்யக்கூடிய பெரிய கிரியைகளின் துவக்கம் இதுவே. (யோவ 14:12)

**நம்மால் செய்ய முடிந்த அற்புதங்கள்**

இயேசு செய்த அற்புதங்களை செய்து, அவருடைய போதனை முறைகளை கடைப்பிடிக்க ஆவலோடு முயற்சித்தாலும், நம்மால் அடைய முடியாத காரியமாய் இருக்கிறது. ஆனால் இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கு சொன்ன வார்த்தையை நாம் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். மரித்தோரை எழுப்பவும், பிசாசுகளை துரத்தவும், முடவரை நடக்க வைப்பதற்கும், தேவையான வல்லமை நம்மிடத்தில் இராமல் போனால் இந்த அற்புதத்தின் வழியாக நொறுங்குண்ட இருதயங்களை தேவனிடத்தில் வழிநடத்தி, பலியின் ஜீவியத்தில் அவர்களை அழைத்து வர தேவைப்பட்ட ஆவியின் வல்லமை நமக்கு கொடுக்கப்படுகிறது. நாம் பெற்ற பரிசுத்த ஆவியின் மூலம் இந்தப் பெரிய கிரியைகளில் பங்கு எடுக்கும் பொறுப்பு நம்மிடத்தில் கொடுக்கப்பட்டதை (மத் 9:37,38) இயேசு நமக்கு கற்பிக்கிறார்.


நாம் புது சிருஷ்டிகளாக வளர்ச்சி அடைவதே - இந்த உலகம் இதுவரைக்கும் காணாத ஒரு அற்புதமாகும். (எபே 1:4-6, 1பேது 2:9-10, வெளி 21:1-7)

தேவனுடைய ஊழியத்தை செய்யக்கூடிய நம்முடைய தகுதியையும், மனிதர்களுடைய இருதயங்களின் நோக்கங்களை அறிந்து அவர்களுக்குள் விசுவாசத்தை ஊக்குவிக்கக்கூடிய வல்லமையையும் தேவன் நமக்கு தந்திருக்கிறார். மேலும் இயேசு அவருடைய வார்த்தைகளின் மூலம் உறுதிப்படுத்தியும் இருக்கிறார். " என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோவா 14:26) ஆகவே நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப் படுகிறோம் என்ற விசுவாசம், இயேசுவின் வார்த்தைகளின் மேலுள்ள விசுவாசம், இயேசு உபதேசித்த முறைகளில் உள்ள வல்லமையின் மேலுள்ள விசுவாசம் மற்றும் நம்முடைய வாழ்க்கையில் நம்மால் முடிந்த வரைக்கும் இவைகளை பயன்படுத்தி நிரூபிப்போம் என்ற விசுவாசத்தை நாம் செயல் படுத்த வேண்டும்.

இப்படிப்பட்ட நம்பிக்கையோடு நாம் நம்முடைய அறுவடை வேலைகளை எதிர்க்கொண்டால் - சற்று கற்பனை செய்து பாருங்கள் - நிச்சயமாக நாம் தோல்வி அடைய மாட்டோம்.

வார்த்தைகளிலிருந்து சித்திரங்கள் உருவாகுதல்

# உருவகங்கள்



என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். மத்தேயு 4:19,20

**Len Griehs**

பல கோணங்களில் வித்தியாசமாக இருக்கும் இரண்டு காரியங்கள், ஒரு முக்கிய அம்சத்தில் ஒரே விதமாக இருப்பதை உருவகப்படுத்தி காட்டப்படுகிறது. குறிப்பாக, சீமோனையும், அந்திரேயாவையும் இயேசு அழைத்த விதத்தை கவனித்துப் பாருங்கள். "மீன் பிடிக்கும் உங்களை மனுஷனை பிடிப்பவர்களாக மாற்றுவேன்" என்றார். உருவகப் பேச்சின் வல்லமையை கொண்டு மிகப்பெரிய காரியமாகிய ஊழியத்தின் சாரத்தை வெகு எளிமையாக புரியவைத்தார். அது சிறப்பாக வேலை செய்தது.

இப்படிப்பட்ட உருவகப் பேச்சை இயேசு மட்டும் பேசவில்லை, வேதாகமத்தில் பல இடங்களில் இவ்வகையான பேச்சுக்கள் காணப்படுகிறது. வசனங்களில் குறிப்பிடப்படும் போது பிரபலமான ஒரு பொருளின் குணலட்சனங்களை எடுத்துக்கொண்டு, அதன் ஆவிக்குரிய பொருளில் உள்ள ஆவிக்குரிய சத்தியத்தை விவரிக்ககூடியதாக இருக்கிறது. கற்பிக்கப்படும் சத்தியத்தின் ஆவிக்குரிய அர்த்தத்தை உணர்ந்துக் கொள்வதற்கு இவ்வகையான பேச்சுக்கள் மனதை சரியான வகையில் ஆயத்தப்படுத்துகிறது. யேகொவா தேவனை ஆவிக்குரிய முறையில் புரிந்து கொள்வதற்கு தாவீது பயன்படுத்தின இரண்டு எடுத்துக்காட்டுகளை காணலாம் -

* " தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்." (சங் 84: 11)

* " நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்." (சங் 91:2)

தேவனை பற்றி விவரிப்பதற்கு சூரியன், கேடகம், அரண், கோட்டை போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது. பூமிக்கு தேவையான வெளிச்சத்தையும், வெப்பத்தையும் வல்லமையையும் கொடுப்பதற்கு சூரியனே முக்கிய காரணமும், ஊற்றாகவும் இருக்கிறது. பூமியில் காணப்படும் சகல உயிரினங்களுக்கும் இத்தன்மைகளின் ஆதாரத்தைச் சார்ந்திருப்பதை நாம் அறிவோம். ஆகவே சகல உயிரினங்கள் ஜீவிப்பதற்கு காரணமாக இருக்கும் சூரியனுக்கு ஒப்பாக, தேவன் இங்கு குறிப்பிடப் படுகிறார்.

வசனங்களுக்குள் இருக்கும் அழகை, வார்த்தைகளிலிருந்து உருவாக்கப்படுகிற சித்திரத்தை, கற்பனைக்குரிய நம்முடைய மனக்கண்களுக்கு முன்பாக ஜீவனோடு கொண்டு வருவதே இந்த உருவகப் பேச்சாகும். எரேமியா தீர்க்கதரிசி இந்தக் கோட்பாட்டை அதிகமாக பயன்படுத்தியிருக்கிறார். " உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." (எரேமி 15:16) தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டேன் என்று எரேமியா கூறுகையில், தேவனுடைய வசனங்களை எந்த அளவுக்கு சிந்தைக்குள் நாம் பதிய வைத்து, அதின் மூலமாக ஆவிக்குரிய உணர்வுகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதை அவர் உருவகமாக கூறுகிறார். இன்றைய உலகத்தில் அதே போன்று ஒரு பிரபலமான வாக்கியம் ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. " You are what you eat" பிலமிங்கோஸ் என்ற உயிரினம் வேவ்வேறு நிறமுள்ள பாசியை உட்கொள்ளும்போது அந்த நிறத்திற்கு ஏற்றவாறு தானும் மாறிவிடும். ஆகவே வெண்மை, கருஞ்சிவப்பு, ஆரஞ்சு போன்ற பாசிகளை உட்கொள்ளும் போது பிலமிங்கோசும் அந்நிறமாக மாறிவிடும். ஆனால் பல நிறங்கள் கொண்ட உணவுகளை மிக குறைந்த அளவில் புசிப்பதினால், நம்முடைய சரீரத்தின் நிறம் அதிகமாக மாறுவதில்லை. கேரட்டில் உள்ள பீட்டா கேரெட்டின் சரீர நிறத்தை மாற்றுவதற்குரிய தன்மையைக் கொண்டுள்ளது. ஆயினும், குழந்தைகளுக்கு இந்தக் கேரெட்டை மட்டும் உணவாக புசிக்க கொடுத்தால் அந்தக் குழந்தையின் நிறம் மாறிவிடும். அதேபோல, நாமும் தேவனுடைய வார்த்தைகளை அதிகமாய் வாசித்து, அதை தியானித்து, அதனால் கிறிஸ்துவின் சாயலை பெற்றுக் கொள்வதற்கு எரேமியா பயன்படுத்திய எடுத்துக்காட்டு கள் நம்மை அதிகமாக ஊக்குவிக்கிறது. நம்முடைய சரீரத்தை புத்துணர்வோடு காத்துக் கொள்வதற்கு உணவு ஒரு முக்கிய காரணமாய் இருப்பது போல, தேவனுடைய வார்த்தைகளை நித்தமும் தியானித்து ஆவிக்குரிய புத்துணர்வை பெற்றுக் கொள்ளலம். இதுவே உருவக பேச்சுக்குள் இருக்கும் இரகசியமான வல்லமை. இந்த உலகத்தில் நமக்கு பிரபலமாய் இருக்கக்கூடிய கோட்பாடுகளைக் கொண்டு, நம்மை ஆவிக்குரிய உலகத்திற்கு ஏற்றவாறு மறுரூபமாவதற்கு உதவியாய் இருக்கிறது.

நம்முடைய ஆண்டவராம் இயேசு சீஷர்களுக்கு கற்பித்த ஜெபத்தில் இதே கோட்பாட்டை எடுத்துக்காட்டுகிறார். (லூக் 11:3) நாம் நித்தமும் உட்கொள்ளும் மாம்சத்திற்குரிய ஆகாரத்தைப்பற்றி இயேசு குறிப்பிடவில்லை. சீஷர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை ஊக்குவிப்பதற்கு ஏற்ற ஆவிக்குரிய

உணவை கொடுக்கும்படி தேவனிடத்தில் வேண்டுதல் செய்தார். நித்தமும் நாம் ஆகாரம் புசிப்பதுபோல தேவன் கொடுக்கும் வசனங்களை அன்றாடம் தியானிக்க வேண்டும் என்பதை இயேசுவின் சீஷர்கள் தெளிவாக புரிந்துக்கொண்டனர்.

தவறுகளை எடுத்துக்காட்டுவதற்கும் உருவக பேச்சுகள் பயன்படுத்தப்பட்டது. "போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை. " (ஏசா 28 :8) தேவனுடைய வாயின் வார்த்தைகளாக இருக்கிறோம் என்று பெயர் சபைகள் சொல்லிக் கொண்டு, தப்பறையான போதனைகளை ஜனங்களுக்கு போதிக்கும் விதத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசனமாக உரைக்கிறார். மேலும் வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் உயிர்த்தெழுந்த நம்முடைய ஆண்டவர் ஆவிக்குரிய உணவை தேடும்படிக்கு தேவ ஜனங்களை துரிதப் படுத்துகிறார். (வெளி 18:4)

**உப்பாக இருக்கும் கிறிஸ்தவர்கள்**

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது." (மத் 5:13) என்ற மற்றொரு உருவகப் பேச்சை இயேசு பேசினார். இயேசுவின் செய்திகளை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என்பதை இந்த உருவக பேச்சு நமக்கு காட்டுகிறது. இந்த உப்பின் வழியாக நாம் நடக்க வேண்டிய தெளிவான, எளிமையான, சுத்தமான பாதையை இயேசு நமக்கு முன் வைக்கிறார். கெட்டுப்போன மாம்சத்தின்மேல் உப்பு தெளிக்கப்பட்டால் அது சுத்திகரிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக வெகு சீக்கிரத்தில் அது கெட்டுபோக உதவி செய்யும். இப்படியாக இயேசுவின் உபதேசங்களை பின்பற்றக் கூடிய ஒருவர் நன்மையை செய்வதின் மூலம் இந்த உலகத்தை வெகு சீக்கிரத்தில் அழிவுக்கு நடத்துகிறார் என்பதை இயேசு தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்.

சுவிசேஷ யுகத்தின் முழு சபை மற்றும் தனி நபர்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பது விசேஷித்த நோக்கமாக இருக்கிறது. உண்மையில் முழு கிறிஸ்துவ மண்டலமும், மனுக்குலத்தின் நன்மையான குணங்களை எடுத்துக்காட்டி, இந்த உலகத்தை கெட்டுப் போகாமல் பாதுகாக்கக் கூடிய ஒரு தன்மை கொண்டிருக்கிறது. இயேசு இந்த உலகத்திற்கு வராவிட்டால் இவ்வுலகம் எவ்வளவு இருளாகவும் வித்தியாசமாகவும் இருக்கும் என்ற விவரத்தை ஆல்வின், தான் எழுதின புத்தகத்தில் விவரிக்கிறார். மனித நிலையை உயர்த்த வேண்டும் என்ற உபதேசங்களை இயேசுவின் சீஷர்கள், போதித்தாலும், வாழ்க்கையின் நடத்தைகளைச் சுத்திகரிப்பதற்கு அநேக காரியங்களை கற்றுக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட கோட்பாடுகளின் மத்தியில் பக்தியுள்ள கிறிஸ்தவம் - மனித சம உரிமை, சட்டத்திற்குக் கீழ் அனைவருக்கும் சம உரிமை, மேற்படிப்புகள், மருத்துவமனைகள், விஞ்ஞான ஆராய்ச்சி, மற்றும் தானதர்மம் வழங்குதல் போன்ற காரியங்களிலும் ஈடுபட்டது. இப்படியாக கிறிஸ்தவம் பகிரங்கமாக ஆச்சரியப்படும் விதத்தில் இருபது நூற்றாண்டுகளுக்குள் நம்முடைய உலகத்தை எவ்வளவு முன்னேற செய்திருக்கிறது. இவைகள் அனைத்தும் நன்மைக் குரியவைகளாய் இருந்த போதிலும் மிக சிறிய அளவில் செயலாற்றப்படுகிறது. அதே நேரத்தில் உப்புக்கு ஒப்பிடப்படும் வாழ்க்கை, வல்லமை மிக்க, அதிக மேன்மையான நிலையைக் காட்டுகிறது. இதில் தனி நபர்கள் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்து ஆபிரகாமின் வாக்குத்தத்தின் அதிகாரத்தை பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். (கலா 3:28-29) இவ்வுலகத்தில் அறியப்பட்டு இருக்கும் கோட்பாடுகளை உறுதிப்படுத்திக் கொண்டு ஆவிக்குரிய உலகத்தின் கோட்பாடுகளை உப்பின் உருவகத்தின் மூலம் இயேசு எடுத்துரைக்கிறார். அற்புதமான சத்தியங்களை, ஆச்சரியமான வகையில் மிகத் தெளிவாக இணைத்து இயேசு போதித்தார்.

இந்த முழு உலகமும் கெட்டுப் போகாமல் பாதுகாப்பதற்கான பணியை இப்பொழுது சபை பெறவில்லை. ஆனால் இக்காரியத்தை கிறிஸ்துவின் ராஜ்யத்தில் செய்வதற்கு தேவன் சபையை பயன் படுத்துவார். உண்மையில் இரட்சிப்பு சபையின் மூலமாய் வரும். கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியின் போது "பூமிக்கு உப்பாக மகிமை அடைந்த சபையின் வழியாக அனைவருக்கும் இரட்சிப்பு கொடுக்கப்படும். இந்த உண்மை உப்பைக் குறித்த மற்றொரு கதையில் மிக அழகாக எடுத்துக்காட்டப் படுகிறது. இது தீர்க்கதரிசியான எலியாவின் நாட்களில் நடந்த சம்பவமாகும். எலியாவின் மரணத்திற்குப் பின் உள்ள காரியங்கள் ஆயிர வருட ஆட்சியின் வேலைகளைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. "பின்பு அந்தப் பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ, எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது, நிலமும் பாழ்நிலம் என்றார்கள்.அப்பொழுது அவன்: ஒரு புதுத்தோண்டியை எடுத்து, அதிலே உப்புப்போட்டுக் கொண்டுவாருங்கள் என்றான்; அதை அவனிடத்தில் கொண்டுவந்தபோது, அவன் நீரூற்றண்டைக்குப் போய், உப்பை அதிலே போட்டு: இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். எலிசா சொன்ன வார்த்தையின்படியே அந்தத் தண்ணீர் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று." (11இராஜ 2:19-22) குடிக்க இயலாத எரிகோவின் தண்ணீரை சுத்திகரிப்பதற்கு, எலிசா உப்பை பயன்படுத்தினார். அதுபோல கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அனைவரும் தெளிவான சத்தியத்தைப் புரிந்து கொள்ள தேவன் உதவி செய்வார். சபையானது, பழைய ஏற்பாட்டில் உள்ள நீதிமான்களின் வழியாக இந்தச் சத்தியத்தை மனுக்குலத்திற்குக் கொடுக்கும். அப்பொழுது பாவத்திலிருந்தும், தவறுகளிலிருந்தும் இந்தப்பூமி சுத்திகரிக்கப்பட்ட பின் தேவனுடைய நீதியை கற்றுக்கொள்ளும். (ஏசாயா 2:3)

பழைய ஏற்பாட்டின் இந்தச் சம்பவத்தை குறித்து இயேசு பேசின இந்த உருவகப் பேச்சை இணைத்து பார்க்கும்போது, உண்மையில் பழைய ஏற்பாட்டின் காரியங்கள் உயிர்ப்பெறுவதைக் காணலாம். நிகழ்கால அனுபவங்களில் "சீஷர்கள்" என்ற வார்த்தைக்குரிய அர்த்தத்தை இன்னும் தெளிவாக விவரிக்கப்படுகிறது. மேலும் அநேக பயனுள்ள பாடுகளைக் கற்பிப்பதற்கு இயேசு இந்த உருவகப் பேச்சை பயன்படுத்தினார். தேவனுடைய ஆழமான காரியங்களை கற்றுக்கொள்வதற்கும், ஆவிக்குரிய உயர்ந்த நிலையை அடைவதற்கும், சீஷர்களை அதிகமாக ஊக்குவிப்பதற்கும் இயேசு உருவக பேச்சுகளைப் பயன்படுத்தினார். இப்படிப்பட்ட உருவக பேச்சுகள் புலப்படாத ஞானத்தை சுவிசேஷ யுக சபைக்கு தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**யோவான் சுவிசேஷத்தில் பயன்படுத்தப்பட்ட நானே என்ற உருவகச் சொல்**

இயேசுவின் வாழ்க்கையில் கடைசி வார்த்தையைக் கூர்ந்து கவனிக்கும்போது, மற்ற மூன்று சுவிசேஷங்களைக் காட்டிலும், யோவான் எழுதின சுவிசேஷம் சற்று வேறுபடுகிறது. மேலும் இயேசு பேசின வார்த்தைகளை அதிகமாக பதிவு செய்தவர் யோவான். அதில் சீஷர்களுக்கு கற்பிப்பதற்காக இயேசு பேசின வல்லமையுள்ள அநேக உருவகப் பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அவர் ஏழு உருவக பேச்சுகளை பயன்படுத்தி ஒரு மிகப்பெரிய சித்திரத்தை வரைந்தார். இவ்வனைத்தும் அடிப்படை சத்தியங்களை யும் தாண்டி மேலான கோட்பாடுகளை புரிய வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இவ்வழியில் இந்த உருவக பேச்சுக்களைப் புரிந்துக் கொள்ளும்போது நம்முடைய சிந்தையில் ஆவிக்குரிய வளர்ச்சியை அதிகதிகமாய் காணலாம். சுவிசேஷ யுகத்தின் ஒவ்வொரு சபையின் காலத்திலும் புதிய சத்தியங்கள் மற்றும் வெளிச்சம் அதிகரிக்கும் போது, குறித்த காலத்தில் சத்தியங்களின் வெளிச்சம் வெளிப்படுவதற்கு இயேசு இந்த உருவகப் பேச்சுகளைப் பயன்படுத்தினார்.

"இயேசு அவர்களை நோக்கி: ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்." ( யோவா 6:35) உணவும் தண்ணீரும் நம்முடைய சரீரம் ஜீவனோடிருப்பதற்கு அவசியமாக இருப்பது போல, நம்முடைய ஆவிக்குரிய மனுஷன் ஜீவனோடிருந்து வளர்ச்சியடைவதற்கு இயேசுவின் வார்த்தைகள் அவசியமாய் தேவைப்படுகிறது. ஆகையால் ஜீவனை தரக்கூடிய ஒரு தன்மை சூரியனிடம் இருப்பதினால் அந்த சூரியனை தேவனுக்கு ஒப்பிட்டு தாவீது பக்தன் பேசுகிறார். இயேசு உருவக பேச்சின் மூலமாய் நித்திய ஜீவனுக்கு தேவைப்படும் காரியங்களைத் தெளிவாக சித்தரிக்கிறார். சமாரியா ஸ்திரி கிணற்றிலிருந்து இயேசுவுக்கு தண்ணீர் கொடுக்க முயற்சித்த போது "நான் கொடுக்கும் தண்ணீரை குடிப்பவனுக்கு என்றுமே தாகம் எடுக்காது" என்று அவர் குறிப்பிட்டார். இங்கு சத்தியத்தை, ஜீவனைக் கொடுக்கும் தண்ணீருக்கு உருவகமாக எடுத்துக் காட்டினார். கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக வளருவதற்கு "சத்தியமாகிய ஜீவத்தண்ணீர் நமக்கு மிக அவசியமானது. (IIகொரி 5:17)

நீதியின் மேல் உள்ள ஆவிக்குரிய தாகத்தை தேவனுடைய சத்தியங்கள் திருப்திப்படுத்தும், கர்த்தரின் பிறப்பிடமாகிய பெத்லகேம் (அராமிக்), என்பதற்கு அப்பத்தின் வீடு என்று பொருள். ஆதிகாலத்தில் அப்பங்களே முக்கிய உணவாக இருந்தது. ஆகவே இயேசுவை நல்லபோதகர் என்று அடையாளம் கண்டு கொள்வதைக் காட்டிலும், ஜீவனுக்கு ஊற்றும் காரணராய் இருக்கிறார் என்பது அதிக முக்கியமாக பேசப்பட்டது. அவருடைய மேன்மையான இரட்சிப்பின் வேலைகள் நிறைவேறின பின் அவர் ஜீவனுக்கு ஊற்றும் காரணர் என்று வெளிப்பட்டது. இயேசு அனைவருக்காகவும் தன்னை ஈடுபலியாய் கொடுத்தார். (1தீமோ 2:6)அந்தப் பலியினால் இந்த உலகத்திற்கு அவர் ஜீவனுக்குரிய அப்பமானார். ஈடுபலியின் நன்மையில் இப்பொழுது பங்கெடுத்துக் கொள்ளும் சபை அங்கத்தினர்கள் தேவனுடைய இராஜ்யத்தில், பூமியிலுள்ள திரளான ஜனங்களுக்கு சத்தியத்தைப் போதிக்கும், முக்கிய பொறுப்பை பெறுவார்கள். இப்படிப்பட்ட நித்திய ஜீவனை இயேசுவால் மட்டுமே கொடுக்கமுடியும். மனப்பூர்வமாக இயேசுவின் பலியை ஏற்றுக்கொள்பவர்கள் அதனால் ஜீவனை பெறுகிறார்கள். இவர்கள் தேவனுடைய சத்தியத்தினாலும், நீதியினாலும் திருப்தியடைவார்கள்.

மிக எளிமையான உருவகப் பேச்சோடு கடமையான உருவகப் பேச்சுகளை கலந்து அவருடைய உண்மையான சீஷர்களை தேர்வு செய்தார். "என்னுடைய மாம்சத்தை புசியுங்கள்...." என்று இயேசு சொன்னபோது அவருக்கு பின்னாக சென்ற திரளான சீஷர்கள் "இயேசுவின் உபதேசம்" யூதர்களின் முறைமைக்கும் சட்ட திட்டத்திற்கும் முரண்பாடானது என்று சொல்லி அவரை விட்டு சென்றார்கள். (யோவான் 6:51 -56) அதுபோல இந்நாளிலும் இயேசுவின் போதகத்தினால் அநேகர் ஈர்க்கப்படுகிறார்கள். அதற்குப் பின் அவருடைய அறிவான போதனையினால் சற்று வளர்ச்சி அடைகிறார்கள். அதனால் சிலரின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப் படுகிறது. அவர்களின் பாவத்தைப் போக்க இயேசுவின் மரணம் அவசியம் என்பதை உணர்ந்த போதிலும், தாங்கள் அந்தப் பலியின் ஜீவியத்தில் தங்களை உட்படுத்திக் கொள்வது அவசியம் இல்லை என்றும் (மத் 14:24) அல்லது அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதையும் (ரோம 6:3, மாற்கு 10:30,38) அல்லது அவரோடு கூட பாடுபட வேண்டும் என்பதையும் அவர்கள் உணராதிருக்கிறார்கள். (கொலோ 1:24, மத் 19:27 -29) அவர்கள் இயேசுவை சிலுவையில் விட்டுவிட்டு, அவருடைய ஈடுபலியினால் கிடைத்த பிரம்மாண்டமான உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவைகளினால் உலக மக்களுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகளையும் அறியாதிருக்கிறார்கள்.

இப்படியாக, "என்னுடைய மாம்சத்தை புசியுங்கள்" என்று சொல்லப்பட்ட உருவகப் பேச்சுக்குள் மிகப் பெரிய சத்தியம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. சபையின் தலையாகிய இயேசுவின் அளவுக்கு நாம்

வளர்ச்சியடைந்து, ஏற்ற விதமாக சிந்தித்துச் செயல்பட ஏற்ற சத்தியங்களை, ஏற்றக் காலத்தில் ஏற்ற உணவை உட்கொள்ள வேண்டும் என்பதை, இந்தச் சத்தியம் உள்ளடக்கியுள்ளது. (எபேசி 4:13,15) அநேகரினால் இந்தச் சத்தியத்தை உணர முடியவில்லை. ஏனெனில் இயேசு கிறிஸ்து உபதேசித்த ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துக்கொள்வதற்குத் தேவையான பலியின் ஜீவியத்தை நடப்பிக்க அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. " மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார். " (யோவ 8:12)

ஆசரிப்பு கூடார பண்டிகையின்போது ஆலய பிரகாரத்தில் ஜொலித்து கொண்டிருக்கும் பலி பீடத்தை பார்த்து இயேசு இந்த உருவகப் பேச்சை பயன்படுத்தினார். பாரம்பரிய திருவிழாக்களின் போது, எரியும் பந்தங்களை உயரப் பிடித்திருந்தார்கள். பிதாவாகிய தேவன் தங்களுடைய வனாந்திர பிரயாணத்தின் போது அக்கினி ஸ்தம்பத்தினால் வழிநடத்தின காரியத்தை, அவர்கள் இப்படியாக நினைவு கூர்ந்தார்கள் மேலும் புறஜாதியாரின் இராக்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பிரகாசமாய் இருக்கும் என்பதையும் அவர்கள் நினைவு கூர்ந்தார்கள். (நெகே 9:19)

"ஒளி என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை போஸ் (phos). அதற்குப் பிரகாசித்தல் அல்லது வெளிப்படுத்துவது என்று பொருள். "வெளிச்சம் உண்டாகக் கடவது என்று சொன்னார்" (ஆதி 1:3 ) இவ்வசனத்தில் போஸ் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (கிரேக்க மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு) எல்லா இடத்திலும் வெளிச்சம் பிரகாசித்தது. அதுபோல இந்த உலகத்திற்கு ஆவிக்குரிய ஒளியாயிருப்பவர் இயேசு. ஆனால் வெகு சிலரே அந்த ஒளியை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. உலகத்திலுள்ள மற்ற எல்லா ஜனங்களும் மூடப் பழக்கவழக்கங்களினாலும், வஞ்சகங்களினாலும் சாத்தானிடமிருந்து தோன்றுகிற அந்தகார இருளினாலும் குருடாக்கப் பட்டிருக்கிறார்கள். (11கொரி 4:4) காலப் போக்கில் எந்த ஜாதிகளையும் மோசம் போக்காத படிக்கு இயேசு சாத்தானை கட்டிவிடுவார். அப்பொழுது - "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி." ஆக இயேசு இருப்பார். ( வெளி 20:3, யோவர் 1:9)

இந்த உருவகப் பேச்சை தம்முடைய சீஷர்களுக்குப் பயன்படுத்தும் போது மேற்கூறப்பட்ட வார்த்தைகளை இயேசு பயன்படுத்துவதைக் காணலாம். (மத் 5:14-16) "ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு," ( பிலி 2: 14,15)

இந்தப் பிரகாசத்தின் மூலம் சுவிசேஷகத்தின் ஒளி, நட்சத்திரங்களை போல ஒளி வீசி செவ்வையான பாதையைக் காட்டும் என்பதை இயேசு சீஷர்களுக்கு கற்பித்தார். எப்படிப்பட்ட ஆசீர்வாதம், இப்பொழுது நம்முடைய வெளிச்சத்தை பிரகாசித்தால், வரும் காலத்தில் "நீதியின் சூரியனின் ஒரு பங்காயிருந்து முழு மனுகுலத்தையும் நாம் பிரகாசிக்கிறவர்களாய் இருப்போம்." (மல் 4:2)

அதேபோல, நம்முடைய விளக்கை மரக்கால் அடியில் மறைத்து வைக்கக்கூடாது என்று இயேசு நமக்கு கற்பித்தார். அவருடைய நாட்களில் பிரயாணிப்பதற்கும், வேலை செய்வதற்கும் விளக்குகள் பயன்படுத்தப்பட்டது இயேசுவை ஒரு போதகராக ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது அவருடைய சீஷர்கள் பல இடங்களுக்கு சென்று இயேசுவின் பணியைப் செய்ய கூடியவர்களாய் இருக்கிறார்கள். ஜெபங்கள், வேத வாசிப்பு அல்லது சகோதர ஐக்கியத்தை புறக்கணித்தால் நம்முடைய ஒளி மங்கிவிடும். நாம் பலி செலுத்த தவறினால் உலகத்தின் இருள் நம்முடைய ஒளியை மொத்தமாக அவித்துப் போடும். இந்த உருவகப் பேச்சின் மூலம் எவ்வளவு வல்லமையான சத்தியத்தின் கோட்பாடு வெளிப்பட்டிருக்கிறது.

" என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய்.நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். " (யோவா 10 : 9,10)

ஆறுதலூட்டும் இந்த உருவகப் பேச்சில் இயேசு சில ஆழமான போதனையைத் தெளிவாக விவரிக்கிறார். ஒரு கதவு இரண்டு காரியத்திற்கு பயனுள்ளதாயிருக் கிறது. 1கதவை திறக்கும் போது ஜனங்களை உள்ளே அனுமதிக்கும். 2. அது மூடி வைக்கப்படும்போது மற்றவர்களை வெளியே நிறுத்திவைக்கும். திருமண விருந்தின் உவமையில் கதவு அடைக்கப்படும் போது தங்களிடத்தில் எண்ணெயை வைத்திருந்த ஐந்து கன்னிகைகள் உள்ளே சென்றனர். எண்ணெய் இல்லாத கன்னிகைகள் வெளியே விடப்பட்டனர். (மத் 25:10)

ஆடுகளுக்காக திறக்கப்படும் கதவு கீழ் (hinges) உள்ளதாய் இராமல் அது சுவரில் காணப்படும் ஒரு வாசலாக இருக்கும். அவைகளுக்குள் பிரவேசிக்கும் ஆடுகள் மேய்ப்பனின் பாதுகாப்பை பெறும். எல்லா ஆடுகளும் உள்ளே நுழைந்தபின் அவைகளின் மேய்ப்பன் தானே ஒரு கதவாக மாறி அந்த வாசலுக்கு குறுக்கே படுத்துக் கொள்வான். ஒருவன் ஆடுகளை பிடிக்க வேண்டும் என்றால் முதலில் அந்த மேய்ப்பனை தாண்டித்தான் செல்ல வேண்டும். திருடர்களிடமிருந்து தம்முடைய ஆடுகளை காப்பதற்கு தாவீது பக்தன் இப்படிப்பட்ட மேய்ப்பனுக்குரிய நுட்பங்களைப் பயன்படுத்தினார். (1சாமு 17:31-35)

ஆகவே ஆடுகள் தங்களுடைய ஜீவனைக் காப்பதற்கு எப்பொழுதும் தங்களுடைய மேய்ப்பர்களை சார்ந்து இருக்க வேண்டியதாயிருக்கிறது. "மேய்ப்பனை ப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது

மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்." (ஏசாய 40:11) அக்காலத்தில் மேய்ப்பர்கள் மட்டுமே தங்களுடைய மந்தையை புல்லுள்ள இடங்களில் மேய்த்து வருவார்கள். அதே போல இயேசு தன்னுடைய சீஷர்களை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பது மட்டுமல்ல, அவர்களை புத்துணர்வூட்டும் சத்தியத்திலும் வழி நடத்துகிறார். (சங் 23:2,5) மந்தைக்கு வரும் ஆபத்து நேரத்தில், தானே முன்நின்று தன்னுடைய ஜீவனையும் கொடுத்து, தன்னுடைய மந்தையை காப்பாற்றுகிறார். அதுபோல நாம் ஜீவன் பெறுவதற்காக இயேசுவும் அவருடைய ஜீவனைக் கொடுத்தார். (யோவான் 10 :15, 17,18)

இந்த உருவகப் பேச்சை பயன்படுத்தி இயேசு தனக்கும் சீஷர்களுக்கும் உள்ள உறவை தெளிவாகப் புரிய வைத்தார். அவருடைய நாளில் சொல்லப்பட்ட இந்த எடுத்துக்காட்டின் மூலம் ஆவிக்குரிய புரிந்துக் கொள்ளுதலை. அதிகதிகமாய் வளர்ச்சியடைவதற்கு புதிதான பாதைகளைத் திறந்தார். இதன் மூலம் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தங்களைத் தன்னுடைய உருவகப் பேச்சின் மூலம் இணைத்து மிக அழகாக சத்தியங்களைப் போதித்தார்.

" இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். "(யோவான் 11:25, 26)

இந்த உருவகப் பேச்சினால், மார்த்தாள் மற்றும் மரியாளுக்கு இயேசு ஆறுதல் சொன்னார். மேலும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் அவர் வழியாக மட்டுமே கூடும் என்ற ஆவிக்குரிய சத்தியத்தையும் தெளிவாகப் போதித்தார். தங்களுடைய அன்பான சகோதரன் லாசருவை உயிரோடு எழுப்பின அற்புதத்தின் மூலம் இந்த ஆழமான சத்தியத்தை அவர் எடுத்துக் காட்டினார். (யோவான் 2:1-11, 4:46-54, 5:1-47, 6:1-21, 9:1-41, 11:1-44, 21:1-14) இங்கு அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவினால் செய்யப்பட்ட எட்டு அற்புதங்களை பதிவு செய்திருக்கிறார். இவ்வற்புதங்கள் அனைத்தும், இனி வரக்கூடிய ராஜ்யத்தில் இயேசு செய்யக்கூடிய வல்லமையான கிரியைகளுக்கு ஒரு நிரூபணமாயிருந்தது."இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவர்டத்தில் விசுவாசம் வைத்தார்கள்."( யோவான் 2:11) இப்படியாக வரக்கூடிய இராஜ்யத்தை குறித்து இயேசு தம்முடைய வார்த்தைகளினாலும், எடுத்துக்காட்டுகளினாலும் போதித்தார். அப்பொழுது மரணத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுதலைப் பெறுவார்கள் என்று பொருள்படுகிறது. "இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்," ( ஏசா 61:1)இயேசுவின் ஊழியம் ஜீவனுள்ளதாயும் ஒளியாயும் இருந்தது. (யோவ 1:4) பூமியில் தேவனுடைய இராஜ்யத்தில் நடக்கக்கூடிய காரியங்களுக்கு இந்த அற்புதங்கள் ஒரு முன் மாதிரியாக இருந்த போதிலும், சுவிசேஷ யுகத்தில் தம்முடைய சீஷர்களுக்கும் இஸ்ரயேல் ஜனத்திற்கும் இயேசுவே அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதை இது நிரூபித்தது.

இப்பொழுது இயேசுவை பின்பற்றக் கூடியவர்களுக்கு பரலோக ஆசீர்வாதம் ஒன்று வாக்களிக்கப்பட்டுள்ளது. (யோவ 14:3) ஆனால் இயேசுவை அறியாதவர்களுக்கு என்ன நேரிடும் ? இந்தக் கேள்விக்கான பதிலை ரோதர்ஹாம் என்பவர் தம்முடைய மொழிபெயர்ப்பில் ஒரு முக்கியமான வார்த்தையை இணைத்து எழுதுயிருக்கிறார். ( யோவா 11:26 ) இந்த வசனத்தில் "மீண்டும்" என்ற வார்த்தை இனி உயிர்த்தெழக்கூடிய உலக ஜனங்களுக்குச் சொல்லக்கூடியதாயிருக்கிறது. உண்மையில் இந்தச் சுவிசேஷ யுகத்தில் வாழக்கூடியவர்களுக்கு முதலாம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையே வேதாகமத்தில் சொல்லப்பட்ட மிக சிறப்பான வாக்குத்தத்தமாகும். ஆனால் இயேசுவின் சீஷர்களுக்கு இந்தச் சத்தியத்தை கண்டுபிடிக்கும் படிக்கு, உருவகப் பேச்சில் அதை மறைத்து வைத்திருக்கிறார்.

மரணம் என்பது மிக துக்ககரமானதும் நித்தியமான துயரம் என்றும் அனைவராலும் கருதப்படுகிறது. ஆனால் தற்காலிகமான வேதனைகள் வரும் போது அவைகள் நீங்கிப் போய்விடும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. ஒருவர் வறுமையில் அகப்படும் போது கடுமையாக வேலை செய்த நல்ல காலங்களை எதிர்ப்பாக்கிறார். ஒருவர் வியாதிபடும் போது வைத்தியத்தினால் நல்ல உடல் நலத்தை எதிர்ப்பார்க்கிறார். ஆனால் ஒருவர் மரிக்கும்போது எல்லா வகையிலும் நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். இந்தக் கொடூரமான ஆபத்திலிருந்து தப்பிப்பதற்கு மனிதனிடத்தில் எந்த ஒரு வல்லமையும் காணப்படுகிறதில்லை. மரணம் நம்பிக்கையற்றதும் இறுதியானதும் எல்லாவற்றிற்கும் முடிவாய் இருப்பது போல் தோன்றுகிறது. மிகவும் நேசிக்கப்பட்டவர்கள் எட்ட முடியாத இடத்திற்கு பிரிந்து விடுகிறார்கள். நம்முடைய ஜீவிய வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வந்த அவர்களின் உறவு, நித்தியமாக முறிந்து விடுவது போல் தோன்றுகிறது.

இயேசு தன்னுடைய பரிபூரண மனித வாழ்க்கையை, மரித்துக் கொண்டிருக்கும் மனுகுலத்தின் ஜீவனுக்கு ஈடுபலியாக கொடுத்தார். மரிக்கக்கூடிய ஒவ்வொருவரும் ஜீவனைப் பெறுவார்கள்." தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவா 3:16)" அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்."(ஓசி 13:14) பாவத்தில் விழுவதற்கு முன் ஆதாம் படைக்கப்பட்ட

பரிபூரணமான நிலையில் இயேசுவும் இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் ஆதாமை போல் பாவத்தில் விழாமல், முடிவு பரியந்தம் தன் தந்தைக்கு கீழ்படிந்து மரணத்துக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆதாமுக்கு பதிலாக தம்முடைய ஜீவனைப் பலிசெலுத்தினார். இந்த இலவசமான சட்ட பூர்வமான பரிசு ஆதாமுக்கு மட்டுல்ல, ஆதாமின் வழிவந்த முழு மனுகுலத்திற்கும் கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. (ரோம 5:12, 18,19) வேதத்தில் கற்பிக்கப்பட்ட அர்த்தமுள்ள போதனைகளில், மரித்தவர்களுக்கு உண்டான ஜீவனைக் குறித்தான உண்மையான நம்பிக்கையே ஈடுபலியின் உபதேசமாகும். மரித்தோர் ஜீவனைப் பெறுவது மட்டுமல்ல, மரணத்தினால் பிரிந்திருக்கும் குடும்பங்கள் மீண்டும் மகிழ்ச்சியோடு இணைக்கப்பட்டு நித்தியமான சுகத்தோடும், பலத்தோகும், சந்தோஷத்தோடும் இந்த உலகத்தில் ஜீவிப்பதற்கான வாக்குத்தத்தத்தை ஈடுபலியின் உபதேசம் போதிக்கிறது. (1தீமோ 2:5,6, சங் 37:11,29)

இயேசு பெத்தானியாவுக்கு வந்தபின் லாசரு மரித்ததை உறுதிப் படுத்திக் கொண்டார். "நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படு கிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.."( யோவான் 11:15) என்று இயேசு சீஷரிடம் சொன்னார். "உங்கள் நிமித்தம்" என்ற சொற்கள் இங்கு மிக முக்கியமானது. பிதாவாகிய தேவனின் மிக அற்புதமான உயிர்த்தெழுதலின் வல்லமையை வெளிப்படுத்துவதற்கு இயேசு இப்படிப்பட் ஒரு வாய்ப்பை எதிர்பார்த்திருந்ததை இது காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கையில் நடக்ககூடிய சில வேதனையான சம்பவங்களும் தேவன் நமது நிமித்தமாக அனுமதிக்கிறார், என்பதை நாமும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதன் வழியாக நம்முயை குணலட்சனங்கள் வளர்ச்சியடைந்து எப்பொழுதும் தேவனுடைய கிருபைகளுக்காக அவரோடு தொடர்பு கொள்ளக்கூடி யவர்களாக இருப்போம். "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும்: என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்.."( யோபு 13:15) லாசருவின் மரணம் தற்காலிகமானது என்று நிரூபிக்கப்பட்டாலும் இனி வரக்கூடிய இயேசுவின் மரணத்திற்கு பின் அவர் நிச்சயமாக உயிர்த்தெழுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைச் சீஷர்களின் இருதயத்தில் வேரூன்றியது. இயேசு பாடுபட்டு சிலுவையில் மரிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். ஆனால் சீஷர்களோ அதை உணரவில்லை இயேசுவை மரணத்திலும் பின்பற்றுவேன் என்று சொன்ன சீஷர்கள் (யோவ 11:16) அவரை மறுதலித்து, அவரை விட்டு ஓடினார்கள். லாசருவின் கல்லறைக்கு இயேசு வந்தபோது அந்தக் கல்லை புரட்டி விடும்படி சொன்னார். "இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்." (யோவர் 11:43,44 ) கல்லறையிலிருந்து உயிரோடு வந்த லாசருவை கண்ட மார்த்தாளும், மரியாளும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருப்பார்கள் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். அவர்களின் துக்கமான கண்ணீர் மகிழ்ச்சியாக மாறியது. இப்படியாக ஆயிர வருட பூமிக்குரிய ஆட்சியின்போது அனைவரும் மகிழ்ச்சியால் நிறைந்திருப்பார்கள். " மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். "(யோவா 5:25)

ச்சைல் தேசத்தில் 2010 ஆகஸ்டு மாதம் நடந்த சம்பவத்தில் இந்த வாக்குத்தத்ததிற்குரிய மகிழ்ச்சி ஒரு சிறிதளவில் எடுத்துக்காட்டப்பட்டது. சுரங்க வேலை செய்த 33 பேர் கிட்டதட்ட இரண்டு மாதங்கள் சுரங்கத்தில் சிக்கிக் கொண்டனர். இவர்கள் மரித்து விட்டார்கள் என்று அநேகர் எண்ணிய போது, கொஞ்சம் கொஞ்சமாய் அனைவரும் இந்த உலகம் காணும்படியாக விடுவிக்கப்பட்டனர் உலக அளவிலான பார்வையாளர்கள் ஆச்சரியத்தோடு இவைகளை கண்டு களிக்கூர்ந்தனர். 33 நபர்கள் மீண்டும் ஜீவனோடு வருவதை காண உலகம் முழுவதும் ஆவலாய் இருந்தது. அது போல இந்த உலகத்தில் மரித்த ஒவ்வொரு நபரும் உயிரோடு வருவது எவ்வளவு ஆச்சரியத்தை கொடுக்கக்கூடும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள். துன்பமும் துயரமும் இல்லாத நித்திய வாழ்வை கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஒவ்வொருவரும் பெறுவார்கள். நேசிக்கப்பட்டவர்கள் தங்களுடையவர்களோடு மறுபடியும் சேர்ந்து வாழ்வார்கள். (ஏசா 11:9, வெளி 21:4) லாசரு மரித்து உயிர்ப்பித்தபோது மரணத்தின் மேல் தனக்குள்ள அதிகாரத்தை செயலாற்றி மரித்தோரின் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தினார். இந்த மனுகுலம்தேவனை அறிந்துக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்து வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று இந்த அற்புதம் எடுத்துரைக்கிறது .

"அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.."(யோவ 14:6) தேவன் ஆராதனைக்கு உரியவர். தேவனிடத்தில் ஜெபத்தின் மூலம் தொடர்பு கொள்பவர்கள் அவருக்கு கனத்தையும் மதிப்பையும் கொடுக்க வேண்டும். இதை செய்யும்படி இயேசு நமக்கு இந்த உருவகப் பேச்சின் வழியாக கற்றுக்கொடுத்திருக்கிறார். இயேசுவின் நாட்களில் உள்ள பரிசேயர்களும் சதுசேயர்களும் நியாயப் பிரமாணத்தின் சகல விவரங்களையும் கடைபிடிப்பதன் மூலமாக தேவனுக்கு முன் நிற்க முடியும் என்று நம்பினார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்திற்குள் இருந்த ஆழமான பொருளை அறியாதிருந்தார்கள். நியாயப்பிரமாண எழுத்தின் முக்கியத்துவத்தைக் காட்டிலும் அதற்குள் மறைந்திருக்கும் ஆவிக்குரிய பிரமாணம் அதிக முக்கியமானது என்பதை இயேசு கற்பித்தார். பரிசேயரும் சதுசேயரும் ஆவியின் பிரமாணத்தை மட்டுமல்ல, நியாயபிரமாணத்தையும் கடைபிடிக்க தவறினார்கள். (யாக் 2:10) மேற்கூறப்பட்ட இந்த உருவகச் சொல்

ஆவிக்குரிய நியாயப்பிரமாணத்தை புரிந்துக் கொள்ள வழிவகுத்தது.

ஆதாமின் கீழ்ப்படியாமை மரணத்தீர்ப்பில் முடிவடைந்தது. (ஆதி 2:17) அவருடைய சந்ததியும் இந்தத் தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இது வழிவழியாக பின் தொடர்ந்தது. ஆகவே ஒருவராலும் தேவனோடு ஒப்புரவாக முடியவில்லை. நியாயப்பிரமாணத்தின் வழியாகவும் இது இயலாத காரியமானது. இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக மட்டுமே மனுகுலத்திற்கு விடுதலை கிடைக்க வாய்ப்பு வந்தது. சுவிசேஷ யுகத்தின் நோக்கமானது பாவமான மனுகுலத்திலிருந்து ஆதாமுக்காக ஈடுபலி தந்த இயேசுவை நோக்கிப் பார்த்து தேவனுக்கேற்ற பிரியமான ஒரு ஜீவ பலியை மனப்பூர்வமாய் அர்ப்பணிக்க வேண்டும் என்பதே (மத் 16:24) இயேசுவின் ஈடுபலியின் மேலுள்ள விசுவசத்தினால் அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டு, தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் பாவிகளாய் இருந்த போதிலும், தேவனுக்கு முன் பாவமற்றவர்களாய் எண்ணப்படுகிறார்கள். இயேசு செய்த பலியின் உடன்படிக்கைக்குள் தாங்களும் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். தேவனுடைய சித்தத்தை மரிக்கும் வரையிலும் பின்பற்றுகிறார்கள். இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்கிறவர்கள், இயேசுவை போல தங்களுடைய சொந்த சித்தத்தை பலிசெலுத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார். "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். "(கொலோ 1:24)

இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதின் மூலம் உடன் படிக்கை செய்த அனைத்து விசுவாசிகளும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படுகிறார்கள். அதற்குப்பின் தேவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக ஆவிக்குரிய புத்திரர்களாக தொடர்பு வைத்துக் கொள்கிறார். பிதாவாகிய தேவன் குமாரனாம் இயேசுவின் ஈடுபலியினால், இவர்கள் மாம்சத்தின் அபூரணங்களை மறைத்து விட்டு ஆவிக்குரிய புத்திரர்களாகவும் கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய சிருஷ்டிகளாகவும் அவர்களை நடத்துகிறார். (ஏசா 61: 10, 1கொரி 5:17, 1யோவ 5:18) தேவனுடைய ராஜ்யத்தில் இயேசு உலகத்திற்கு மத்தியஸ்தராக இருந்து, தேவனோடு இசைந்து தெய்வீக வழிநடத்தலின் கீழ் பரிபூரண நிலையை அடைய மனப்பூர்வமாய் விரும்பும் ஒவ்வொரு ஜனத்தையும், தேவனுடைய ஜனமாகக் கொண்டு வந்து சேர்ப்பார். (அப் 4:12)

இயேசுவின் ஈடுபலியின் "வழியாக" மட்டுமே பாவிகளுக்கு இந்நிலை மறுபடியும் கொடுக்கப்பட்டு தேவனோடு மறுபடியும் தொடர்பு கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. இந்த வழியை இப்பொழுது அல்லது வருங்காலத்தில் அறிந்து கொண்டு, அதில் நடப்பதற்கு சரியான போதனையை இயேசுவே "சத்தியமாக" போதிக்கிறார். மரித்த முழு மனுகுலத்தையும் அவருடைய தெய்வீக பலியின் மூலம், அவருடைய ஜீவனின் மூலம் மட்டுமே அனைவருக்கும் ஜீவனை கொடுக்கக் கூடியவராய் இருக்கிறார். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. "(யோவா 15:5)

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியில் மேல் வீட்டு அறையிலிருந்து கெத்சமனே தோட்டத்திற்குப் போகும் வழியில், இந்த உருவகப் பேச்சை பேசினார். லிபனோன் பள்ளத்தாக்கின் திராட்சைத்தோட்டத்தின் வழியாக அவர் சென்ற போது ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள் அவர் மனதில் தோன்றியது. "இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்; என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச்செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி, அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்; அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது. சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு. "(ஏசா 5:1,2, 5:7)

இஸ்ரயேல் தேசத்தை தம்முடைய சொந்த திராட்சைத் தோட்டமாக தேவன் நாட்டினார். மேசியாவின் இராஜ்யத்துக்குரிய ஐசுவரியமுள்ள வாக்குத்தத்தங் களையும் அவைகளின் வழியாக பூமியில் உள்ள முழு குடும்பத்தாரையும் ஆசீர்வதிக்கக்கூடிய பொறுப்புகளை யும் கொடுத்தார். அந்தத் தேசத்தை தீர்க்கதரிசியின் மூலமாகவும் நியாயப்பிரமாணம் மூலமாகவும் வேலியிட்டு காத்து, அந்தப் பரிசுத்தமான ஜாதிக்கு தேவையான சகலத்தையும் செய்தார். கனிக் கொடுக்கும் காலத்தில் அவைகள் கசப்பான திராட்சைப் பழங்களை தந்ததினால் அவர் வருத்தமடைந்தார்.

இஸ்ரயேல் ஜனத்தை ஒவ்வொரு இக்கட்டான சூழ்நிலைகளிலும் அற்புதமாக காத்து வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு வழி நடத்தினார். அந்தத் தேசத்தார் தம்முடைய குமாரனை புறக்கணித்தபோது, எல்லாவிதமான பாதுகாப்பும் நீக்கப்பட்டு அந்தத் தேசம் பாழாக்கப்பட்டது. அப்பொழுது காட்டு மிருகங்களும் புறஜாதியாரும் அந்தத் தேசத்தின் ஜனங்களை பட்சித்து போட்டார்கள். தெய்வீக ஆசீர்வாதத்தைக் கொடுக்கும் மழை அதற்குப் பின் பெய்யவில்லை. அவர்களுக்கு எந்தவிதமான ஆறுதலும் இருக்கவில்லை. புறஜாதி யாரின் காலம் நிறைவடையும் காலம் வரைக்கும் அவர்கள் விடுதலை பெறவில்லை. இயேசுவை பின் பற்றின மீதியிருந்த இஸ்ரயேலருக்கும் அவருடைய அழைப்பை ஏற்ற புறஜாதியாருக்கும், அவர் உண்மையான திரட்சைச்

செடியானார். இந்த இரு வகுப்பினரும் மெய்யான திராட்சைச் செடியோடு இணைக்கப்பட்டார்கள். இணைக்கப்பட்ட இவர்கள் ஆண்டவருடைய ஆவிக்குரிய போதனைகளையும், ஜீவனையும் பெற்று, அதிகதிகமாய் கனிக் கொடுத்தார்கள். (கலா 5 :22,23)

**இயேசு ஜீவனுக்குரிய பொருளைக் குறிப்பிடுகிறார்**

இயேசுவின் கோட்பாடுகளின்படி ஜீவிக்கக் கூடியவர்கள் பரிசுத்தம் அடைவார்கள் (ரோம 6:22) மேலும் மரணம் என்பதற்கான அர்த்தத்தையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் இது தெளிவுபடுத்துகிறது. (பிலி 1:21)அப்போஸ்தலராகிய யோவான்-" அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது."( யோவ 1:4) என்று பதிவு செய்திருக்கிறார்.


இயேசு சொன்ன சகல காரியங்களையும் சீஷர்களால் புரிந்துக்கொள்ள முடியாது என்பதை இயேசு அறிந்திருந்தார். மாம்சத்திற்குரிய மனுஷன் தேவனுடைய ஆழங்களை புரிந்துக் கொள்வது மிக கடினம் என்று அவர் விவரித்ததின் மூலம் மேல் கூறப்பட்டதை உறுதிசெய்தார். (1கொரி 2:14) பெந்தகொஸ்தே நாளின்போது சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்றபின் இயேசு சொன்ன காரியங்களையும், செய்த காரியங்களையும் முழுமையாக புரிந்துக்கொள்ள முடிந்தது. (யோவான் 12:16) உருவக பேச்சுக்கள் உவமைகள் மற்றும் அற்புதங்களின் வழியாக இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சாட்சி அளித்தார். அவர்களுக்கு மட்டுமல்ல, இயேசுவுக்கு பின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சகல சீஷர்களுக்கும் இயேசு இந்தச் சாட்சியைக் கொடுத்தார். ஜீவ பலியாக ஒப்பு கொடுத்து, அவருடைய மகிமையான கிரியைகளில் பங்கு கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையோடு இருக்கும், சுவிசேஷ யுகத்தின் சீஷர்கள் அனைவருக்கும் இயேசுவின் வார்த்தைகளும் கிரியைகளும் அதிகதிகமாய் ஊக்கமளிக்கூடியதாக இருந்தது. (யோவ 2:11) உண்மையில் இயேசுவின் சில எடுத்துக்காட்டுகள் விசேஷித்த விதமாக இந்த யுகத்தின் முடிவில் இருக்கும் நமக்கு இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்தும், இராஜ்யத்தின் ஸ்தாபனத்தை குறிக்கும் விவரங்களைத் தெளிவாக அறிந்துக் கொள்வதற்காக கொடுத்திருக்கிறார்.

இறுதிக் காலத்தில் வெளிப்பட வேண்டிய சத்தியங்களை இயேசு உருவகப் பேச்சின் மூலம் ஒரு உவமைக்குள் மறைத்து வைத்திருப்பதை இப்பொழுது காணலாம். " அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.." (மாற்கு 13:28, 29) யூத தேசம் அத்திரமத்திற்கு உருவகமாக சொல்லப்படுகிறது. (எரேமியா 24:1-10) இயேசுவின் ஊழியக் காலத்தின் இறுதியில் " எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக் கோ மனதில்லாமற் போயிற்று.இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்; கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் கானாதிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக் 13:34,35) என்று கூறினார். ஒரு குறுகிய நேரத்தில் இஸ்ரயேலை அடையாளப் படுத்தும் அத்திமரம் இலையுதிர்ந்து பட்டுப் போயிற்று. இஸ்ரயேல் தேசம் முழுமையாக பாழாக்கப்பட்டதை இது அடையாளப் படுத்தியது. கிபி 1878ம் ஆண்டு வரைக்கும் இஸ்ரயேல் தேசத்தார் அந்நிலையில் இருந்தார்கள். அதற்குப் பின் அவர்கள் துளிர்த்து, தேசமாக ஸ்தாபிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து இயேசுவின் இரண்டாம் வருகை மற்றும் தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருப்பதை நிரூபித்தது. (ஏசா 11:10-12) அத்திமரத்தை சுவிசேஷ யுக முடிவு வரைக்கும் ஒருவராலும் முழுமையாக புரிந்துக் கொள்ள முடியவில்லை.

ஓர் ஓவியனால் அழகாக தீட்டப்பட்ட படங்கள், ஓவியனுடைய நோக்கத்தையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது போல இயேசு பயன்படுத்திய உருவக பேச்சுக்கள் நம்முடைய மனக்கண் முன்பாக தேவனுடைய திட்டங்களை அருமையாக முழுமையான வரை படங்களாக சித்தரிக்கப்படுகிறது. இவைகள் தேவனுடைய திட்டத்தைத் தெளிவாக தெரிவிக்கிறது. துவக்கத்தில் இவைகளை புரிந்துக் கொள்ள முடியாமல் போனாலும் அதற்காக நாம் அதிகமாக முயற்சிக்கும்போது, அவைகளுக்குள் இருக்கிற அர்த்தங்கள் நம்முடைய வாழ்க்கையை மாற்றக் கூடிய அவைகளின் வல்லமையைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. ஆகவே இயேசுவின் உருவக பேச்சுக்களை கவனத்தோடு ஆராய்ந்து, இன்னும் ஆழமான சத்தியங்களைத் தெளிவாக புரிந்துக் கொண்டு, அவருடைய சகல சீஷர்களுக்கும் வாக்களித்த வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளியாகலாம். இறுதியாக இயேசு நம்மை மீன் பிடிப்பவர்களாக அழைக்கிறார். மேலும் இயேசுவின் உருவக சொற்களின் வல்லமையை நாம் பயன்படுத்தி இயேசுவை மிக பெரிய போதகராக, வருங்கால சீஷர்களுக்கு அறிமுகப் படுத்துவோம். இயேசுவின் இவ்வகையான பேச்சுக்கள் அவரிடம் நேரடியாக போதனையைக் கேட்டவர்களுக்கு மட்டுமல்ல சுவிசேஷ யுகத்திலுள்ள முழு சபையாருக்கும், இந்நேரம் வரைக்கும் உள்ள சீஷர்களுக்கும் சொல்லப்பட்டதாகவும் இருக்கிறது. தேவனுக்கே மகிமை உண்டாகக் கடவது !

நம்முடைய சிறந்த மாதிரி

# எடுத்துக்காட்டு மூலம் போதித்தல்



நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். – யோவான் 13:15

**Robert Brand**

பரிபூரண மனுஷனாக வந்த தேவ குமாரனாகிய இயேசு, தான் கொடுத்த எடுத்துக் காட்டுகளின் மூலம் தம்முடைய சீஷர்கள் மேல் மிகுந்த ஒளியை பிரகாசித்தார். துன்பங்கள் வஞ்சனைகள், நன்றியறியாத தன்மைகள் மற்றும் வேலைகள் மத்தியில் ஜீவிக்கக்கூடியவர்கள் உபத்திரவமான பாதையில் நடப்பதற்கு, இந்த எடுத்துக் காட்டுகளினால் வழிகளைப் போதித்தார். மேலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்து காண்பித்தார். செயல்முறை விளக்கங்களைக் கவனிப்பதற்கான சிறந்த போதிக்கும் முறைகளை அவர் பயன்படுத்தினார். இதனால் அவரோடு இருந்த சீஷர்கள் அதிகமாக பயனடைந்தனர்.

பயமும் ஆபத்தும் வரும் என்ற கவலைகள் நம்மை அதிகமாக ஸ்தம்பிக்க வைக்கும் இயல்பான உணர்வுகள், தேவனிடத்தில் இளைப்பாறுவதை தடுத்து விடுகிறது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட உணர்வுகளை தவிர்த்து, தேவனிடத்தில் சேர்வதற்கு வசனங்கள் அதிகதிகமாய் நம்மை ஊக்குவிக்கிறது பல முறைகள் நம்முடைய மாம்சம் செய்ய தகாததை செய்வதற்கு முயலும் போது, நமக்குள் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வசனங்கள் நம்மை வேகமாக தடுத்து நம்மை நல்வழிப் படுத்துகிறது.

கடுமையான புயலின் போது சீஷர்களின் உயிருக்கும் ஆபத்து வரும் என்று எதிர்ப்பார்த்த சூழ்நிலையில், பயங்களையும் ஆர்வங்களையும் நேரடியாக எதிர்நோக்குவதற்கு இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். (மத் 8:23-27) அனுபவம் மிக்க மீன் பிடிப்பவர் தாங்கள் அபாயத்தில் இருப்பதை நன்கு உணர்ந்தார்கள். ஆனால் அவர்களோடு இருந்த இயேசு கவலையற்றவராய் நித்திரை செய்தார். ஒரு வேளை லாசரின் உயிர்த்தெழுதலை மாதிரியாக வைத்து சீஷர்களுக்கு உயிர்த்தெழுதலின் சத்தியத்தைக் கற்பிப்பதற்கான வாய்ப்பை பயன்படுத்தியது போல. இயேசு இந்தச் சூழ்நிலையையும் பயன்படுத்த முயற்சித்திருக்க வேண்டும்.

சீஷர்கள் அவரை துரிதமாய் எழுப்பினார்கள். அப்பொழுது சாத்தானுக்கு நேரடியாக எவ்வாறு பதில் அளிப்பதென்று இயேசு சீஷர்களுக்கு கற்பித்தார் - " அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று." (மத் 8:26) புயலின் மேல் இயேசு செயலாற்றின வல்லமையைச் சீஷர்கள் கண்டு ஆச்சரியப் பட்டார்கள் இப்படிப் பட்ட வல்லமையை அவர்கள் என்றும் கண்டதில்லை.

அவருடைய அற்புதமான வல்லமை வெளிப்பட்ட அந்நாளில், சீஷர்கள் மீட்கப்படுவார்கள் என்று அறிந்த இயேசு நித்திரை செய்தார் என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் தேவன் இயேசுவுக்கு கொடுத்த வல்லமையைப் பரிட்சைப் பார்த்ததில்லை. இயேசு தேவனுடைய பராமரிப்பில் முழு விசுவாசம் வைத்ததினால் அவர் ஆழ்ந்து நித்திரை செய்தார். இந்த் சம்பவத்தினால் சீஷர்களுக்குள் இருந்த குறைந்த விசுவாசத்தைச் சுட்டிக்காட்ட முடிந்தது.

அதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் அநேக கடுமையான புயல்கள் வருவதுண்டு. நாம் தேவனுடைய பாதுகாப்பையும் அரவணைப்பையும் முழுமையாக நம்பி இருந்தால், நம்முடைய கவலைகளும் பயங்களும் எளிதில் மறைந்து விடும். நம்முடைய வாழ்க்கை அமைதியாயிருக்கும் போது நாம் பொறுமையாயிருப்பது இயல்பான காரியம். ஆனால் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்படும் உண்மையான சோதனையின் போது நாம் அமைதியாயிருக்க வேண்டும் என்பதை இயேசு கற்பிக்கிறார். முதிர்ச்சியடைந்த விசுவாசத்தில் இருப்பவர்கள் பயங்களினால் சோதிக்கப்படுவார்கள். "இந்தப் புயல் எவ்வளவு பெரிது என்று தேவனிடம் சொல்லாமல் உங்கள் தேவன் எவ்வளவு பெரியவர் என்று புயலிடம் சொல்லுங்கள்." இந்த ஒரு காரியத்தை தம்முடைய வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று இயேசு சீஷர்களுக்கு கற்பித்தார்.

**எதிர்ப்பு**

சீமோன் என்ற பரிசேயன் வீட்டில் இயேசு ஒரு முறை விருந்து புசித்தார். (லூக் 7:36 -50) சிறப்பான ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுப்பதற்கு அந்த வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தைப் பயன்படுத்தினார். அவர் போஜனம் புசித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு ஸ்திரீ விலையுயர்ந்த தைலத்தை கொண்டு வந்து அவர் பாதத்தில் ஊற்றி. அழுதுகொண்டே தன் தலை மயிரினால் பாதங்களைத் துடைத்தாள்." அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.." (லூ 7:39) என்று சொல்லி பரிசேயர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

சீமோனின் சிந்தனைகளை அறிந்த ஆண்டவர் "இயேசு அவளை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும் என்றார். அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான். அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது.." (லூக் 7:40-41) என்று கூறினார். இயேசு ஒரே சமயத்தில் அந்த ஸ்திரியை பாராட்டி சீமோனை கடுமையாக எச்சரித்தார்." ஆதலால் நான் எனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு

கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்ற சொல்லி "(லூக் 7:47) என்ற பாடத்தைக் கற்பித்தார்.

இந்தச் சம்பவத்திலிருந்து இன்னும் அநேக பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். அந்த ஸ்திரியின் வாழ்க்கையைக் குறித்து அநேகமாக அறிந்து கொள்ளாவிட்டாலும் அவளுடைய மனத்தாழ்மையையும், தாராள குணத்தையும் உண்மையையும் குறித்து நாம் பாராட்டலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு அவளுடைய குற்றம் உணர்ந்த இருதயத்தை அறிந்தார். நாமும் ஆண்டவரின் மாதிரியைப் பின் பற்றக் கூடியவர்களாய், ஒருவருடைய மேல்தோற்றத்தைப் பாராமல், கூடுமான வரைக்கும் அவர்களுடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்து கொள்ளக் வேண்டும். நாம் ஒவ்வொருவருடைய அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க, நாம் பிறரை எளிதில் மன்னித்து, இயேசு வைத்துப் போன முன் மாதிரியை பின்பற்றி இயேசுவின் சீஷர்களை அதிகதிமாய் நேசிக்கவேண்டும்.

**வஞ்சகர்களுக்கு நாம் எவ்வாறு பதிலளிப்பது?**

இயேசுவின் வார்த்தைகளினால் இயேசுவை பிடிக்க வேண்டும் என்று தங்களுக்குள் திட்டமிட்ட பரிசேயர்களை இயேசு எதிர் நோக்கின விதத்தை குறித்து லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தில் விவரிக்கிறார். " இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்.." (லூக் 20:22) அவரை சோதிக்கும் படியாக இக்கேள்வியைக் கேட்டார்கள், என்பதை இயேசு அறிந்திருந்தார். நேரடியாக அவர்களை கண்டிப்பதற்குப் பதிலாக, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மற்றொரு போதிக்கும் நுட்பத்தைச் செயல்படுத்தினார்."ஒரு பணத்தை எனக்குக் காண்பியுங்கள். இதிலிருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள்: இராயனுடையது என்றார்கள்.அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.;" (லூக் 20:24,25) சிறந்த வாக்கு வல்லமையோடு கேட்கப்பட்ட கேள்வியை ஓர் அருமையான சத்தியத்தைச் சொல்லி முறியடித்தார். சீஷரானாலும் சரி, எதிரியானாலும் சரி இயேசு நேர்மையோடு சத்தியங்களைக் கூறினார். ஒவ்வொரு முறையும் வாக்கு வாதங்களை நித்திய ஜீவனுக்குரிய சத்தியங்களைக் கொண்டு ஜெயிக்கலாம் என்று இயேசு நமக்குக் கற்பித்தார்.

"சீஷருக்குரியதை சீஷருக்கும்" என்ற பகுதியை நாம் முக்கியத்துவம் படுத்தலாம் ஆனால் இயேசு அந்த வசனத்தின் இரண்டாவது பகுதியை சற்று எச்சரிப்புடன் கூறுகிறார். கைத்தேர்ந்த பரிசேயர்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்யவில்லை. அவர்கள் கேட்ட கேள்விகள் மூலம் இந்தப் பரிசேயர்களின் உண்மையான நிலையை அனைவரது கவனத்திற்கும் திருப்பினார். அவர்கள் அவருக்கு எதிர்ப் பேச்சு பேச முடியவில்லை. (லூ 20:26) இயேசுவை எதிர்த்தவர்களின் இருதயத்திலும், அவருடைய சத்திய வார்த்தைகள் கிரியை செய்யக்கூடிய வல்லமை உண்டு என்பதை இயேசு தம் சீஷர்களுக்குக் காட்டினார்.

நம்முடைய ஆண்டவரின் போதக முறைகளையும், மிதமான அவர் கண்டித்த விதத்தையும் நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். மத போதகர்களினால் கேட்ட கேள்விக்குப் பதிலாக இயேசு அவர்களை அடித்து விரட்டியிருக்கக்கூடும். ஆனால் இப்படிப்பட்ட செயல் தேவனுடைய நீதியை நடப்பிப்பதற்கு சாதகமாய் இருக்க வாய்ப்பில்லை. இயேசுவின் வார்த்தைகளின் மூலம் ஏதோ ஒரு பரிசேயனானாலும் மனந்திரும்பி இருக்கக்கூடும். நிக்கோதேமைப் போல ஒரு சிலர் இயேசு பேசின சத்தியங்களை உணர்ந்திருக்கக்கூடும். "தேவனுக் குரியதை தேவனுக்கும்" என்ற வார்த்தைகள் தாகமுள்ள இருதயங்களுக்கு நிச்சயமான ஒரு தூண்டுகோலாய் இருக்கும்போது, நேரடியாகவும் தைரியமாகவும் தேவனுடைய சத்தியத்தைப் பேசுவதற்கு, சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் இன்னும் மென்மையாக நடந்து கொள்வதற்கு இயேசு நமக்கு கற்பிக்கிறார். தேவனுடைய சத்தியத்தை நேரடியாகவும் தைரியத்தோடும் பேசுகையில் நம்மை எதிர்க்கும் சிந்தையோடு இருப்பவர்கள், வாய் அடைப்பட்டு போவார்கள். நம்முடைய மென்மையான பதில்கள் மற்றவர்களின் இருதயத்திற்குள் நுழைந்து, அவர்களை சிந்திக்க வைக்கும். நல்ல மனநிலை உள்ளவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் நம்மை எதிர்க்கும் நேரத்தில் நம்முடைய கனிவான பேச்சுக்கள் அவர்களை எளிதில் மாற்றும்.

**நன்றி இல்லாமை**

பத்து குஷ்டரோகிகளுக்கு நம்முடைய ஆண்டவர் காட்டின இரக்கம் இதற்கு மாதிரியாய் உள்ளது. "அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.. அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?." (லூ 17:12-19 )

குஷ்டரோகிகள் தங்களை காண்பிக்கும்படி ஆசாரியர்களிடம் நடந்து செல்கையில் அவர்கள் குணமடைந்திருக்க வேண்டும். ஆயினும் அற்புதமாக சுகம் பெற்றவர்களில் ஒருவர் மட்டுமே, இயேசுவுக்கு நன்றிகளை ஏறெடுக்க திரும்பி வந்தார். அவர் ஒரு சமாரியனாய் இருந்தார். ஆகையால் அவரை ஓர் அந்நியராகவும், தேவனுடைய காணியாட்சிக்கு புறம்பானவராகவும் எண்ணினார்கள்.

நன்றியில்லாத இஸ்ரயேல் ஜனங்களை, கடுமையாக கண்டிப்பதற்கு இயேசு இந்த சரியான சந்தர்ப்பத்தை பயன்படுத்தினார். இதற்கான மாதிரியை நாம் காணும் போது இப்படி நன்றியில்லாதவர்கள் ஏன் குணமாக்கப்பட்டார்கள் என்று நாம் எண்ணலாம். ஆயினும் நம்முடைய இரட்சகர் இப்படிப்பட்ட பல சூழ்நிலைகளை, உபதேசிப்பதற்கான வாய்ப்புகளாக பயன்படுத்தினார்.

"நீங்கள் பத்து பேர் சொஸ்தமடைய வில்லையா ? மற்ற ஒன்பது பேர் எங்கே ?" இந்த இரண்டு கேள்விகளும் மிக வல்லமையுள்ளதாயிருந்தது. அந்த மனுஷன் பதிலளிக்க முடியாத ஒரு கேள்வியை இயேசு கேட்டார். ஒரு வேளை சொஸ்தமடைந்த ஒன்பது யூதர்களையும் ஆண்டவர் கேட்ட கேள்வியை நியாயமான முறையில் மிக மென்மையாக அந்தச் சமாரியன் கேட்டிருந்தால், நிச்சயமாக அவர்களின் இருதயம் குத்தப்பட்டு உணர்வடைந்து இருப்பார்கள். ஆனால் அதே நேரத்தில் கொடூரமாகவும் கடுமையாகவும் அவர் கேட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் மனந்திரும்ப வாய்ப்பில்லை. ஆகவே நல்ல முறையில் ஆலோசனைக் கொடுத்து எச்சரித்தால் மட்டுமே நன்மையான மாற்றங்களை ஊக்குவிக்க முடியும். பொதுவாக இயேசு இப்படிப்பட்ட முறைகளை அடிக்கடி பயன்படுத்தி ஜனங்களின் வாழ்க்கையை தன் வசமாய் ஊழியத்திற்குத் திருப்பினார்.

போதிப்பதைக் காட்டிலும், யோவ 13 - ம் அதிகாரத்தில் இயேசு சீஷர்களின் கால்களை கழுவின மாதிரியின் வழியாக போதிக்கப்படுவதே விசேஷித்த முறை என்று செய்து காட்டினார். அவருடைய விலையேறப் பெற்ற சீஷர்களை விட்டு பிரிந்து செல்வதற்கு முன் அவருடைய கடைசி போஜனத்துக்கு முன் சீஷர்களின் கால்களை கழுவினார். பேதுரு நேரடியாகவே அதை தடைசெய்தார். (யோவ 13:8) ஆனால் பேதுரு உடனடியாக அங்கு சொல்லப்பட்ட பாடத்தைக் கற்றுக் கொண்டு இயேசுவுக்கு தன்னை உடனடியாக ஒப்புவித்தார். "அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவ வேண்டும் என்றான். " (யோவ 13:9)

அதற்குப்பின் ஆண்டவராம் இயேசு அந்த பாடத்தைகொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். " (யோவ 13:12-17)

இயேசு மிக தாழ்மையாக, நம்முடைய பாதங்களை கழுவினால், நம்முடைய உணர்வுகள் எப்படிப்பட்டதாக இருக்கும். நம்முடைய இருதயம் அதை ஏற்றுக்கொள்ள எவ்வளவு கஷ்டப்படும். மேல் வீட்டில் சீஷர்கள் சம்பாஷித்து கொண்டிருந்ததை இயேசு அறிந்து, அவர்கள் ஒருவருக்கொருவர் தாழ்மைப்பட வேண்டும் என்பதை கற்று கொடுப்பதற்கு, இப்படிப்பட்ட மாதிரியை செய்துக் காட்டினார். இயேசு செய்த மாதிரியின்படி நாமும் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் கால்களை கழுவுவது அந்நாட்களின் பாரம்பரியத்தை காட்டுவதாக இருந்தாலும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் ஒருவரை ஒருவர் மனத்தாழ்மையோடு தாங்க வேண்டும், என்பதை இயேசு நமக்கு மாதிரியாக செய்து காண்பித்தார்.

உண்மையில், நம்முடைய சகோதரர்களின் சார்பாக செய்யக்கூடிய ஊழியத்திற்கு இந்தக் கால் கழுவுதலின் எடுத்துக்காட்டு ஓர் அற்புதமான மாதிரியாக உள்ளது. "அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்"(மத் 25:40) என்ற நித்திய ஜீவனுக்குரிய சத்தியத்தை இந்த எடுத்துக்காட்டு நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் அனைவரோடும் சமாதானமாய் இருக்க முயற்சிக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவ அடிப்படை கோட்பாடாகும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். "(கலா 6:10)

நம்முடைய ஆண்டவரோடு நடந்த சீஷர்களிடம், அவர் போதித்த அவருடைய வல்லமையான போதிக்கும் மாதிரிகளை நாம் உணரக் கூடியவர்களாய் இருக்கிறோம். இயேசுவை பற்றி வாசித்து, அவைகளை சிந்தித்துக் கொண்டிருக்கையில், இயேசு பயன்படுத்தின போதிக்கும் நுட்பங்களின் ஆழமான காரியங்களை அதிகதிகமாய் உணர்ந்து நம்முடைய ஊழியத்திலும் பயன்படுத்தலாம். இயேசுவைப் போல நாமும் உபதேசிக்கக்கூடியவைகளை, கிரியைகளில் காட்ட வேண்டும். நாம் இந்த உலகத்திற்கு ஒளியாயிருக்கிறோம். இக்காலத்தில் நாம் வீசக் கூடிய ஒளியே பிரகாசமுள்ளதாயும் பரிசுத்தமுள்ளதாயும் நம்மை சுற்றியுள்ளவர்களுக்கு காணப்படவேண்டும். தவறுகளை திருத்த, நித்திய ஜீவனுக்குரிய சத்தியங்களை நாம் பேசுகிறோமா ? நன்றியற்றவர்களை காணும்போதும் நமக்குள் இருக்கும் பூரண அன்போடு அவர்களிடம் பேசுகிறோமா ? பலவீனரும் எளிமையும் உள்ள தேவ ஜனங்களின் தேவைகளுக்கு நாம் கவனம் செலுத்துகிறோமா ? நீதி மற்றும் போதனைகளில் உள்ள வல்லமையுள்ள பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு இயேசு பயன்படுத்தின வல்லமையான முறை இந்த மாதிரிகளாக இருக்கக்கூடும். நாமும் இப்படிப்பட்ட மாதிரியை பின்பற்றுவோமாக. ஆமென்

**வேத மாணவர்கள்**
**சங்கிலியாண்டபுரம், திருச்சி.**
**Cell : 9244611241, 9688975724**